www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

ஜூன் - 2001
ம.க.இ.க மாத இதழ்
ரூ 5.00



காணாமல் போகும் பெண் குழந்தைகள்



# பொற்காலம் பணப்புழக்கம்

படிப்பகம்

www.padippakam.com

## வாசகர் கடிதம்

✱ 'மரணத்திற்குப் பின்னும் வாழும் மனிதர்கள்' - ஜோதியின் கடிதம் கண்களைக் குளமாக்கிட மட்டுமா செய்கிறது? ஊசலாட்டப் பேர்வழிகள், சொல் ஒன்று செயல் வேறு எனத் திரியும் சந்தர்ப்பவாதிகள், விடயங்களைத் தெரிந்திருந்தும் கோழைகளாய் முடங்கிடும் சுயநலவாதிகள் அனைவருக்கும் சாட்டையடியல்லவா கொடுத்திருக்கிறார் ஜோதி. புரட்சிகர இயக்கப் பற்றாளர்கள் அனைவருக்கும் புது ரத்தத்தையும் பாய்ச்சியிருக்கிறார்.

சிவகங்கை மாவட்டம் வேம்பத்தூர் அருகிலுள்ள இந்திராநகர் தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருப்பில் சில நாட்களுக்கு முன்பு நடைபெற்ற சம்பவத்தை அப்படியே வார்ப்பு செய்தது போல் அமைந்து விட்டது 'எது நீதி?' என்ற சிறுகதை.

**– எழில்மாறன்,**
**சிவகங்கை.**

✱ 'பின்னால் ஒரு குரல்' கதை போல நீதியான தீர்ப்பு வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுவது ஒரு சில ஊர்களில் நடப்பதுதான். இதற்கு மதவேறுபாடு இல்லை. பொருளாதாரப் பின்புலத்தை வைத்தும் அது நிர்ணயிக்கப்படுகிறது. நீதிமிக்க ஆட்சி நடத்திய நபிகளார் (ஸல்), உமர் வழிவந்தவர்கள் இப்படிச் செய்கிறார்கள் எனவும் கூறிவிட இயலாது. மார்க்க அறிஞர்களாகத் தன்னைக் கருதிக் கொள்பவர்கள் இஸ்லாத்தின் சரியான தீர்வுகளைக் கண்டு கொள்ளாமல் இருக்கின்றனர் அல்லது மறைக்கின்றனர். 'என் சட்டங்களை மதித்து நடக்காதவர்களுக்கு நெருக்கடிமிக்க வாழ்க்கை' இருப்பதாக அல்லாஹ் கூறுகிறார். ஒற்றுமையின்மையும், அரசியல் மற்றும் முதலாளித்துவ சூழலும் இருக்கும் வரை அந்த நெருக்கடி முசுலீம்களுக்கு நீடிக்கவே செய்யும்.

**– முஹம்மது இல்யாஸ்,**
**திருவிடை மருதூர்.**

✱ கோக் - பெப்சி அட்டைப் படமே வாசகர்கள் கட்டுரையைப் படிக்கத் தூண்டும் வண்ணம் அமைந்துள்ளது. கோக்-பெப்சியின் லாபவெறியும் இந்திய நிறுவனங்களை நசுக்குகின்ற தன்மையும் புள்ளி விபரங்களுடன் விளக்கப்பட்டிருக்கிறது. பன்னாட்டு நிறுவனங்களின் பொருட்கள் கிராமங்கள் வரை விநியோகத்திற்கு வந்து விட்ட நிலையில் 'புதிய கலாச்சாரம்' வாசகர்களைத் தொடர்ந்து படிக்கத் தூண்டும்.

**– மகாலிங்கம்,**
**உசிலம்பட்டி.**

✱ கோவை பிரச்சார இயக்கத்தில் நான் கலந்து கொள்ள முடியாமல் போனது எனக்கு கவலையாக உள்ளது. பரீட்சை முடிந்திருந்தால் நானும் கலந்து கொண்டிருப்பேன்.

**– சம்புகன், சென்னை.**




✱ 'பிள்ளை வளர்ப்பு ஒரு குடும்ப வன்முறை' என்ற கட்டுரை சிறப்பாக இருக்கிறது. அதே இதழில் மறுகாலனியாதிக்க எதிர்ப்பு மாநாட்டில் இளம் தோழர்கள் செய்த வேலைகளைக் குறிப்பிட்டு இருந்தீர்கள். அவர்கள் நேரடியாக அமைப்பில் சேர்ந்தவர்கள் இல்லை. அமைப்புத் தோழர்களின் குழந்தைகள். யாராய் இருந்தாலும் இப்படி குழந்தைகளை வற்புறுத்தி இழுப்பது முன்னர் சொன்ன கட்டுரையை வலுவிழக்கச் செய்கிறது.

**–அ.து. பிரான்சிஸ், தாம்பரம்.**

**குறிப்பு:** வற்புறுத்தி இழுக்கப்பட்ட குழந்தைகளிடம் இத்தகைய செயலூக்கத்தை எதிர்பார்க்க முடியுமா என்று வாசகர் சிந்திக்க வேண்டும். குடும்ப உறுப்பினர்களைப் புரட்சிகர அரசியல், பண்பாட்டுக்கு ''வற்புறுத்தலாமா, கூடாதா'' என்பது பற்றி பிறிதொரு சந்தர்ப்பத்தில் எழுதுவோம்.

**– ஆசிரியர் குழு.**

✱ சண்டித்தனம் செய்யும் குழந்தைகளை மணிக்கணக்கில் உபதேசம் செய்து இறுதியில் இரண்டு அறை விடுவார்களே அதைப் போல இருந்தது பெப்சி-கோக் கட்டுரையின் தொடக்கமும் முடிவும். உங்கள் 'அறை'ப் பணி தொடர வாழ்த்துக்கள்.

– பி. தர்மராஜ்,
திருச்சி.

✱ உண்மையாகவே கண்ணையும் கருத்தையும் கவரும் அட்டைப்படம். நவீன தொழில்நுட்பங்களும், அதன் பிரம்மாண்டங்களும் சமூக மாறுதலுக்கான மிகப் பெரும் தடைதான் என்ற பூச்சாண்டிக்கு எதிராக அதையும் கை வைத்துப் பார்க்கும் இந்தத் துணிச்சல் நமக்கு அவசியம் தேவையான ஒன்று.

தீக்கொழுந்தும் மானிடப் பரப்பின் டிஜிடல் ஸ்டீரியோவும், புதிய கலாச்சாரத்தின் அட்டையும் - அதற்குப் பின்னே, பன்னாட்டு நிறுவனங்கள் சூறையாடும் தேயிலைத் தொழிலாளர் வாழ்வும், மொழியும் ஒலியும் தூண்டும் போர்க் குணமும், தெருச் சண்டையில் இறங்கத் தயார்படுத்தும் புகைப்படங்களும் - வக்கத்துப் போன போலிக் கம்யூனிஸ்டுகளின் போலிப் பத்திரிகைகளுக்கு எதிராக - மார்க்சிய அலர்ஜி கொண்ட சிற்றிதழ் கூட்டங்களுக்கு எதிராக - சவத்தாளம் போடும் போலி முற்போக்குப் பாடல்களுக்கு எதிராக - அரிப்பெடுத்துத் திரியும் தமிழ் சினிமா வியாதிக்காரப் பாடல்களுக்கு எதிராக - படம் காட்டி மழுங்கடிக்கும் சினிமாவிற்கும் அதன் மொழிக்கும் எதிராக - வாக்கு மூலம் கொடுத்து அம்பலப்படும் அரசியல் வியாபாரிகளுக்கு எதிராக - அச்சு, இசை, திரை ஆயுதமாக மாற்றித் தரும் இந்தப் போர் வென்றே தீரும்.

**– குருசாமி மயில்வாகனன்,**
**சிவகங்கை.**

✱ 'மானம் கெட்டவர்களின் பானம்' கட்டுரையில் பெப்சி - கோக் காசு கொடுத்துக் குடிப்பது தாயைக் கூட்டிக் கொடுப்பதை விடக் கேவலமானது என்ற வரியில் 'காசு கொடுத்து' என்ற பதம் தவிர்க்கப்பட வேண்டும் எனக் கருதுகிறேன். இல்லையென்றால் இலவசமாக, விருந்துகளில், நண்பர்கள் வாங்கிக் கொடுத்தால் குடிக்கலாம் என நடுத்தர வர்க்கத்தின் இரட்டைத் தன்மையான வாழ்க்கை நியாயம் பொருள் கொண்டு விடும்.

– பகத்சிங்,
கோயம்புத்தூர்.



படிப்பகம்

www.padippakam.com


கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• புதிய கலாச்சாரம்

• மக்கள் கலை இலக்கியக்
கழக மாத இதழ்

• போர்: 19
• குரல்: 1
• ஜூன் - 2001

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 9



மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam
@hotmail.com

சந்தா,
படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்:

இரா. சீனிவாசன்,
18, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


# சந்தை சோசலிசம் சந்தை ஆன்மீகம்

ஆன்மீக - கலாச்சார சுற்றுப் பயணத்துக்காக சீனா வருமாறு காஞ்சி காமகோடி மடாதி
பதி ஜெயேந்திர சரசுவதிக்கு அழைப்பு வந்துள்ளது. அவரோடு சேர்த்து 15 பேர் கொண்ட
குழு அக்டோபர் மாதம் ஒரு வார பயணம் மேற்கொள்ள இருக்கிறது. காஞ்சி சங்கராச்சாரி
சீனா செல்வதால் அவருடைய ஆசார, அனுஷ்டானங்களுக்கு பங்கம் ஏற்பட்டு விடுமோ
என்று பார்ப்பன பக்தர்கள் அஞ்சுவது போல பாசாங்கு செய்கிறார்கள். இந்தச் சந்தேகத்தை
எடுத்துக் கொண்டு காஞ்சி மடத்துக்குப் போய் அவர்கள் விளக்கம் கேட்கவில்லை. போலிக்
கம்யூனிஸ்டு தலைவர்களிடம் போகிறார்கள். அவர்களோ "தண்டத்தைத் தூக்கி எறிந்து
விட்டு தலைக்காவிரிக்கு ஓடிப் போன இந்த சங்கராச்சாரிக்கு ஆசாரம், அனுஷ்டானங்கள்
என்ன வேண்டியிருக்கிறது. அவரே ஆச்சாரங்களை மீறித்தானே காரிலும், விமானத்திலும்
சுற்றுகிறார், கடல்கடந்து போகிறார், ஐந்து நட்சத்திர சுகங்களை அனுபவிக்கிறார். மதவிவ
காரங்களோடு நிறுத்திக் கொள்ளாமல் அரசியலிலும் தலையிடுகிறார். தரகு வேலை
பார்க்கிறார். கல்வி, மருத்துவம் என்று வியாபாரம் செய்கிறார்" என்று கேட்கவில்லை.
அதற்கு மாறாக, பார்ப்பன பக்தர்களின் அச்சம் - சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் திருப்ப
ணியில் இறங்கி, தொண்டருக்கும் தொண்டராகி உருகுகின்றனர்.

"சைனா பயணத்தின் போது சங்கராச்சாரியாரின் ஆசார, அனுஷ்டானங்களில் ஒரு
குறையும் ஏற்படாதவாறு கவனமாகத் திட்டமிட்டு, சிறப்பாக அனைத்து ஏற்பாடுகளையும்
உதவிகளையும் சைனா செய்து தரும் என்பதில் சந்தேகமே இல்லை" என்கிறார் பார்ப்பன
பாதந்தாங்கி சி.பி.எம். மாநிலச் செயலாளர் சங்கரய்யா. "சைனா பழைமையான கலாச்சாரப்
பின்னணி கொண்ட நாடு. அங்கே கம்யூனிச அரசாங்கம் ஆட்சியில் இருந்தாலும் கூட, சீனக்
கலாச்சாரம் பேணிக் காக்கப்பட்டு வருகிறது. ஆகவே, ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின்
சீனப் பயணம் வெற்றிகரமாக அமையும் என்று உறுதியாகச் சொல்ல முடியும்" என்று வேறு
நம்பிக்கையூட்டுகிறார்.

சங்கரய்யாவின் கருத்துக்கு சாட்சியாக வந்துள்ள தகவல்களைக் கேட்டு பார்ப்பன
பக்தர்கள் ஆறுதலடைகின்றனர். அதாவது சங்கராச்சாரியோடு அரிசி, பருப்பு முதலிய
தேவையான பொருட்களோடு காஞ்சி மட சமையல்காரர்களும் போகிறார்கள். உணவு மட்டு
மல்ல அங்கே சீன மக்கள் பயன்படுத்தும் தண்ணீர்கூட வேண்டாமென நேரடியாக நிலத்தில்
துளைபோட்டு, தனிக் குழாய் மூலம் நீர் இறைத்துப் பயன்படுத்தப் போகிறார். இவையெல்
லாம் "ஆசார - அனுஷ்டானம்" என்று சொல்லிக் கொண்டு, சாதிய - வர்ணாசிரம பார்ப்பன
சனாதன தர்மப்படி தீண்டாமை பாராட்டுவதுதான் என்பது இங்குள்ள போலிக் கம்யூனிஸ்
டுகளுக்கு நன்றாகவே தெரியும். "மதங்களுக்கும், கம்யூனிச கொள்கைகளுக்கும் அப்பாற்
பட்டு பற்பல பணிகளை சைனா அரசாங்கம் செய்வது வழக்கம்தான். அந்த அடிப்படையில்,
சில வருடங்களுக்கு முன்பு தமிழ்நாட்டிலிருந்து, குன்றக்குடி அடிகளார் சைனா சென்று
வந்தார். சமூக நலப் பணிகளில் ஈடுபாடு கொண்ட காஞ்சி சங்கராச்சாரியாரை அழைத்திருப்
பது பொருத்தம்தான்" என்று கூறி சங்கரய்யாவுக்கு வழிமொழிகிறார், சி.பி.(ஐ)யின் நல்லக்
கண்ணு. சங்கராச்சாரியின் சமூகநலப் பணிகள், இதேபோல மதங்களுக்கும் கம்யூனிசக்
கொள்கைகளுக்கும் அப்பாற்பட்டு சீன அரசாங்கம் மேற்கொள்ளும் பற்பல பணிகள் என்ன
வென்று நல்லக்கண்ணு கூறுவாரா?

இதுவரை சீனாவிடம் பகைமை பாராட்டி வந்த இந்தப் போலிக் கம்யூனிஸ்டுகள்
இப்பொழுது சோசலிச முன்னோடியெனக் கொண்டாடுகின்றனர். அந்நாடு என்னசெய்
தாலும், முன்பு சோவியத் ஒன்றியத்திடம் நடந்து கொண்டதைப் போல கண்ணை மூடிக்
கொண்டு ஆதரிக்கின்றனர். முன்பு மாவோயிச வறட்டுத்தனத்தில் மூழ்கிப் போயிருந்த சீனம்
அதிலிருந்து மீண்டு இப்போதுதான் சரியான சோசலிசப் பாதையில் முன்னேறுவதாக
போலிக் கம்யூனிஸ் டுகள் சொல்லுகிறார்கள். ஆனால் சீனா எந்தப் பாதையில் செல்லுகிறது
என்பதற்கு புரட்சிப் போராளிகளின் வருகைக்குத் தடைவிதித்து, சங்கராச்சாரி முதல் ஆபாச
- சீரழிவு மைக்கேல் ஜாக்சன்வரையிலானவர்களை அழைத்து மகிழ்விப்பதே சாட்சியமாகும்.ண்

இதை சந்தை சோசலிசப் பாதை என்று சீனா உட்பட உலகிலுள்ள அனைத்து போலிக் கம்
யூனிஸ்டுகளும் கூறிக் கொள்கிறார்கள். தற்போது உலக மேலாதிக்க சக்திகளால் புகுத்தப்பட்டு
வரும் தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்ற கொள்கைகளை போலிக் கம்யூனிஸ்டு
கள் ஆளும் நாடுகளில் அமலாக்கப்படும் முறையைத் தான் சந்தை சோசலிசம் என்கிறார்கள்.
சமூக விரோத கிரிமினல் குற்றக் கும்பல்களின் பொருளாதார ஆதிக்கம், களியாட்ட - சூதாட்ட
விடுதிகள், கொலை - கொள்ளை - கற்பழிப்பு - போதை மருந்து, பெண்ணடிமைத்தனம் -
விபச்சாரம், நுகர்வுவெறி - அமெரிக்க மோகம் - இப்படி ஒரு முதலாளித்துவ - ஏகாதிபத்தி
ய சமூதாயத்தின் சீரழிவுகள் என்று போலிக் கம்யூனிஸ்டுகளே சித்தரிக்கின்றவைகள்தான் சந்
தை சோசலிசத்தின் இலட்சணங்கள். இந்த உண்மைகள் சீனப் பெருஞ்சுவரையும் தாண்டி எதி
ரொலித்த போதும் போலிக் கம்யூனிஸ்டுகள் கண்ணை மூடிக் கொண்டு ஆதரிக்கின்றனர்.
சங்கராச்சாரியின் ஆன்மீகம் போலியானது; அதன்பின் ஒளிந்து கொண்டிருப்பது பார்ப்பன
சனாதன தருமம், அப்படித்தான் சீனத்தின் சோசலிசமும் போலியானது. எனவேதான் இவர்
கள் அனைவரும் பண்பாட்டுப் பரிமாற்றம், நாடுகளுக்கிடையே நட்புறவு என்கிற பெயரில்
கைகோர்த்துக் கொள்ளுகிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com

# பொற்காலம் பணப்புழக்கம்

விமரிசனத்துக்கு அப்பாற்பட்ட விக்கிரகங்கள் என்ற தகுதி அளிக்கப்பட்டிருக்கும் காமராஜ், அண்ணா, எம்.ஜி.யார் ஆகியோரது பட்டியலில் தானும் சேர்ந்து விட வேண்டும் என்று தமது கடைசிக் காலத்தில் பெரிதும் விரும்பினார் கருணாநிதி.

முந்தைய ஜெயலலிதா ஆட்சியை ஒப்பிடுகையில் கருணாநிதி அளித்த 'சட்டத்தின் ஆட்சி', பாரதீய ஜனதாவுடனான கூட்டணி, புதிய பொருளாதாரக் கொள்கையை அமல்படுத்துவதில் அவர் காட்டிய தீவிரம், மஞ்சள் துண்டு மகிமை போன்ற பல்வேறு கோணங்களிலும் பரிசீலித்து, கருணாநிதி பரிபக்குவ நிலையை எய்திவிட்டதாகப் பார்ப்பனப் பத்திரிகைகளும் எழுதத் தொடங்கின. ஜெயலலிதாவின் மீதான ஊழல் வழக்குகளை விசாரிப்பதில் கருணாநிதி காட்டிய தீவிரம் அவர்களுக்குக் கொஞ்சம் உறுத்தலை ஏற்படுத்திய போதிலும், பிரம்மரிஷிப் பட்டத்தை அருள்வதற்கு வசிட்டர்கள் தயாராகத்தான் இருந்தனர்.

இருந்தும் என்ன செய்வது? தானே அறிவித்துக் கொண்ட கடைசிச் சுற்றில் ஒரு சாகசக்காரியிடம் அவர் தோல்வியடைய வேண்டியதாகி விட்டது.

தோற்றுப் போனது சோசலிச ஆட்சி



யொன்றுமல்ல, தி.மு.க. ஆட்சிதான். ஆளும் கட்சி தோற்று எதிர்க்கட்சி வெற்றி பெறுவது இந்திய அரசியலில் நடவாத விசயமல்ல; ''கழுதை விட்டையில் முன்விட்டையென்ன பின்விட்டையென்ன'' என்று சமாதானம் கொள்ளலாம். ஆனால் ஓட்டுச் சீட்டு அரசியல் மோசடியைப் புரிந்து கொள்ள இவ்வணுகுமுறை பயன்படாது. புரிந்து கொள்ள முடியாத ஒரு எதிரியை முறியடிக்கவும் முடியாது.

ஐந்து ஆண்டுகள் தம்மைச் சூறையாடிய கொள்ளைக் கூட்டத்தின் கையிலேயே கஜானா சாவியை மக்கள் ஒப்படைத்திருக்கிறார்களே இந்த 'அதிசயம்' எப்படி நிகழ்ந்தது என்பதை விளங்கிக் கொள்வது தி.மு.க.வைக் காட்டிலும் நமக்கு மிகவும் முக்கியமானது.

''ஊழலுக்குத் தரப்பட்ட தண்டனையைப் பார்த்து மக்கள் அனுதாபப்பட்டிருக்கிறார்கள்'' என்கிறார் கருணாநிதி. ''தேர்தல் முடிவுகள் எதிர்பாராதவை மட்டுமல்ல வியப்புக்குரியவை'' என்கிறது தினமணி தலையங்கம்.

தேர்தல் முடிவுகள் குறித்த அதிர்ச்சியும் ஆச்சரியமும் பத்திரிகைகள் மற்றும் அறிஞர்களால் எந்த அளவுக்கு வெளியிடப்படுகிறதோ, அந்த அளவிற்கு அதுவே புரட்சித் தலைவியின் தீர்க்க தரிசனமாக மாறி விடுகிறது. மக்கள் தீர்ப்பையும் இறுதி வெற்றியையும் முன்னறிந்து தன்னந் தனியாகக் களத்தில் நின்று போராடிய வீராங்கனையின் தகுதி ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்டு விடுகிறது.

ஊழல் வழக்குகளிலிருந்து தப்பிப்பதற்கான ஜீவமரணப் போராட்டத்தின் இறுதிச் சுற்றில் த.மா.கா., காங்கிரசு., பா.ம.க. மற்றும் போலி கம்யூனிஸ்டுகளுடன் அவர் ஏற்படுத்திக் கொண்ட கூட்டணி, ஜெயலலிதாவை மாபெரும் ராஜதந்திரியாகவும் ஆக்கி விடுகிறது. இவ்வாறாக, எதிர்த்தரப்பினரின் அறியாமை ஜெயலலிதாவை அறிவுக் கூர்மை மிக்க வீராங்கனையாக்குவதில் வந்து முடிகிறது.

ஜெயலலிதாவின் ஆதரவாளர்கள் கருணாநிதியின் தோல்விக்கான காரணங்களைப் பட்டியலிடும்போதோ அது ஜெயலலிதாவைப் பெருமைப்படுத்துவதற்குப் பதிலாகச் 'சிறுமைப்படுத்துகிறது.'

பெரியார், அண்ணாவின் கொள்கைகளைக் கைவிட்டு மதவெறி பா.ஜ.க.வுடனும், சாதிக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்ததுதான் தி.மு.க.வின் தோல்விக்குக் காரணம் என்கிறார் வீரமணி; காட் ஒப்பந்தத்தின் அடிப்படையிலான தி.மு.க.வின் பொருளாதாரக் கொள்கைகள் மக்களுக்கு ஏற்படுத்திய பாதிப்புகள்தான் காரணம் என்கிறார்கள் போலி கம்யூனிஸ்டுகள்; கருணாநிதியின் மக்கள் விரோத ஆட்சி, குடும்ப ஆட்சியின் மீது மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்பு என்கிறது த.மா.கா.

இவையனைத்தும் தன் தலையிலேயே மண்ணை வாரிப் போட்டுக் கொள்ள கருணாநிதி மேற்கொண்ட முயற்சிகளை விளக்குகின்றனவேயன்றி புரட்சித் தலைவியின் முன் முயற்சிக்கும் வீரத்துக்கும் சான்றேதும் கூறவில்லை.

வேறு வார்த்தைகளில் சொன்னால் இன்றைய சூழ்நிலையில் ஜெயலலிதாவிற்குப் பதில் யாராவது ஒரு **பயலலிதா** போட்டியிட்டிருந்தாலும், கருணாநிதியின் தவறுகள் அவரையும் வெற்றி பெற வைத்திருக்கும் என்பதுதான் இவர்களது பாராட்டுரைகளின் உட்பொருள்.

சிறுமைப்படுத்த எண்ணி பெருமைப்படுத்தியவர்களும் சரி, பெருமைப்படுத்த விரும்பி சிறுமைப்படுத்தியவர்களும் சரி, ஜெயலலிதாவின் சொந்த செல்வாக்கை, அ.தி.மு.க. என்று அழைக்கப்படும் கும்பலின் தன்மையை, அது பெற்றிருக்கும் வாக்கு வங்கியின் முக்கியத்துவத்தை மதிப்பிடத் தவறுகிறார்கள்.

பகுத்தறிவு, சுயமரியாதை, சாதி எதிர்ப்பு, கடவுள் மறுப்பு போன்ற திராவிட இயக்கத்தின் எந்தக் கொள்கைகளுடனும் ஒட்டோ உறவோ இல்லாத,

நாடாளுமன்ற அரசியலின் ஜனநாயக மரபுகள், மதிப்பீடுகள், வழிமுறைகள் ஆகியவற்றின் மீது போலியான மரியாதையைத் தெரிவிப்பதற்குக் கூட விருப்பமில்லாத,

அரசியலைப் பிழைப்புக்கான தொழிலாகவும், அமைச்சர் பதவியை பாரம்பரிய அரசுரிமையாகவும், தமிழகத்தைத் தந்தை வழிச் சொத்தாகவும், தமிழக மக்களைக் கையேந்திகளாகவும் கருதுகின்ற கும்பல் தான் எம்.ஜி.யார் உருவாக்கிய அ.தி.மு.க.

ரவுடிகள், சமூக விரோதப் பொறுக்கிகள், சாராய வியாபாரிகள், பைனான்சுக்காரர்கள், ரியல் எஸ்டேட் தரகர்கள், காண்டிராக்டர்கள், சட்ட விரோத இரகசியத் தொழில் நடத்துபவர்கள் ஆகியோரைத் தமது பிரமுகர்களாகக் கொண்டிருப்பதில் அனைத்து ஓட்டுக் கட்சிக



படிப்பகம்

www.padippakam.com

ளுக்கும் ஒற்றுமை உண்டெனினும், இவர்களை மட்டுமே முதுகெலும்பாகக் கொண்டு உருவாக்கப்பட்ட கட்சி அ.தி.மு.க.

நிலமற்ற கூலி விவசாயிகள், கிராமப்புற ஏழைகள், நகர்ப்புறத்து உதிரித் தொழிலாளர்கள், அடித்தட்டு வர்க்கங்களைச் சேர்ந்த பெண்கள்... மொத்தத்தில் ஏதிலிகள், அமைப்பு ரீதியாகத் திரட்டப்படாதவர்கள், கல்வியறிவற்றவர்கள், அரசியல் விழிப்புணர்வில் ஆகப் பின் தங்கிய நிலையில் இருப்பவர்கள் - இவர்கள்தான் நடுத்தர வர்க்க அறிவாளிகளால் பல நேரங்களில் ஏளனமாகவும் சில நேரங்களில் அச்சத்துடனும் உச்சரிக்கப்படும் "எம்.ஜி.யாரின் வாக்கு வங்கி" என்ற பிரிவைச் சார்ந்தவர்கள்.



இலவசத் திட்டங்கள் கவர்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றின் இலக்கும், பொறுக்கி அரசியலின் பின்பலமும் இவர்கள்தான்.

உதிரித் தொழில் செய்வோருக்கு ரவுடிகள், கூலித் தொழிலாளிகளுக்கு காண்டிராக்டர்கள், கிராமப்புற நகர்ப்புற ஏழைகளின் கண்கண்ட கடவுளாக பைனான்சியர்கள், கட்டிடத் தொழிலாளிகளுக்கு ரியல் எஸ்டேட் முதலைகள்... என இந்த பிரிவு மக்களைச் சுற்றி 'இயற்கையாக' எழுந்துள்ள காப்பரண் இவ்வாக்கு வங்கியைப் பாதுகாக்கிறது. கூலித் தகராறு, வட்டித் தகராறு போன்ற முரண்பாடுகள் அவ்வப்போது எழுந்தாலும் இவர்களுடைய அன்றாட வாழ்க்கை மற்றும் அரசியல் அறிவின் மீது இந்தக் காப்பரண்கள்தான் செல்வாக்குச் செலுத்துகின்றன.

அமைப்பு ரீதியாகத் திரண்ட விவசாயிகள், தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள் போன்றோர் தம் உரிமைக்காகப் போராடிய போதெல்லாம் "மக்கள் பார்த்துக் கொள்வார்கள்" என்று எம்.ஜி.யார் திமிராகப் பேசினாரே, அவரது நம்பிக்கைக்கு உகந்த மக்கள் பிரிவினர் இவர்கள்தான்.

இந்த வாக்கு வங்கியின் ஜனநாயக உணர்வின்மை மீது கொண்ட அசைக்க முடியாத நம்பிக்கையில்தான் பத்திரிகையாளர்களைத் தாக்குவது, கொலை செய்வது, எதிர்க் கட்சியினரைத் தாக்குவது, நீதிமன்றத்தை மிரட்டுவது, பொதுச் சொத்துக்களைச் சூறையாடுவது - போன்ற அனைத்து வகையான அதிகார முறைகேடுகளிலும் கடந்த ஆட்சிக் காலத்தில் ஜெயலலிதா ஈடுபட்டார்.

வரம்பு மீறிய ஆட்டத்தால் தோன்றிய ஜெயலலிதா எதிர்ப்பு பொதுக் கருத்து, சென்ற தேர்தலின்போது இந்த வாக்கு வங்கியில் ஒரு சிறிய சலனத்தை ஏற்படுத்தியதும் அதன் விளைவாக ஜெயலலிதா தோற்றதும் உண்மைதான். எனினும் அது பழங்கதை.

அது அந்த வாக்கு வங்கியைச் சிதறடித்து விடவில்லை. "இலஞ்ச ஊழலற்ற அதிகார முறைகேடுகளற்ற சட்டத்தின் ஆட்சி" என்ற கருணாநிதியின் முழக்கம் அந்த வாக்கு வங்கியைச் சுற்றி எழுப்பப்பட்டிருக்கும் காப்பரண்களில் மோதித் திரும்பியதேயன்றி அதனை ஊடுருவ முடியவில்லை.

எனவே "ஊழலுக்கு விதிக்கப்பட்ட தண்டனை மக்களிடம் அனுதாபத்தைத் தோற்றுவித்து விட்டது" என்ற கருணாநிதியின் மதிப்பீடு மிகைப்படுத்தப்பட்டது. மேற்குறிப்பிட்ட மக்களைப் பொறுத்தவரையில் அவர்களது சொந்த அனுபவத்தில் இலஞ்சம் என்பது ஒரு பெரிய பிரச்சினை அல்ல; அமைச்சருக்கோ எம்.எல்.ஏ.வுக்கோ, வட்டச் செயலருக்கோ இலஞ்சம் கொடுத்து மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரியில் இடம் பிடிப்பதோ அரசு வேலையைப் பெறுவதோ அவர்களது அந்தஸ்திற்கு மீறிய விசயங்கள்.

அவர்களது வெறுப்புக்கும் ஏளனத்திற்கும் உரிய நடுத்தர வர்க்க காரியவாதிகள் இலஞ்சம் கொடுக்க நேர்வது குறித்து மனம் வருந்தவோ, இலஞ்சமில்லாத சட்டத்தின் ஆட்சி நடப்பது குறித்து மகிழ்ச்சியடைவதற்கோ இந்த அடித்தட்டு வர்க்கத்திற்கு எந்த முகாந்திரமும் இல்லை.

ரேசன் அட்டை, புறம்போக்குப் பட்டா, இலவசத் திட்டங்கள், வங்கிக் கடன்கள், காவல் நிலையத் தொல்லைகள் போன்ற விசயங்களில் ஜெயலலிதா ஆட்சியில் என்ன நடந்ததோ அதுதான் தி.மு.க. ஆட்சியிலும் நடந்திருக்கிறது. எனவே அதைக் கற்காலமென்றும் இதைப் பொற்காலமென்றும் பிரித்து அறிந்து கொள்வதற்கான சான்றுகள் ஏதும் அவர்களது வாழ்க்கையில் புதிதாகத் தோன்றிவிடவில்லை.

டைடல் பூங்கா, கணினித் துறை முன்னேற்றம், கார் தொழிற்சாலைகள், தொழில் வளர்ச்சியில் தமிழகத்திற்கு முதலிடம் போன்ற 'சாதனை'களை அடித்தட்டு மக்கள் புரிந்து கொள்ளத் தவறிவிட்டார்கள் என்று புலம்புகிறார்கள் தி.மு.க. ஆதரவு - காட் ஒப்பந்த ஆதரவு அறிவாளிகள். இது முன்னேற்றமல்ல மோசடி என்ற நமது கருத்து ஒருபுறமிருக்கட்டும். சர்க்கரை என்று எழுதி அதை எழுத்துக் கூட்டிப் படித்து, அறிவு பூர்வமாகப் புரிந்து கொண்டு காகிதத்தை நக்கினாலும் அது இனிப்பதில்லையே!

புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாக ஆலைகள் மூடப்பட்டதும், சிறு தொழில்கள் கைத்தறி விசைத்தறி ஆகியவை நசிந்ததும், தேயிலை, தென்னை, கரும்பு ஆகிய விளை பொருட்களுக்கு

கடனைக் கட்ட முடியாத ஆந்திரத்து விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டார்கள். தமிழகத்திலோ ஜெயலலிதாவுக்கு வாக்களித்திருக்கிறார்கள். தற்கொலை செய்யத் தூண்டியது அவர்களது தனிப்பட்ட அறிவியல் மதிப்பீடு. இங்கே ஜெயலலிதாவை ஆட்சியிலமர்த்தியிருப்பது சமூக அறிவியல் மதிப்பீடு.

www.padippakam.com

விலை வீழ்ந்ததும், விவசாயமே கட்டுப்ப டியாகாத தொழிலாக மாறியதும், நகர்ப்பு றத்தின் நுகர்பொருள் சந்தையும் சேவைத் துறையும் தேக்கநிலை அடைந்ததும், அள வுக்கதிகமாக ஊதிப் பெருக்க வைக்கப் பட்ட ரியல் எஸ்டேட் தொழில் என்னும் சோப்புக் குமிழி வெடித்ததும் கருணாநிதி ஆட்சிக் காலத்தின் கசப்பான உண்மைகள்.

''இதையெல்லாம் தடுக்க முடியாது'' என்று திமிராகப் பேசினார் மாறன். ''கொஞ்சம் பொறுங்கள். நெல்லுக்கிறைத்த நீர் புல்லுக்கும் பொசிந்தே தீரும். புதிய பொருளாதாரக் கொள்கையின் பலனை இப்போதுதான் பணக்காரர்கள் அனுப விக்கத் தொடங்கியிருக்கிறார்கள். கொஞ்சம் கொஞ்சமாகக் கீழிறங்கி (Trickling down effect) அது ஏழைகளாகிய உங்க ளுக்கும் வந்து சேரும் என்று பத்திரிகை அறிஞர்கள் முதல் ப. சிதம்பரம் வரை அனைவரும் மக்களுக்கு பொருளாதார வகுப்பு நடத்திப் பார்த்தார்கள்.

ஆனால் எங்கிருந்து தோன்றியது என்று ப. சிதம்பரத்தால் கண்டுபிடிக்க முடியாத **பணப்புழக்கம்** என்றொரு சொல், குரங்கு மனிதன் வதந்தியைக் காட்டிலும் வேகமாகப் பரவி ஏழை எளிய மக்களின் வாயில் புகுந்து புறப்படத் தொடங்கியது.

''விலைவாசி ஏறிவிட்டது, கூலி கட்டுப்படியாகவில்லை, வேலை இல்லை'' என்ற வார்த்தைகளால் பொருளாதார நெருக்கடியை உழைக்கும் மக்கள் குறிப் பிட்டிருந்தால் அதில் ஆச்சரியமில்லை.

தங்களது வாழ்க்கைத் துன்பத்தை விளக்க பணப்புழக்கம் என்ற இந்தச் சொல்லை அவர்கள் எங்கே கண்டுபிடித் தார்கள்? வர்த்தகர்கள், வர்த்தகச் சூதா டிகள், தரகர்கள் ஆகியோர் மத்தியில் மட்டுமே புழக்கத்திலிருக்கும் இந்தச் சொல் ஒரு கட்டிடத் தொழிலாளியின் வாயில் நுழைந்தது எப்படி?

''இலஞ்ச ஊழல் இருந்தாலும் அந்தம்மா ஆண்டபோது பணம் புழங்கி யது; நாங்களும் நாலு காசு சம்பாதித்தோம். இந்த ஆளு தன் குடும்பத்தைத் தவிர வேற யாரையும் சம்பாரிக்க உடமாட்டேங் கிறான்'' என்று ஒரு ஆட்டோ ஓட்டுனரோ, கட்டிடத் தொழிலாளியோ பேசும்போது அவர்களுக்கு இந்த 'ஞானம்' கைவரப் பெற்றது எப்படி என்று புரிந்து விடுகிறது.

வேலை கிடைக்காத கட்டிடத் தொழி லாளி, வருமானம் நின்று போன காண்டி ராக்டர் ஆகிய இருவரது வாயிலிருந்தும் வெளிவரும் கருத்து ஒன்றாக இருந்தாலும் அதற்கான காரணங்கள் வேறாக இருக்கின் றன. இருப்பினும் அரசியல் ரீதியில் இக்கருத்து ஏற்படுத்தியிருக்கும் விளைவு என்னவோ ஒன்றுதான்.

பணக்காரனுக்கு இறைச்சித் துண்டு கிடைத்தால்தான் ஏழைக்கு எச்சில் எலும் புகள் கிடைக்கும் என்பதே ப. சிதம்பரம் - மாறன் வகையறாவின் புதிய பொருளா தாரக் கொள்கையின் 'அறநெறி.' வேலை இல்லை, கூலி இல்லை என்று கதறிய மக்க ளிடம் ''பொறுங்கள் உள்ளே விருந்து நடந்து கொண்டிருக்கிறது - கடைசிப் பந்தி உங்களுக்குத் தான்'' என்று சமாதானம் சொல்லிக் கொண்டிருந்தார்கள் புதிய பொருளாரத்தின் அறநெறியாளர்கள்.

தன்னுடன் எந்த உறவும் கொள்ளாத, தன்னை வெறுப்புடன் பார்க்கின்ற மேல்தட்டு, நடுத்தர வர்க்கத்தின் வளமை யிலிருந்து தங்களுக்கு ஏதேனும் பொசி



**பணக்காரனுக்கு இறைச்சித் துண்டு கிடைத்தால்தான் ஏழைக்கு எச்சில் எலும்புகள் கிடைக்கும் என்பதே ப. சிதம்பரம் — மாறன் வகை யறாவின் புதிய பொருளாதாரக் கொள்கையின் 'அறநெறி.' வேலை இல்லை, கூலி இல்லை என்று கதறிய மக்களிடம் ''பொறுங்கள் உள்ளே விருந்து நடந்து கொண்டிருக்கிறது — கடைசிப் பந்தி உங்களுக்குத் தான்'' என்று சமாதானம் சொன்னார்கள் இவர்கள்.**

யும் என்று நம்புவதைக் காட்டிலும், மதுகு தனன் செங்கோட்டையன் போன்ற கும்பல் களிடமிருந்து பொசிவது உடனடியானதா கவும், உத்திரவாதமானதாகவும், காரிய சாத்தியமானதாகவும் உதிரிப் பாட்டாளி களுக்குப் பட்டிருக்கிறது.

பன்னாட்டு மூலதனம் - தொழில் வளர்ச்சி - உற்பத்தி - ஏற்றுமதி - அந்நியச் செலாவணி - பணக்கார வர்க்கங்களின் வளமை - கடைசியாக, ஏழைகளுக்கு நல்வாழ்வு என்ற ப.சிதம்பரத்தின் ஹார்வர்டு பொருளாதாரக் கொள்கையை ''இலஞ்ச ஊழல் - பணப்புழக்கம் - அனை வருக்கும் உடனடி நல்வாழ்வு'' என்ற போயஸ் தோட்டத்தின் சுரண்டல் லாட்டரிக் கொள்கை வெற்றி கொண்டுவிட் டது.

விருந்து மண்டபங்களின் கொல்லைப் புறத்தில் எறியப்படும் மதிப்பு வாய்ந்த எச்சில் இலைகளுக்குப் பதிலாக, மதுக்க டைகளில் மிஞ்சிச் சிதறும் கறித் துண்டுகள்! சட்டபூர்வமான டிஸ்கொதே நடனத்திற்குப் பதிலாக சட்டவிரோதமான ரிகார்டு டான்ஸ்! கருணாநிதிக்குப் பதிலாக ஜெய லலிதா! பொற்காலத்தைப் பணப்புழக்கம் வென்ற கதை இதுதான்.

ஒரு வேளை கூட்டணிக் கட்சிகள் இடம் மாறாமலிருந்தால் பணப் புழக் கத்தைப் பொற்காலம் வென்றிருக்கக் கூடுமே என்று சிலர் ஐயமெழுப்பலாம்; அக்கட்சிகளின் ஓட்டு வங்கியும் தி.மு.க.வுடன் சேர்ந்திருந்தால்... என்று சிலர் கணக்குப் போடலாம்.

ஓட்டு வங்கி என்பது நோட்டு வங்கியும் அல்ல; ஓட்டு என்பது சடப்பொ ருளும் அல்ல. என்னதான் வங்கி என்றாலும் அது வர்க்கங்களின் சேர்க்கையால் ஆனது; சரியாகவோ தவறா கவோ ஏதோ ஒரு வகையில் அது சிந்திக் கிறது. அ.தி.மு.க.வின் வாக்கு வங்கி பணப்புழக்கம் குறித்து என்ன பேசியதோ அதையே பல தி.மு.க.வினரும் தேர்த லுக்கு முன் கவலையுடனும் வெறுப்பு டனும் பேசினார்கள் எனும்போது கூட்டணிக் கட்சிகள் ஓடியதில் வியப் பென்ன? எனவே 'அத்தைக்கு மீசை முளைத்தால்' என்ற ஆசை அஸ்திவாரமற் றது.

மக்களது நியாயமான கோபம் ஒவ்வொன்றும் பிரச்சினைக்கு அறிவியல் பூர்வமான விடையைத் தேடிக் கண்டுபி டிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

நொடித்துப் போன விவசாயி களுக்கும், சிறுதொழில் முனைவோ ருக்கும், மூடிய ஆலைகளின் தொழிலாளி களுக்கும், சிறு வியாபாரிகளுக்கும் தங்கள் நெருக்கடிக்கு விடை தேவைப்பட்டிருக்கி றது. அது அறிவியல் பூர்வமான அற வியல் நெறி சார்ந்த ஆவேசமாகத்தான் வெளிப்பட வேண்டும் என்ற கட்டாய மில்லை.

கடனைக் கட்ட முடியாத ஆந்திரத்து விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டார்கள். தமிழகத்திலோ ஜெயலலி தாவுக்கு வாக்களித்திருக்கிறார்கள்.


படிப்பகம்

www.padippakam.com

தற்கொலை செய்யத் தூண்டியது அவர்களது தனிப்பட்ட அறிவியல் மதிப்பீடு. இங்கே ஜெயலலிதாவை ஆட்சியிலமர்த்தியிருப்பது சமூக அறிவியல் மதிப்பீடு.

தி.மு.க.விற்கு வாக்களித்தவர்களனை வரும் உத்தம புத்திரர்களும் அல்ல; ஜெயலலிதாவுக்கு வாக்களித்த மக்கள் ஊழல் பேர்வழிகளுமல்ல. 'திருடுவதை விட பட்டினி கிடந்து சாவதே மேல்' என்ற ஒழுக்கத்தைத் தமது தனிப்பட்ட வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் மக்கள்தான் பொது வாழ்வை நிர்வகிக்கும் பொறுப்பை ஒரு கொள்ளைக் கூட்டத் திடம் ஒப்படைத்திருக்கிறார்கள்.

அரசியல் விழிப்புணர்வு கொண்டவர்களும், படித்த வர்க்கம் எனப்படுவோரும், உண்மையான ஜனநாயகத்தை விரும்புவோரும் அக்கறையுடனும் அச்சத்துடனும் பரிசீலிக்க வேண்டிய விசயமிது. வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலைமை இது.

கஞ்சிக்கு வழியில்லாத மக்கள் அதன் காரணத்தை அறியாமல் கிளி ஜோசியம் பார்ப்பதும், காவடி எடுப்பதும், ஜெயலலிதாவுக்கு ஓட்டுப் போடுவதும் ஏளனத்துக்குரிய விசயங்கள் அல்ல. அதுவும் ப. சிதம்பரத்தின் பொருளாதார கிளி ஜோசியத்தை நம்பும் படித்த வர்க்கத்திற்கு பாமர மக்களைக் கேலி செய்யும் யோக்கியதை கிடையாது.

இருப்பினும் பெரும்பான்மை மக்களின் இந்த நல்லொழுக்கச் சீர்குலைவு பற்றிப் பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக அலசுகின்றனர் படித்த அறிவாளிகள். சட்டத்தின் தீர்ப்பை மக்களின் தீர்ப்பு மறுக்குமானால் மக்களின் மீது அரசியல் சட்டம் கோரும் அறநெறியை நிலைநாட்டியே ஆக வேண்டும் என்று கர்ச்சிக்கிறார்கள். ஏற்கனவே பல நூறு திருத்தங்களால் நொந்து நூலாகியிருக்கும் அரசியல் சட்டப் புத்தகமோ, தன்னை சமீபித்து வரும் புதிய அபாயத்தை எண்ணி நடுங்குகிறது.

அடுத்து அறிவாளிகளின் அறவியல் ஆவேசம் ஆளுநரை நோக்கித் திரும்புகிறது. "தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிக்கு அவர் எப்படி பதவிப் பிரமாணம் செய்து வைக்கலாம்?" என்று உறுமுகிறார்கள். ஆனால் இதை விசாரிக்க வேண்டிய அத்வானியோ தண்டனையிலிருந்து தப்பிக்க விசாரணையே நடக்க விடாமல் செய்து வரும் கொலைகாரன்!

"இது அதிர்ச்சியூட்டும் தீர்ப்பு" என்று விசுவாமித்திரனையொத்த கோபத்துடன் துவங்குகிறது தினமணி தலையங்கம். "எனினும் ஜனநாயகத்தின் அழகே தனிதான்" என்று தலையங்கம் முடிகிறது. மேனகையின் காலில் கிடக்கும் விசுவாமித்திரனை அது நினைவுபடுத்துகிறது.

"கலைஞருக்கு விடுதலை - இனி அவர் புரட்சிக்காரனாகலாம்!" என்று தி.மு.க.வின் வாலை முறுக்குகிறது நந்தன். பா.ஜ.க. கூட்டணியிலிருந்து தாங்கள் விடுதலை செய்யப்படும் நாளை எண்ணி நடுங்கிக் கொண்டிருக்கிறது தி.மு.க.

"ஜெயலலிதா மதச்சார்பற்ற கூட்டணியிலிருந்து விடுதலை பெற்று பா.ஜ.க.வை நோக்கிப் பாய்ந்து விட்டால் நம் கதி என்ன" என்று அன்புச் சகோதரர் சங்கரய்யாவும் நல்லகண்ணுவும் நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள். நடுக்கத்தில் நாற்காலியை இறுகப் பற்றியபடியே "அஞ்சும் ஆறும் பதினொண்ணு - ஆறும் அஞ்சும் பதினொண்ணு - காக்க காக்க கனகவேல் காக்க" என்று அவர்களது உதடுகள் முணுமுணுக்கின்றன.

தனது வாக்கு வங்கியுடைய அறியாமையின் ஆழத்தைப் பற்றி மட்டுமல்ல, இந்த அறவியல் ஆவேசக்காரர்களுடைய ஆரவாரங்களின் ஆழத்தையும், தனது ஆதரவுக் கட்சிகளின் அடிமனக் கணக்குகளையும் அம்மையார் அறிந்தே வைத்திருக்கிறார், திருட்டை ஒழிக்கப் பிறந்த போலீசின் நல்லொழுக்கத்தைப் பற்றி ஜேப்படித் திருடனைக் காட்டிலும் வேறு யாருக்கு அதிகமாய்த் தெரிந்திருக்க முடியும்?

அரசியல் சட்டத்தின் துணை கொண்டு நல்லொழுக்க நெறியை சமூகத்தின் மீது ஏவிவிடுவதற்கு, அதுவொன்றும் புனித மோசஸ் கொண்டுவந்த பத்து கட்டளைகள் அல்ல. அறவியல் மதிப்பீடுகளுக்குக் குழி பறித்து அடக்கம் செய்ததே அரசியல் சட்டமும் அதன் காவலர்களும்தான்.

கற்பும் அதன் எதிர்நிலை போலத் தோற்றமளிக்கும் விபச்சாரமும் ஆண் வர்க்கத்திற்கு மட்டுமே ஆதாயமளிப்பவை அதேபோல நேற்றைய பொற்காலமும் இன்றைய இருண்ட காலமும் ஆளும் வர்க்கங்களுக்கு மட்டுமே ஆதாயமளிப்பவை.

ஊழலுக்கும், ஒழுக்கக் கேட்டுக்கும் வாக்களித்து அரியணை ஏற்றிவிட்ட பெரும்பான்மை மக்களின் அறவியல் சீரழிவு குறித்து பிலாக்கணம் வைப்போரும், ஏளனம் செய்வோரும் இதைக் கேளுங்கள்!

இந்தத் தேர்தல் முடிவுகள் நீங்கள் கொஞ்சம் அசந்திருந்த நேரத்தில் நடந்து விட்ட அசம்பாவிதம் என்றே வைத்துக் கொள்வோம். இப்போது விழித்துக் கொண்டு விட்டீர்களல்லவா? துவக்குங்கள் போராட்டத்தை!

அந்தப் போராட்டத்தினூடாக, உங்களால் சபிக்கப்பட்ட மக்கள் கூட்டத்தின் ஆற்றலையும் - உங்கள் அறியாமையையும் புரிந்து கொள்வீர்கள். மக்களின் அறவியல் ஆவேசத்தையும் - உங்கள் அறவியல் ஊசலாட்டத்தையும் புரிந்து கொள்வீர்கள்.

இந்த இருண்ட காலத்தை மக்கள் புரிந்து கொள்வார்கள். பொற்காலமென்பதும் இன்னொரு வகை இருண்ட காலமே என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.

• மருதையன்




## தீக்கொழுந்து

**நீங்கள் பருகும் தேநீரின் விலை ரூ. 2.00**

**நீங்கள் வாங்கும் தேயிலைத் தூளின் ஒரு கிலோ விலை குறைந்தது ரூ. 200**

**இன்று நீலகிரியில் விற்கும் பச்சைத் தேயிலையின் ஒரு கிலோ விலை ரூ. 5.00 ஒரு கிலோ பச்சைத் தேயிலையை உருவாக்க சிறு விவசாயிக்கு ஆகும் அடக்கச் செலவு ரூ. 6.00 4 கிலோ பச்சைத் தேயிலையிலிருந்து ஒரு கிலோ கருப்புத் தேயிலைத் தூள் தயாரிக்கப்படுகிறது.**

**எனில் தேயிலை உருவாக்கப் பாடுபடும் தொழிலாளிகள் - சிறு விவசாயிகளிடமிருந்தும், தேநீர் பருகும் உங்களிடமிருந்தும் கொள்ளையடிப்பது யார்?**

'தீக்கொழுந்து' - நீலகிரி தேயிலை விவசாயிகளின் போராட்டம் பற்றிய கலைச்சித்திரம்.

இரண்டு பாகங்களாய்
இரு குறுந்தகடுகள் விலை ரூ. 250.
தபால் செலவு ரூ. 20.

இரா. சீனிவாசன் பெயருக்கு
புதிய கலாச்சாரம் முகவரிக்கு
பணம் அனுப்புங்கள்.



படிப்பகம்

www.padippakam.com



இனி ஸ்கேனிங் செய்து பார்த்து பெண் என்றால் கருவைக் கலைக்கும் கஷ்டம் இல்லை. பெண் குழந்தையைக் கருத்தரிக்கவே முடியாமல் செய்து விடலாம்.

# காணாமல் போகிறாள் பெண்!

இந்த நாடு 'இந்து நாடுதான்' என்பதை 2001-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கு நிரூபித்திருக்கிறது. அதாவது மக்கள் தொகை வளர்ச்சியில் ஆண்கள் பிறப்பு விகிதம் வளர்ந்திருக்கும் போது, பெண்கள் பிறப்பு விகிதம் 1991-ஆம் ஆண்டை விட மேலும் குறைந்து வருகிறது. கீழ்க்கண்ட அட்டவணையில் சில மாநிலங்களில் 1000 ஆண்களுக்கு பெண்களின் பிறப்பு விகிதம் எவ்வளவு என்பதை 1991, 2001 ஆண்டுகளின் சென்சஸ் கணக்குப்படி தரப்பட்டிருக்கிறது.

| மாநிலம் | 1991 | 2001 |
|---|---|---|
| பம்பாய் | 791 | 774 |
| மகாராஷ்டிரா | 934 | 922 |
| பஞ்சாப் | 882 | 874 |
| ஹரியானா | - | 874 |
| சண்டிகர் | - | 773 |
| இந்திய-தேசிய சராசரி | - | 933 |

மராட்டிய மாநிலம் நாட்டிலேயே முன்னேறிய மாநிலங்களில் ஒன்று. பஞ்சாப்பும், ஹரியானாவும் நாட்டின் தனிநபர் வருமானத்தில் முதல் இடத்திலிருக்கும் 'பணக்கார' மாநிலங்கள். பம்பாயும், சண்டிகாரும் மாநகரக் கலாச்சாரத்தில் முன்னணியிலிருக்கும் நகரங்கள். இத்தகைய முன்னோடி மாநிலங்களும், நகரங்களும் பெண் குழந்தைகள் பிறப்பு விகிதத்தில் இந்திய சராசரியை விட மிகவும் பின்தங்கி இருப்பது ஏன்? பொதுவாக மேற்கத்திய நாடுகளில் பெண்களின் பிறப்பு விகிதம் 998, 995 என்று இருக்கும். மேற்கத்திய கலாச்சாரத்தை இறக்குமதி செய்து விநியோகிக்கும் "இந்தியாவின் நுழைவாயிலான" பம்பாய் நகரம் பெண் பிறப்பு விகிதத்தில் 774 என்று இறங்கியிருப்பது கேவலமில்லையா?

மேலும் இந்த மாநிலங்கள் பெண் பிறப்பில் மட்டும்தான் பின்தங்கி இருக்கின்றனவே ஒழிய மக்கள் தொகை வளர்ச்சியில் மட்டும் இந்திய சராசரியை விட அதிகமாய் இருக்கின்றன. உசிலம்பட்டியிலும், சேலத்திலும் வழக்கமாயிருக்கும் பெண் சிசுக் கொலையைப் பிரச்சாரம் செய்து முழு இந்தியாவையே அதிர்ச்சியடைய வைத்தவர்கள், இத்தகைய முன்னேறிய மாநிலங்களின் கேவலத்துக்கு என்ன சொல்வார்கள்? பெண்ணைப் பெற்று வளர்த்து மணம் செய்து கொடுப்பது என்பது மிகுந்த செலவு பிடிக்கும் ஒன்று என்ற நிலப்பிரபுத்துவ சமூகத்தின் பிற்போக்குத்தனம் உசிலம்பட்டி சிசுக் கொலைக்குக் காரணமாகிறது. கூடவே வறுமை என்ற யதார்த்தம் அதை நியாயப்படுத்துகிறது. ஆனால் முன்னேறிய மாநிலங்களிலும், பம்பாய் மாநகரத்திலும் இந்த நிலைமை ஏன்? இதற்குக் காரணம் நிலப்பிரபுத்துவ கவுரவம் மட்டுமல்ல; பெண் என்றால் வரதட்சிணைச் செலவு - ஆண் என்றால் அதுவே வரவாகி விடுகிறது.

இம்மாநிலங்களில் உசிலம்பட்டி போல பெண் சிசுக்கள் பிறந்தவுடன் கொல்வதைத் தவிர்த்து விட்டு கருவிலேயே எல்லாம் முடித்து விடுகிறார்கள். இந்த மாநிலங்களில் இயங்கும் 24 மணிநேர மருத்துவமனைகளின் முக்கியமான சேவையே கர்ப்பப் பையை 'ஸ்கேனிங்' செய்து பெண் குழந்தை என்றால் கருக்கலைப்பு செய்வதுதான். இதைத் தடுப்பதற்காக மைய அரசாங்கம் மகப்பேறுக்கு முந்தைய ஆய்வக சோதனைகளை "பிறக்கப் போவது ஆணா பெண்ணா என்று தெரிவு செய்யும் நோக்கில் முறைகேடாக பயன்படுத்தக் கூடாது" என்று 1994-ஆம் ஆண்டில் சட்டம் கொண்டு வந்தார்கள். இப்போது 'எய்ட்ஸ்' தடுப்பு பிரச்சாரத்திற்கு செலவு செய்வது போல அந்த சட்டத்திற்கும் பிரச்சாரம் செய்தார்கள். மருத்துவர்களின் தலைமை அமைப்பான மருத்துவக் கவுன்சிலும், இத்தகைய சோதனைகளைச் செய்யும் மருத்துவர்களின் தகுதியை ரத்து செய்யலாம் என பரிந்துரைத்தது. மத்திய அரசின் சட்டத்திற்கு முன்னரே தனது மாநிலத்தில் சட்டமியற்றிய மராட்டிய அரசு அதற்கான பிரச்சாரத்தையும் கணிசமாக செலவழித்து செய்தது. ஆயினும் இவையெல்லாம் கண்துடைப்பு நடவடிக்கைகளே என்பதை குறைந்து வரும் பெண் பிறப்பு விகிதம் நிரூபித்துவிட்டது.

ஏனெனில் இந்தச் சட்டத்தை உண்மையாக அமல்படுத்தினால் இந்தி மாநிலங்களில் உள்ள தமது வாங்கு வங்கியினை காங்கிரசும், பா.ஜ. கட்சியும் இழக்க வேண்டும். அவ்வளவு ஏன், இந்தக் கட்சிகளின் அணிகளையும், தலைவர்களையும் கூட கைது செய்ய வேண்டியிருக்கும். தற்போது இந்த பெண் சிசுக் கொலை அறிவியலின் வளர்ச்சி காரணமாக அடுத்த கட்டத்திற்கு போய்விட்டது. இனி கருப்பையை ஸ்கேனிங் செய்து கலைக்க வேண்டியதில்லை. கருத்தரிப்பின் போதே ஆண் குழந்தை மட்டும்தான் கருத்தரிக்க முடியும் என்று மாற்றி விடலாம். இந்த புதிய தொழில் நுட்பத்தின்படி ஆணின் விந்தணுவில் உள்ள பால் வேறுபாட்டைத் தீர்மானிக்கும் XX மற்றும் XY குரோம்சோம்களைப் பிரிப்பதன் மூலம் ஆண் குழந்தை



படிப்பகம்

www.padippakam.com

மட்டும் கருத்தரிக்க வைக்க முடியும். மேலும் தற்போது இருக்கும் சட்டத்தின்படி இது தவறில்லை என்பதால் பயமும் தேவையில்லை.

டெல்லி, மற்றும் இந்தி பேசும் மாநிலங்களில் பல பணக்காரர்கள் இந்த புதிய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி ஆண் குழந்தைகளை மட்டும் பெற்றுக் கொள்கின்றனர்.

இத்தகைய உயர் தொழில்நுட்ப - அதிக செலவு பிடிக்கும் வசதியெல்லாம் உசிலம்பட்டியின் ஏழை விவசாயிகளுக்கு கிடையாது என்பது ஒருபுறமிருக்கட்டும். சட்டத்தின் படி இந்தி மாநில பணக்காரர்கள் குற்றவாளிகள் கிடையாது என்பதே இதில் முக்கியம். மேலும் முன்னேறி வரும் அறிவியல் - மருத்துவ வசதிகள் பெண்களை ஒழிக்க எப்படி கேவலமாக பயன்படுத்தப்படுகிறது என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். மேலும் பெண்ணுக்கு இருக்கும் இயல்பான உடலியல் பிரச்சினைகள் இத்தகைய நிலப்பிரபுத்துவ பயங்கரவாதத்தால் பூதாகரமாக மாறுகின்றன.

குழந்தையைப் பெற்று பாலூட்டி வளர்க்கும் ஒரு பெண் அதன் பொருட்டு இழக்கும் உடல் நலம் ஏராளம். இதில் ஸ்கேனிங் செய்து பெண் சிசு என்றவுடனே அடிக்கடி கருக்கலைப்பு செய்வது அவளது வயிற்றுப் பகுதியை நிரந்தர புண்ணாக்கி விடுகிறது. மேலும் பார்ப்பன இந்துமத ஆச்சார வாதிகள் வேறு வழிகளிலும் பெண்களைக் குதறி வருகிறார்கள். மகப்பேறு சமயத்தில் ராகு காலம் - எமகண்டம் பார்த்து, குறிப்பிட்ட நேரத்தில்தான் குழந்தை பிறந்தாக வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். இதற்காகவே 'சிசேரியன்' எனப்படும் அறுவை சிகிச்சை முறையில் மகப்பேறு செய்யச் சொல்லி வீட்டிலிருந்து கடிகாரம் கொண்டு வந்து (அதிலும் தங்கள் கடிகாரம்தான் சரியான நேரம் என்ற திமிர்) இந்த நிமிடம், இத்தனை விநாடியில் வயிற்றில் கத்தி வையுங்கள் என்கின்றனராம். இதைச் சொல்லி வருத்தப்படுகிறார் ஒரு பெண் மருத்துவர். இயல்பான மகப்பேறு முடியாது என்பதாலேயே அறுவை சிகிச்சை தேவைப்படுகிறது. குறிப்பிட்ட நேரத்திற்குள் அறுவை சிகிச்சை செய்யவில்லை என்றால் பெரும் ரத்தப் போக்கு ஏற்பட்டு அந்தப் பெண்ணின் உயிருக்கே அபாயம் ஏற்படும். அப்போதும் நல்ல நேரத்திற்காக மல்லுக்கட்டும் இந்த ஜன்மங்களை எதைக் கொண்டு உதைப்பது? இதைவிட 'பாம்பாட்டிகளின் தேசம் இந்தியா' என்ற பட்டப் பெயர் ஒன்றும் மோசமில்லையே?

பார்ப்பன இந்து சமூகத்தில் பெண் என்பவள் குல கௌவரத்தை தாங்கி நிற்கும் 'குத்து விளக்கு'. சாதி, மதக் கலவரத்தில் பெண்கள் கற்பழிக்கப்படுவது எதிர் குலத்தின் கௌரவத்தை நிலைகுலைய வைக்கவே. அதைப்போல குலத்தின் ஆட்சியை வாரிசுகள் மூலம் தொடருவதற்கு ஆண் குழந்தைகளை மட்டும் அவள் பெற்றுத் தள்ள வேண்டும். ஆண் குழந்தை வேண்டும் என்பதற்காக பல முறை வயிறு சுமந்து 'கடவுள் குடுப்பினை' இல்லாமல் பெண் குழந்தைகளைப் பெற்று இடுப்பொடிந்து போன பெண்கள் எத்தனை பேர்? முதல் மகப்பேறே அறுவை சிகிச்சை என்று முடிந்து விட்டால் அந்தப் பெண் மீண்டும் கருத்தரிப்பது அவளது உடல்நலத்திற்கு நல்லதல்ல. ஆனால் 2, 3 முறை அறுவை சிகிச்சை செய்து வயிறு முழுவதும் தையல் தழும்புகளுடன், குனிய முடியாமல் இளமை துறந்து ஆயுள் கைதிகளைப் போல் நாட்களை எண்ணி வரும் பெண்கள் ஏராளம் இருக்கின்றனர்.

அதிலும் இயல்பான மகப்பேற்றையே அறுவை மகப்பேறு என்றாக்கிவிட்டால் ஏராளமாகப் பணம் பறிக்கலாம் என்பது மருத்துவ சிகாமணிகளின் தொழில் உத்தி. இப்படி அறுவை சிகிச்சை மகப்பேற்றின் மூலமாகவே கோடிக்கணக்கில் சுருட்டும் மருத்துவமனைகள் பல தமிழகத்தில் வளர்ந்திருக்கின்றன. ஆக நிலப்பிரபுத்துவ சமூகத்திற்கு ஒரு பெண்ணின் வயிறு ஆண் வாரிசைத் தரும் கருவியாகவும், முதலாளித்துவ தொழிலுக்கு அவள் வயிறு பணம் சுரக்கும் கருவியாகவும் பயன்படுகிறது. நம்மைப் போன்ற பின்தங்கிய நாடுகளில் பெண்கள் எந்த உரிமையுமற்ற அடிமைகளாக இருக்கிறார்கள் என்பதோடு அவர்களது உடல்நலப் பிரச்சினைகள் குறித்த அறிவும், அக்கறையும் இங்கே கிடையாது என்பதும் சேர்ந்தே இருக்கிறது. ஆகவே

> பெண் என்ற மனித ஜீவன் குரோமோசோம்களில் இல்லாமல் போகிறாள்; கருவாகி வந்தால் அழிக்கப்படுகிறாள்; சிசுவாகப் பிறந்தால் கொல்லப்படுகிறாள்; வளர்ந்து ஆளாகினால் சிறுகச் சிறுக நைந்து போகிறாள். இதைக் காட்டுமிராண்டித் தனம் என்று கூறலாமா? தவறு. இத்தகைய இழிநிலையை காட்டுமிராண்டிச் சமூகம் கனவிலும் நினைத்ததில்லை.

என்னதான் முன்னேறிய மருத்துவ வசதிகள் இருந்தாலும் இங்கே அவை பெண்ணுக்கு எதிராகத் தான் திருப்பப்படுகின்றன.

மாத விலக்கு நாட்களில் ஏற்படும் ரத்தப் போக்கு காரணமாக ஓய்வும், ஊட்டச் சத்தும் ஒரு பெண்ணுக்கு அவசியம். ஆயினும் இன்றைய நவீன வாழ்க்கை அவள் ஓய்வெடுக்கவழியின்றி பணியாற்ற வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தி விட்டது. மேலை நாடுகளில் விளையாட்டு வீராங்கனைகள், நடிகைகள் போன்ற பல்வேறு பிரிவினர் தமது வேலைக்குத் தொந்தரவில்லாத நாட்களில் மாதவிலக்கைத் தள்ளி வைக்க மருந்து உட்கொள்கிறார்கள், அது உடல் நலத்திற்கு கேடு என்றாலும் கூட. இந்தியாவில் முன்பு மாத விலக்கு நாட்களில் உலக்கையைப் போட்டு வீட்டின் ஓரமாக பெண்களை உட்கார வைத்து தள்ளி வைப்பார்கள். இப்போது வீட்டில் தள்ளி உட்கார வைப்பது குறைந்து வருகிறது என்றாலும் சில காரணங்களுக்காக மாத விலக்கையே தள்ளி வைக்கிறார்கள். இப்படி அறிவியலின் துணை கொண்டு மாதவிலக்கை எதற்கு தள்ளி வைக்கிறார்கள் என்பதை அறிந்தால் யாருக்கும் மயக்கம் வரும்.

நாள், நட்சத்திரம் பார்த்து தெரிவு செய்யப்பட்ட திருமண - முதலிரவு நாட்கள் மற்றும் 'நல்ல நாட்களான' சதுர்த்தசி, அமாவாசை, பௌர்ணமி, தீபாவளி, நவமி, அஷ்டமி என பல்வேறு 'புனித தினங்களன்று' மாதவிலக்கு வராமலிருக்க மாத்திரை உட்கொள்ளுகிறார்கள். 'சுத்த தினங்களுக்காக 'அசுத்த தினங்களை' தள்ளி வைக்கும் பார்ப்பன இந்து சமூகம் காலத்திற்கேற்றவாறு தன்னை தகவமைத்துக் கொள்கிறது என்பது இதுதான் போலும். இப்படி அடிக்கடி மாதவிலக்கைத் தள்ளி வைக்க மாத்திரைகளை உட்கொள்வது பெண்ணுக்கு நல்லதல்ல என்பதை மீண்டும் விளக்க வேண்டியதில்லை.


ஆக பெண் என்ற மனித ஜீவன் குரோமோசோம்களில் இல்லாமல் போகிறாள்; கருவாகி வந்தால் அழிக்கப்படுகிறாள்; சிசுவாகப் பிறந்தால் கொல்லப்படுகிறாள்; வளர்ந்து ஆளாகினால் சிறுகச் சிறுக நைந்து போகிறாள். இப்படி ஒரு சமூகத்தில் பெண்கள் காணாமல் போவதும் அதைக் கண்டும் காணாமல் இருப்பதும் அந்த சமூகத்தின் காட்டுமிராண்டி நிலையையே குறிக்கிறது. காட்டுமிராண்டி என்ற சொல்லால் இதைக் குறிப்பிடுவது தவறு. இத்தகைய இழிநிலையை காட்டுமிராண்டி சமூகம் கனவிலும் நினைத்ததில்லை.

●



படிப்பகம்

www.padippakam.com



# ஓய்வு – பொழுது போக்கு 2 இசை ரசனை

• மருதையன்

"நாம் பொழுது போக்கிற்காக ஒரு முறை டிஸ்னி லாந்துக்குள் சென்று வரவில்லை. டிஸ்னி லாந்துக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நம்முடைய உழைப்பு நேரத்தை மட்டுமல்ல ஓய்வு நேரத்தையும் பன்னாட்டு முதலாளி களிடம் பறி கொடுத்து விட்டோம்" - என்று குறிப்பிட்டு இக்கட்டு ரையின் முதல் பகு தியை முடித்தி ருந்தோம்.

ஓய்வு என்பது உடல் ரீதியானதொரு தேவை. ஆனால் அந்த ஓய்வு நேரத் தைக் கழிப்பதற்கான இசை, இலக்கியம், திரைப்படம், நாடகம், திருவிழா போன்ற வையோ உளரீதி யானதேவைகள். விலங்குகள் தொடர்ந்து உழைப்பதற்கு அவற்றிற்கு உடல் ரீதியான ஓய்வு மட்டுமே போதுமானது. மனித னுக்கோ உடல் ரீதியான ஓய்வு மட்டுமின்றி உள ரீதியான உந்துதலும் தேவைப்படுகி றது.

"நாம் டிஸ்னி லாந்திற்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்" என்று கூறுவதன் பொருள் நாம் இடையறாது புத்துணர்ச்சி யூட்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்ப துதான். இப்படி யார், என்ன நோக்கத்திற் காக நமக்குப் புத்துணர்ச்சியூட்டிக் கொண்டிருக்கிறார்கள்? அவ்வாறு தொடர்ந்து புத்துணர்ச்சியூட்டப்பட வேண்டிய அளவிற்கு நாம் ஏன், தளர்ந்து மந்தமாகப் போய் விட்டோம்? நமக்குத் தெரிந்த கடந்த காலத்தைச் சற்றே திரும்பிப் பார்ப்போம்.

கிராமப் புறங்களில் ஆண்டுக்கு ஓரிரு திருவிழாக்கள் நடக்கும். அவ்விழாக் காலங்களில் தெருக் கூத்துகளோ, இசை நிகழ்ச்சிகளோ நடக்கும். அன்றாட வாழ்க் கையில் உழைப்பின் போதே பாடிக் கொள்ளும் நாட்டுப் பாடல்களைத் தவிர தனியான விசேச மான பொழுது போக் கென்பது கிடை யாது.

அப்புறம் வந்தன மேடை நாடகங்கள், பிறகு சினிமா. ஒரு இருபத்தைந்து ஆண்டுகள் முன்பு வரையிலும் கூட 'உருப் படாத மாணவர்கள்' 'குடும்பப் பொறுப் பில்லாத பெண்கள்' என்று அழைக்கப்படு பவர்கள் கூட வாரம் இரண்டு மூன்று சினி மாக்களைத் தாண்டியிருப்பார்களா என்பது சந்தேகம்தான். இன்று தொலைக் காட்சிப் பெட்டியின் முன்னால் ஒவ்வொரு குடும்பமும் செலவிடும் நேரத்தை இவற் றுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.

திரைப்படம், தொலைக்காட்சி, வீடியோ, பாடல் ஒலிப்பேழைகள், கடை களில் தொங்கும் விதம் விதமான பத்திரி கைகள், இவையல்லாமல் குழந்தைகளுக் காகவென்றே உருவாக்கப்பட்டிருக்கும் பூங்காக்கள், வீடியோ கேம்கள், பொம்மைகள், இறுதியாக குழந்தைகள் முதல் முதியோர் வரை எல்லா வயதி னர்க்கும் அவரவர் வசதிக்கேற்ற தரத்தில் சந்தைக்கு வந்திருக்கும் உடையலங்கா ரங்கள் ஒப்பனைப் பொருட்கள்...

இவற்றிற்காகவெல்லாம் நமது வருமா னத்தில் எத்தனை சதவீ தத்தை முன்பு செல விட்டோம்? பொழுது போக்கிற்காக ஒரு நாளில் எத்தனை நேரத்தை செல விட்டோம்? இப்போது எவ்வளவு செலவிடு கிறோம்? இதைப் பரிசீ லித்துப் பார்த்தால் தொழிலாளர்கள், விவ சாயிகள், நடுத்தர வர்க்கத்தினர் ஆகிய அனைத்துப் பிரிவி னரின் வாழ்க்கையிலும் ஏற்பட்டிருக்கும் மாற்றத்தைப் புதிய கோணத்தில் புரிந்து கொள்ள முடியும்.

பொதுவாக, உணவு - உடை - இருப் பிடம் ஆகிய அடிப் படைத் தேவைகளுக் காகச் செலவிடும் தொகைக்கு மேல், இதர பண்பாட்டு நடவடிக் கைகளுக்காகச் செலவிடும் தொகையும் நேரமும் அதிகரிக்க அதிகரிக்க, அது அந்த சமூகத்தின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து வரு வதைக் காட்டுகிறது என்று கூறுவார்கள் சமூகவியல் அறிஞர்கள்.

நமது மக்கள் அனைவரும் மூன்று வேளை சோறும், போதிய உடையும், சுகா தாரமான வீடும் கிடைக்கப் பெற்று மிஞ்சிக் கையிலிருக்கும் காசைத்தான் பொழுது போக்கிற்குச் செலவிடுகிறார்களா?

பொழுது போக்கிற்காகச் செலவிடும் நேரம் அதிகரித்திருக்கிறது என்பதால், மக்களின் அன்றாட உழைப்பு நேரம் 8 மணி நேரத்திலிருந்து 6 மணி நேரமா கவோ 5 மணி நேரமாகவோ குறைந்து விட்டதாக எடுத்துக் கொள்ளலாமா?

இல்லை. இந்தியாவில் மட்டுமல்ல, அமெரிக்கா போன்ற முன்னேறிய நாடு களில் கூட தொழிலாளர்களின் உழைப்பு நேரம் அதிகரித்து வருகிறது. அதே நேரத்தில் பொழுது போக்கும் அதிகரிக்கி றது. மக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்பட வில்லை. ஆனால் சினிமா, இசை, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் போன்ற வையோ அளவுக்கதிக மாக வாரி வழங்கப்ப டுகின்றன. இந்த முரண்பாட்டை எப்படி

> "நாம் டிஸ்னி லாந்திற்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்" என்று கூறுவதன் பொருள் நாம் இடையறாது புத்துணர்ச்சியூட்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதுதான். இப்படி யார், என்ன நோக்கத் திற்காக நமக்குப் புத்துணர்ச்சியூட்டிக் கொண்டிருக்கிறார்கள்? அவ்வாறு தொடர்ந்து புத்துணர்ச்சியூட்டப்பட வேண்டிய அளவிற்கு நாம் ஏன், தளர்ந்து மந்தமாகப் போய் விட்டோம்?



படிப்பகம்

www.padippakam.com

விளங்கிக் கொள்வது?

* * *

எட்டு மணி நேர வேலை, எட்டு மணி நேர ஓய்வு, எட்டு மணி நேர உறக்கம் என்ற முழக்கத்தை முன்வைத்து சென்ற நூற்றாண்டில் போராடிய சிகாகோ தொழிலாளர்கள் இன்று உயிருடன் வந்தால் என்ன நினைக்கக் கூடும்?

தாங்கள் போராடிப் பெற்ற 8 மணி நேர வேலை என்ற கோரிக்கை உலகில் பல்வேறு நாடுகளிலும் நூறாண்டுகள் கடந்த பின்னரும் நிறைவேற்றப்படாதது குறித்து வேதனை அடைவார்கள். தங்கள் சொந்த நாட்டிலேயே தொழிலாளர்கள் 12, 15 மணி நேரம் வேலை வாங்கப்படுதைக் கண்டு ஆத்திரமடைவார்கள். இவையெல்லாம் உழைப்புச் சுரண்டலுக்கெதிரான அவர்களது கோபமாயிருக்கும்.

ஆனால் எட்டு மணி நேர ஓய்வையும் ஏகபோக முதலாளிகள் திருடிக் கொண்டு விட்டார்கள் என்பதைக் காணும்போது அவர்கள் மனம் வெதும்பிப் போவார்கள். ஏனென்றால் தொழிலாளியின் உழைப்பைத் திருடுவது என்பதை அவனுடைய நிகழ்காலத்தைத் திருடுவதாகச் சொல்லலாம். ஓய்வைத் திருடுவதோ அவனது எதிர்காலத்தைத் திருடுவதாகும்.

தன்னுடைய அரசியல் ரீதியான விடுதலைக்கும், பண்பாட்டு ரீதியான முன்னேற்றத்திற்கும் தனது ஓய்வு நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே எட்டு மணி நேர ஓய்வு என்ற மேதினக் கோரிக்கையின் நோக்கம்.

மே தினக் கோரிக்கை எழுப்பப்படுவதற்கு முன்னால் உழைப்பாளிகளுக்கு ஓய்வே தரப்படவில்லையென்று பொருளல்ல. ஒவ்வொரு நாளும் உழைப்பாளியின் முழுமையான உழைப்புத் திறனும் வெளிப்படத் தேவையான அளவுக்கு உடல் ரீதியான ஓய்வைத் தருவது அவசியம் என்று நிலப் பிரபுக்கள் முதல் முதலாளிகள் வரை அனைவரும் புரிந்திருந்தார்கள். ஓய்வின்றி உழைக்க நிர்ப்பந்திக்கப்பட்டபோது அடிமைகள் முதல் விவசாயிகள் வரை அனைவரும் ஆங்காங்கே கலகமும் செய்தார்கள்.

ஆனால் முதலாளித்துவம் என்ற அமைப்பையே ஒழித்துக் கட்டுவதற்காக அமைப்பு ரீதியாகத் திரள்வதற்கும், அதற்குத் தங்களைப் பயிற்றுவித்துக் கொள்வதற்கும் இந்த ஓய்வு நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற புரிதல் முந்தைய போராட்டங்களில் கிடையாது.

அதாவது முன்பு உழைப்பும், ஓய்வு நேரப் பண்பாட்டு நடவடிக்கைகளும் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், அன்று நிலவி வந்த உற்பத்தி உறவைப் பேணுவதற்கும் மட்டுமே பயன்பட்டன.

முதல் எட்டு மணி நேரம் தோற்றுவிக்கும் சமூக அடிமைத்தனத்தை, முதலாளி - தொழிலாளி என்ற உற்பத்தி உறவை, அதன் அடிப்படையில் கட்டப்பட்டுள்ள சமூக, அரசியல் அமைப்புகளை ஒழித்துக் கட்ட இரண்டாவது எட்டு மணி நேரம் - அதாவது ஓய்வு - பயன்படுத்தப்பட வேண்டும் என்ற புரிதல்தான் மே நாளின் சிறப்பு.

ரத்தம் சிந்திப் போராடிப் பெற்ற இந்த ஓய்வு நேரத்தை ஒரு தொழிலாளி எவ்வாறு செலவிடுகிறான்? அவனது வர்க்க உணர்வை சோதித்தறிவதற்கான ஓர் உரைகல்லாகும் இது.

> **ரத்தம் சிந்திப் போராடிப் பெற்ற இந்த ஓய்வு நேரத்தை ஒரு தொழிலாளி எவ்வாறு செலவிடுகிறான்? அவனது வர்க்க உணர்வை சோதித்தறிவதற்கான ஓர் உரைகல்லாகும் இது. எப்படிச் செலவிடுகிறோம் என்று சிந்தித்துப் பாருங்கள். உழைப்பின் பயனை மட்டுமன்றி ஓய்வின் பயனையும் முதலாளிகளே அறுவடை செய்கிறார்கள் என்பது புரியும்.**

எப்படிச் செலவிடுகிறோம் என்று சிந்தித்துப் பாருங்கள். உழைப்பின் பயனை மட்டுமன்றி ஓய்வின் பயனையும் முதலாளிகளே அறுவடை செய்து கொள்கிறார்கள் என்பது புரியும்.

ஆம். உலகமயமாக்கம் என்று அழைக்கப்படும் இன்றைய மறுகாலனியாக்கக் காலத்தில் மூலதனமும் உழைப்புப் பிரிவினையும் மட்டுமல்ல ஓய்வும் பொழுது போக்கும் கூட சர்வதேசமயமாகி வருகிறது.

எதை உண்பது, எதை உடுத்துவது, என்ன பருகுவது, எதைப் படிப்பது, எந்தத் திரைப்படத்தைப் பார்ப்பது, எந்த இசையைக் கேட்பது என்பதற்கெல்லாம் ஒவ்வொரு நாடும் தனது மரபு, தனது பண்பாடு மற்றும் விழுமியங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கியிருப்பவையனைத்தையும் அழித்து உலகு தழுவிய அளவில் இவற்றைப் பன்னாட்டு நிறுவனங்கள் தம் கைக்குள் கொண்டு வருகின்றன.

தமிழ்த் திரையிசைப் பாடலுக்குப் பதிலாக எம்.டி.வி. - வி. சானலின் பாடல்கள், தமிழ்ப் படங்களுக்குப் பதில் ஹாலிவுட் படங்கள், உள்நாட்டுப் பானங்களுக்குப் பதில் கோக் பெப்சி.... என்று நாம் ஏற்கனவே பயன்படுத்தி வந்த பொருட்களின் இடத்தில் வேறு நுகர் பொருட்களையும், பொழுது போக்கிற்காக நாம் ஏற்கனவே நாடி வந்தவற்றுக்குப் பதிலாக வேறொன்றையும் மாற்றீடு செய்கின்றனர். பிரச்சினையின் ஒரு பகுதி மட்டும்தான் இது.

உழைப்பு நேரம் - ஓய்வு நேரம் பற்றிய நமது கண்ணோட்டம், பொழுது போக்கிற்காக நாம் செலவிடும் நேரம் மற்றும் பணம் குறித்த நமது கண்ணோட்டம், திரைப்படம் இசை நாடகம் இவற்றில் நாம் இதுகாறும் கொண்டிருந்த ரசனை முறைகள், உடை, ஒப்பனை இவற்றுக்கெல்லாம் நாம் இது வரை அளித்து வந்த முக்கியத்துவம், குடும்ப உறவுகளையும் நட்பையும் பொது வாழ்க்கையையும் பேணுவதற்கு நாம் இதுகாறும் செலவிட்ட ஓய்வு நேரம், அந்த 'நேரச் செலவு' குறித்து நாம் கொண்டிருந்த கண்ணோட்டம்... என எண்ணிலடங்காத விதங்களில் நம் பார்வை, நடத்தை, ரசனை, கருத்து, முன்னுரிமைகள் ஆகியவை மாறியுள்ளன.

ஆயத்த ஆடை நிறுவனங்களில் ஓயாமல் பாடல்கள் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. வேலையும் நடக்கிறது. வேலை நிற்கக் கூடாது என்பதில் மேலாளர் கவனமாக இருக்கிறான். பாட்டு நிற்கக் கூடாது என்பதில் தொழிலாளி கவனமாக இருக்கிறான்.

தொழிற்சங்கக் கூட்டங்களுக்கு தொழிலாளர்கள் வருவதில்லை. கூட்டத்தில் கலந்து கொண்டால் 'தொடர்' பார்க்க முடியாது. தனது சொந்தப் பிரச்சினைக்கு விடை காண்பதைக் காட்டிலும் 'சித்தியின்' பிரச்சினைக்கு விடை தெரிந்து கொள்வது அவனுக்கு முக்கியமாகப்படுகிறது. இந்தக் காரணத்தைச் சொல்வதில் அவனுக்கு எந்த விதமான குற்றவுணர்வோ அவமானமோ கூட இருப்பதில்லை.

வீட்டு வேலை செய்து உடல் அயர்ந்து போன பெண்ணுக்கு ஓய்வு தேவைப்படுகிறது. ஆனால் தொலைக்காட்சித் தொடர் என்ற பொழுதுபோக்கு அவளுக்கு ஓய்வை மறுக்கிறது.

ஓய்வு நேரத்தைச் செலவிடும் பல வழிமுறைகளில் ஒன்று பொழுதுபோக்கு என்பது மாறி, பொழுது போக்கை நுகர்வதற்காக ஓய்வைத் தியாகம் செய்யும் இந்த நிலையை, "டிஸ்னி லாந்துக்குள் வாழ்வது" எனக் குறிப்பிடுவது பொருத்தம்தானே.

— தொடரும்


படிப்பகம்

www.padippakam.com

1989 நவம்பர் 9-ம் நாளன்று கிழக்கு ஜெர்மனியையும் மேற்கு ஜெர்மனியையும் பிரித்த பெர்லின் சுவர்இடிக்கப்பட்டது.

பெர்லின் சுவரின் வீழ்ச்சியே கம்யூனிசத்தின் வீழ்ச்சியாகவும், அந்த இடிந்த சுவரின் செங்கற்கள் முதலாளித்துவ சுதந்திரத்தின் குறியீடுகளாகவும் போற்றப்பட்டன. இடிந்த பாபர் மசூதியின் கற்களை வைத்துக் கொண்டு கரசேவகர்கள் எப்படி வெறியாட்டம் போட்டார்களோ அப்படி பெர்லின் சுவரின் கற்களை வைத்துக் கொண்டு முதலாளித்துவத்தின் சேவகர்கள் களி வெறியாட்டம் நடத்தினார்கள்.

ரசியாவிலும் கிழக்கு ஜெர்மனி போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் சோசலிச அரசமைப்பு என்ற பெயரில் அதிகார வர்க்க முதலாளித்துவத்தின் ஆட்சிதான் நடக்கிறது என்று 1960களின் இறுதிப்பகுதியிலேயே உலகெங்கிலும் உள்ள கம்யூனிசப் புரட்சியாளர்கள் அறிவித்து விட்டார்கள். அதற்கான காரணங்களையும் விளக்கியிருக்கிறார்கள்.

ஏகாதிபத்தியவாதிகள் இந்த உண்மையை மறைத்துவிட்டு 'அதிகார வர்க்க முதலாளித்துவத்தின் வீழ்ச்சி'யையே கம்யூனிசத்தின் வீழ்ச்சியாகச் சித்தரிக்கிறார்கள்.

“சோசலிசத்தில் ஏன் இப்படியொரு வீழ்ச்சி? முதலாளித்துவத்தை மக்கள் விரும்பக் காரணம் என்ன? யாருமே இதனை எதிர்த்துப் போராட வில்லையா?” என்ற கேள்விகளுக்குரிய விடையை இந்தப் படத்தின் கதைக்குள்ளே வாசகர்கள் கண்டுபிடிக்க முடியும்.

***





## திரைக்கதை:

# ஆப்பிள் மரங்கள்

ஹெல்மா சாண்டர்ஸ் ப்ராம்ஸ் (Helma Sanders Brahms) என்ற மேற்கு ஜெர்மன் பெண் இயக்குநரால் இயக்கப்பட்ட “ஆப்பிள் மரங்கள்” என்ற ஜெர்மானியத் திரைப்படம் 1992-ஆம் ஆண்டு வெளியானது. இத்திரைப்படத்தின் கதை, பெர்லின் சுவர் தகர்க்கப்படுவதற்குச் சற்று முன்னர் தொடங்கி, அச்சுவர் தகர்க்கப்பட்டு, மேற்கும் கிழக்கும் இணையும் சமயத்தில் முடிவடைகிறது.

கிழக்கு ஜெர்மனியின் ஒரு கிராமத்தில் அமைந்திருக்கும் கூட்டுறவு ஆப்பிள் பண்ணைதான் கதையின் களம். அக்கூட்டுறவுப் பண்ணையில் வேலை பார்க்கும் ஒரு தொழிலாளி **ஹீன்ஸ்**. கம்யூனிஸ்டு கட்சி ஊழியரான அத்தொழிலாளியின் மனைவி **லீனா**. அந்த ஆப்பிள் பண்ணையின் மேலாளர், **சீங்க்**.

இந்த மூன்று கதாபாத்திரங்களின் வழியாகத்தான், போலி சோசலிசம் வீழ்ந்து கொண்டிருந்த காலத்தில், கிழக்கு ஜெர்மன் மக்களின் சமூக - அரசியல் வாழ்க்கையும், மனோ நிலையும் படம் பிடித்துக் காட்டப்படுகிறது.

கிழக்கு ஜெர்மனியின் பொருளாதாரத்தில் ஆப்பிள் உற்பத்திக்கும், ஏற்றுமதிக்கும் முக்கியப் பங்குண்டு. போலி சோசலிச ஆட்சியின் இறுதி நாட்களில், ஆப்பிள் பழங்கள் விற்பனையாகாமல் தேங்கத் தொடங்குகின்றன. பண்ணையெங்கும் ஆப்பிள் பழங்கள் கூடை கூடையாக வீணாகி, நாதியற்றுத் தரையில் கொட்டிக் கிடக்கும் காட்சிகள் வந்து போகின்றன. மேலிடத்தில் ஏதோ கோல்மால் நடப்பதுதான் இந்தத் தேக்கத்திற்கு காரணம் என்று குற்றம் சுமத்துகிறான் தொழிலாளி ஹீன்ஸ்.

பண்ணைத் தொழிலாளிகள், ஆப்பிள் தேங்கிக்கிடப்பது பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்க, பண்ணையின் மேலாளர் சீங்க் மேற்கு நாடுகளில் தான் ரகசியமாகப் போட்டு வைத்திருக்கும் கருப்புப் பணம் பற்றிக் கவலைப்படுகிறான். சககட்சி உறுப்பினரான லீனாவை, அதாவது ஹீன்ஸின் மனைவி லீனாவை எப்படி அடைவது என்று கவலைப்படுகிறான்.

நோயாளியான சீங்க்கின் மனைவியே தனது கணவனின் காம இச்சைக்கு லீனாவை இணங்கச் செய்ய மறைமுகமாக வேலை செய்கிறாள். கட்சியில் சீங்க் பெரிய ஆளாக வருவான் என்று எதிர்பார்த்துத் தான் தந்தை அவனுக்குத் தன்னைத் திருமணம் செய்து வைத்ததாகக் கூறி லீனாவுக்கு ஆசை காட்டுகிறான்.

மேற்கு ஜெர்மனியின் முதலாளித்துவத்திலும், நுகர்பொருள் கலாச்சாரத்திலும் மயங்கிக் கிடக்கும் லீனா, சீங்க்கின் ஆசைக்கு இணங்குகிறாள். “உனது கழுத்தில் கண்டிப்பாக நான் தாலி கட்டுவேன்” என சத்தியம் செய்யும் நம்மூர் வில்லன்களைப் போல, லீனாவை மேற்கு ஜெர்மனிக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி, தனது இச்சையைத் தீர்த்துக் கொள்கிறான், சீங்க்.

சீங்க்கின் உதவியோடு திருட்டுத்தனமாக மேற்கு ஜெர்மனிக்குத் தப்பித்து ஓடிவிட லீனா முயலுவது தோல்வியில் முடிகிறது. அவள் மே.ஜெர்மனியில் கைது செய்யப்பட்டு பின் விடுவிக்கப்படுகிறாள்.

லீனாவின் ஆசைக் கனவுக்குத் தடையாக, குறுக்கே நின்ற பெர்லின் சுவர், அடுத்த சில நாட்களிலேயே நொறுங்கி விழுகிறது. பெர்லின் சுவர் இடித்துத் தள்ளப்படுவதை, தொலைக்காட்சியில் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கும் லீனா, சுதந்திர ஜோதியில் கலந்து விட முடிவெடுத்து, தனது கைக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு, மேற்கு நோக்கி ஓடுகிறாள்.

மேற்கில் உள்ள தனது கள்ளக் காதலனின் முகவரியை அலைந்து, திரிந்து, தேடிக்கண்டுபிடித்து, அழைப்பு மணியை அழுத்துகிறாள். சீங்க்கின் உருவம் ஜன்னலோரமாக நிழலாடுகிறது. அழைப்பு மணியை மீண்டும், மீண்டும் அழுத்துகிறாள். ஆனாலும் அவன் வெளியே வரவில்லை.

ஏமாற்றமும், சோர்வும் தாக்க, எங்கே


படிப்பகம்

www.padippakam.com

போவது எனத் தெரியாமல், நகரத்துத் தெருக்களில் அலைகிறாள் லீனா. நியான் விளக்குகளின் வெளிச்சம் தார்ச்சாலையை ஜொலிக்க வைக்கிறது. "ஷோ-கேஸ்களில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் பொருட்களை 'ரசித்து'ப் பார்க்கக் கூட மனமின்றி நடக்கும் மரியா, ஒரு ரொட்டிக் கடை முன் நிற்கிறாள்.

உள்ளே அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் ரொட்டி; வெளியே, கையில் குழந்தையோடு மரியா. ரொட்டித் துண்டுகளும், மரியாவும் இணைக் காட்சிகளாக அடுத்தடுத்து காட்டப்படுகின்றன. முதலாளித்துவ சுதந்திரத்தின் கீழ் கையில் காசில்லாமல் ஒரு ரொட்டித் துண்டு கூடக் கிடைக்காது என்பது மரியாவுக்குத் தெரியும். ரொட்டிக் கடையை விட்டு அகன்று நடக்கிறாள். சிறிது தூரம் சென்றவுடன், தெருவின் நடைபாதையில் குழந்தையைக் கிடத்தி விட்டு அதனருகில் சுருண்டு படுக்கிறாள்.

இப்பொழுது ஜெர்மனி ஒன்றுபட்டு விட்டது. தங்களது கூட்டுறவுப் பண்ணை தனியாருக்கு விற்கப்படுவதை எதிர்த்து தொழிலாளர்களைத் திரட்டுகிறான் ஹீன்ஸ். மேற்கு ஜெர்மனியின் மயக்கத்திலிருந்து விடுபட்ட லீனாவும் அவனது போராட்டத்திற்கு ஆதரவாக நிற்கிறாள்: பண்ணையை எவனுக்கோ விற்பதை விடத் தொழிலாளர்களே பணம் போட்டு அதை வாங்கிவிடலாம் என்கிறான் ஹீன்ஸ்.

ஆனால் தொழிலாளர்களிடம் ஏது அவ்வளவு பணம்? நிர்வாகியாக இருந்து பண்ணையின் சொத்தைத் திருடிச் சேர்த்த சீங்க்கிடம் பணம் கேட்கிறான் ஹீன்ஸ். தன்னிடம் பணமில்லை என அவன் கை விரிக்கிறான்.

சில நாட்களில் கூட்டுறவுப் பண்ணை தனியார்வசமாகிறது. பண்ணையை வாங்கியவன் சீங்க் தான் எனப் பின்னர் தெரிய வருகிறது. புல்டோசர் ஒன்று கூட்டுறவுப் பண்ணைக்குள் பெரும் சத்தத்தோடு நுழைகிறது. ஒரு ஆப்பிள் மரம் வேரோடு பிடுங்கப்பட்டு தூக்கியெறியப்படுகிறது. அடுத்தடுத்து, ஆப்பிள் மரங்களை ஒவ்வொன்றாகப் பிடுங்கிக் கொண்டே, செல்கிறது புல்டோசர்.

* * *

1989 நவம்பரில் ஜெர்மன் இணைப்பு தொடர்பாக கிழக்கு ஜெர்மனியில் நடந்த கருத்துக் கணிப்பில் 27 சதவீதம் பேர் இணைப்புக்கு ஆதரவாகவும், 71 சதவீதம் பேர் இணைப்புக்கு எதிராகவும் வாக்களித்தனர். இருப்பினும் இணைப்பு நடந்தது.

அந்த 27 சதவீதம் பேர் வேறு யாருமல்ல. கட்சியின் அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு சொந்த நாட்டையே கொள்ளையடித்த சீங்க் போன்ற அதிகார வர்க்கத்தினர்; முதலாளித்துவத்தின் நுகர்வுக் கலாச்சாரத்திலும், தனிநபர்வாதத்திலும் மூழ்கிக் கிடந்த லீனா போன்ற நடுத்தர வர்க்கத்தினர்.



இயக்குநர்
ஹெல்மா சாண்டர்ஸ் [illegible]

போலி சோசலிச ஆட்சியாயிருப்பினும் கிழக்கு ஜெர்மனி மக்கள் உணவு, உடை, வீடு போன்றவற்றிற்கு அரசு தந்த மானியம் காரணமாக தமது வருமானத்தில் குறைந்த பங்கையே செலவழித்து வந்தனர். ஆனால், நுகர் பொருட்கள் மீதான மோகம் நடுத்தர வர்க்கத்தைப் பிடித்து ஆட்டியது. ஜெர்மனி இணைந்து விட்டால், மேற்கு ஜெர்மனியின் நாணய விகிதத்தில் வருமானம் பெற்றால், தற்போது மலிவு விலையில் கிடைக்கும் வீடு, உணவு, உடை போக மேற்கண்ட நுகர்வுப் பொருட்களும் "போனசாக" கிடைக்கும் என கி. ஜெர்மனி நடுத்தர வர்க்கம் கனவு கண்டது.

ஆனால் இணைப்புக்குப் பின் நடந்ததென்ன? ஹீன்ஸ் போன்ற தொழிலாளர்கள் வேலையிழந்தனர். இணைப்பு நடந்த சில வாரங்களிலேயே, எட்டு இலட்சம் (கிழக்கு) ஜெர்மனி தொழிலாளர்கள் வேலையிழந்து விட்டதாக ஒரு புள்ளி விவரம் கூறுகிறது.

கிழக்கு ஜெர்மனிப் பெண்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த கருக்கலைப்பு உரிமை. சம வேலை வாய்ப்பு, சம ஊதிய உரிமை போன்றவை பறிக்கப்படும் அபாயம் எழுந்தது. ஜனநாயகம் என்ற போர்வையில், தொழிலாளர்களின் பொருளாதார அரசியல் உரிமைகள் பறிக்கப்பட்ட அதே சமயம், புதிய நாஜிக் கட்சிகள் மீதான தடைகள் நீக்கப்பட்டன. சுருக்கமாகச் சொன்னால், (கிழக்கு) ஜெர்மனி இருந்ததையும் இழந்து, புதிதாக எதையும் பெறாத நிலைக்குத் தள்ளப்பட்டது.

இணைப்பின் போது மேற்கு ஜெர்மன் அதிபராயிருந்த ஹெல்மெட் கோல், கிழக்கு ஜெர்மன் இணைப்பு நமக்கு 2000 ஆண்டில் 1,17,300 கோடி ரூபாய் லாபத்தைத் தரும் என்று அறிவித்தார். லீனாவுக்குத் தரப்பட்ட சுவரைத் தாண்டும் சுதந்திரத்திற்கும் பட்டினி கிடக்கும் சுதந்திரத்திற்கும் வசூலிக்கப்பட்ட கட்டணம் இது.

ஜெர்மன் இணைப்பால் சீங்க் பெற்றது ஆப்பிள் தோட்டம். சீமன்ஸ், பென்ஸ், ஓபல், தாய்ல்மர், வோக்ஸ்வாகன் போன்ற ஜெர்மன் ஏகபோக முதலாளிகள் பெற்றதோ பல லட்சம் கோடி மதிப்புள்ள கிழக்கு ஜெர்மனியின் சொத்துக்கள் மற்றும் மலிவான உழைப்பு. ஆனால் போலி கம்யூனிஸ்டு அதிகாரவர்க்கத்தை அம்பலப்படுத்திய இந்தத் திரைப்படம் ஜெர்மன் ஏகபோக முதலாளிகளைப் பற்றிக் கண்டு கொள்ளவில்லை.

ரசியாவிலும் சரி, பல கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் சரி கம்யூனிஸ்டுகள் என்ற பெயரில் ஆட்சியில் இருந்த அதிகார வர்க்க முதலாளிகள், மேலை ஏகபோக முதலாளிகளோடு கூட்டு சேர்ந்துதான் போலி சோசலிசத்தைக் கவிழ்த்திருக்கிறார்கள் என்பதற்கு இத்திரைப்படம் சான்று பகர்கிறது.

கட்சிக்குள் நிறைந்திருந்த நடுத்தர வர்க்கம் அதனுடைய முதலாளித்துவ மோகம் ஆகியவற்றின் வகை மாதிரி லீனா.

கம்யூனிஸ்டு கட்சியில் சேராமல் தானுண்டு தன் வேலையுண்டு என்றிருந்த தொழிலாளி ஹீன்ஸ், அதிகார வர்க்கத்தின் ஊழலைத் தட்டிக் கேட்கும் போதும், தாங்கள் உருவாக்கிய பண்ணையை எவனோ ஒரு முதலாளி அபகரிப்பதை எதிர்த்துப் போராடும்போதும் மெல்ல மெல்ல வர்க்க உணர்வு பெறத் தொடங்குகிறான்.

கம்யூனிசத்தின் 'தோல்வி' பெற்றெடுக்கப் போகும் புதிய கம்யூனிஸ்டுகளுக்கு அவன் ஒரு வகை மாதிரி ஆகக் கூடும்.



www.padippakam.com

வழக்கத்திற்கு மாறாக புரட்டாசி மாசத்திலும் வெய்யில் கொளுத்திக் கொண்டிருந்தது. அந்த உச்சி வெயிலிலும் தங்கையாவாண்டையாரின் வேலியினை மூங்கில் முள் வைத்து சீர் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தான் கண்ணன். எப்போதுமே சூரியன் கண்ணிலிருந்து மறையும் வரை சளைக்காமல் வேலை செய்பவன் அவன். ஆனால் இன்றைக்கு அவனால் இயலவில்லை. உடலெங்கும் வியர்த்துக் கொட்டியது. தசைகள் இறுக்கிக் கொண்டது போல் தோன்றியது. களைப்பினால் கை, கால்கள் குறக்களி இழுப்பது போல இருந்தது. கை, கால்களை நன்றாக உதறிவிட முயற்சி செய்தான். வலது காலை உதறும்போது பாதத்தில் சுளீரென வலித்தது. ஒரு வாரத்திற்கு முன் வீட்டிற்கு மண் சுவர் வைக்கும் வேலையில் மண்ணை நீர் சேர்த்து நன்கு கால்களால் பதம் வரும் வரை மிதித்த போது ஏதோ ஒரு பாடாவதி முள் அவன் காலில் குத்தியது. முள்ளைப் பிடுங்கி எறிந்த போது கடகடவென்று இரத்தம் வழிந்தது. சட்டென்று களி மண்ணையே பூசி ரத்தத்தை நிறுத்தியது ஞாபகத்திற்கு வந்தது. அதுதான் இப்போது ஊமைக்காயமாக வீங்கி வலித்தது.

வாண்டையார் வீட்டுச் சமையலறையில் இருந்து வழிந்து கொண்டிருந்த கழிவு நீர்க் குழாயில் கால்களை நீட்டிக் கழுவினான் அவன். பின்னர் தலையில் இருந்த தலைப்பாகையை அவிழ்த்து கால்களைச் சுத்தம் செய்தான். முள் குத்திய இடம் சற்று லேசாக சீழ் பிடித்திருப்பது தெரிந்தது. அருகிலிருந்த படலிலிருந்த ஒரு முள்ளை ஒடித்து லேசாக குத்தி புண்ணிலிருந்த சீழைப் பிதுக்கி எடுத்தான். புண்ணிலிருந்து ரத்தம் கசிய ஆரம்பித்ததும் ஏதோ வேதனை குறைந்தது போல தோன்றிற்று. தரையிலிருந்து எழுந்து மந்த கதியில் இயங்க ஆரம்பித்தான்.

கண்ணன் சுறுசுறுப்பின்றி பணியில் ஈடுபடுவதைக் கவனித்தவாறே வாசல் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தார் வாண்டையார். ''ஏலே! கண்ணா! என்னல ஆச்சு உனக்கு; ரொம்ப துரு துருன்னு இருப்ப இன்னிக்கு ஏண்டா அசமஞ்சம் மாறி நிக்குறே.'' ஐயாவின் குரல் கேட்டதும் தலையில் இருந்த முண்டாசை மீண்டும் அவிழ்த்து உடம்பின் வியர்வையைத் துடைக்க முற்பட்டான். சட்டென்று அவருக்குப் பதில் கூற இயலவில்லை. ஏதோ தொண்டையை நெருக்குவது போல உணர்ந்தான்.

அவன் சிரமப்படுவதை அவர் உணர்ந்திருக்கவேண்டும். ''ஏலே! கண்ணா! இஞ்ச வாடா!'' என்றவாறு தான் கொண்டு வந்த பையை தரையில் வைத்து விட்டு வராண்டாவில் உட்கார்ந்தார்.

பையைப் பிரித்து உள்ளேயிருந்து நன்கு பழுத்த வாழைப் பழங்கள் இரண்டினைப் பிய்த்து ஒன்றை கண்ணனிடம் நீட்டினார். ''ஏலே தின்னுல இத'' என்றவாறு ஒரு பழத்தை தோல் உரித்து தானே தின்ன ஆரம்பித்தார். ஒரு கையால் தலையைச் சொறிந்தவாறே கை நீட்டி வாழைப் பழத்தை வாங்கிய கண்ணன் தோலை உறித்து விழுங்க முற்பட்டான். தொண்டைக்குள் ஏதோ கவ்வி அடைப்பது போல இருந்தது. லேசாக விக்கினான்.

''என்னமோ தெரியல முதலாளி காலயிலருந்து எதையும் முழுங்க முடியல. ரொம்ப கஷ்டமா இருக்குதுங்க!''

''அட வெவரங்கெட்ட பயல இத்துணுண்டு வாழப்பழத்த முழுங்க இந்த முக்கு முக்குறியே! ஏதாவது தொண்டையில கட்டி கிட்டி இருக்கப் போவுது. காலம் கெட்டுப் போகல, நா பணம் தர்றேன் நீ எதுக்கும் திருவாரூர் போய் இன்னிக்கே டாக்டருகிட்டே காட்டிட்டு வந்துரு.

• • •

திருவாரூர் டாக்டரைப் பார்ப்பது ஒன்றும் அவ்வளவு எளிதான காரியமாக இருக்கவில்லை. ''டோக்கன் இருக்கா?'' முன்னாடியே போன்ல அப்பாயின்மெண்ட் இருக்கா?'' என்று அதட்டும் குரல்கள் கண்ணனுக்குப் புரியவில்லை. காத்திருந்து கடைசியாகப் பார்த்தான்.

டாக்டர் தலையில் வினோதமான விளக்குடன் சுழல் நாற்காலியில் அமர்ந்திருந்தார். கண்ணனுக்கு அவரைப் பார்க்க ஆச்சரியமாக இருந்தது. சற்று நொண்டிக் கொண்டே அவரருகில் இருந்த ஸ்டூலில் அமர்ந்தான். ''என்னப்பா?'' என்றார் கொட்டாவி விட்டுக் கொண்டே.

''தொண்டைல விழுங்க முடியுலங்க ரொம்ப சிரமமா இருக்கு. ஆதலையூர் வாண்டையார் அய்யா வூட்ல இருக்கேன் ஐயா தான் உங்கள வந்து பாக்கச் சொன்னாங்க''

''அப்படியா வாய நல்லாத் திறப்பா! ஆங் நாக்க நீட்டு'' என்றவாறு தலை விளக்கு ஒளியில் தொண்டையை ஆராய்ந்தார்.

''ஒண்ணும் இல்லப்பா! தொண்டை கொஞ்சம் புண் இருக்கு மருந்து மாத்திர எழுதித் தாரேன்! வாங்கி சாப்டிரு நல்லாப் போயிடும்'', என்றவாறு தலை விளக்கை அணைத்தார். மருந்துக் கடையில் சீட்டைக் காட்டியபோது மொத்தம் 300 ரூபாய்க்கு மேலே சொன்னார்கள். எல்லாவற்றிலும் ஒவ்வொரு மாத்திரை மட்டும் வாங்கிக் கொண்டான்.

ஒரு சில நாட்களுக்குப் பின்னரும் கண்ணனின் உடல்நிலையில் எவ்வித முன்னேற்றமும் இல்லை. மாறாக சிரமங்கள் தான் அதிகரித்திருந்தது. பணக் கஷ்டத்தினையும் மீறி மனைவியின் மூக்குத்தியினை அடகு வைத்து வாங்கிச் சாப்பிட்ட காது மூக்கு தொண்டை மருத்துவரின் மருந்துகள் பலனளிக்கவில்லை. இரவு சாப்பிடும் போது மிகவும் சிரமப்பட்டான். அவனது கஷ்டத்தைப் பார்த்து அவனது அம்மாவிற்கும், மனைவிக்கும் அழுகையே வந்துவிட்டது.

''வாணாங்க நமக்கு பிரிவேட் வைத்தியம் கட்டுப் படியாகாதுங்க, காரைக்கால் ஆசுபத்திரி ரொம்ப பெரிசுங்க அங்க நல்லா வைத்யம் பாக்குறாங்களாம் எங்க பெரியப்பாருக்கு வயித்துல கட்டி



## சிறுகதை:

# விசாரணை



படிப்பகம்

www.padippakam.com

வந்தப்போ கூட அங்கதான் சேத்தாங்க''

• ○ •

காரைக்கால் மருத்துவமனையில் காலைநேரம் கூட்டம் மிக அதிகமாக இருந்தது. அவனால் நீண்ட நேரம் வரிசையில் நிற்க இயலவில்லை. அவனை தூண் ஒன்றிற்கு அருகில் அமரச் செய்துவிட்டு அவனுக்குப் பதிலாக அவள் சீட்டு வாங்க முற்பட்டாள். அவள் முறை வந்ததும் ''ஏம்மா இது பொம்பளைங்களுக்கு மட்டும் சீட்டு கொடுக்குற இடம் உம் புருஷனுக்கு சீட்டு வேணும்னா அங்க போய் ஆம்பளைங்க வரிசையில நில்லும்மா'' என்று துரத்திவிட்டார் சீட்டுக் கொடுப்பவர். அரை மணி நேரம் வீணாகி விட்டதே என்ற பதைபதைப்புடன் அவள் ஆண்கள் வரிசையை நோக்கி ஓடினாள். ஆனால் அங்கு ஆண் நோயாளிகளே அவளைத் திட்டினர். ''நீ போம்மா இது ஆம்பளைங்க நிக்குற எடம் நடுவுல வந்து வந்து ஒரு பொம்மனாட்டி நின்னுகிட்டு'', கடைசியில் கண்ணனே வரிசையில் நின்று சீட்டு வாங்கினான். ''என்னயா பண்ணுது'' ''தொண்டைல விழுங்க முடியலங்க, தொண்டை டாக்டர பார்க்கணும்.''

''அதெல்லாம் முடியாது 'பொது மருத்துவம்' சீட்டுத் தர்றேன் வாங்கிட்டு போய் ஏழாம் நம்பர் ரூம்ல காட்டு அவுங்க சொன்னாத்தான் ஸ்பெசல் டாக்டர பார்க்கலாம்.'' கண்ணன் ஏழாம் நம்பர் அறையை நோக்கி நகர்ந்தான்.

கூட்டம் முண்டியடித்தது. ஒருவர்பின் ஒருவராக ஒட்டிக் கொண்டு டாக்டரின் மேசையினை நோக்கி நகர்ந்தனர். அவனது மனைவியும், அம்மாவும் ஆளுக்கொரு குழந்தைகளுடன் வாசலில் நின்றவாறு அவன் நகர்வதையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

கண்ணன் முறை வந்ததும் உட்கார ஏதாவது ஸ்டூல் இருக்கிறதா என ஆராய்ந்தான். அவனால் நிற்க இயலவில்லை, கைகளால் மேசையைப் பிடித்துக் கொண்டான். கால்களில் ஊமை வலி வலித்தது. கூட்டம் காரணமாக ஓ.பி. அறையில் இருந்த ஸ்டூல் எடுக்கப்பட்டு விட்டது. அப்போதுதானே நோயாளிகளை விரைவில் 'கிளியர்' செய்யலாம்.

''என்னயா அங்கயும், இங்கயும் பாக்குற உனக்கு என்ன பண்ணுதுன்னு சொல்லுய்யா!''

''தொண்டை அடைக்குதுங்க தண்ணி கூட விழுங்க முடியலங்க''

''சரி இப்டி குனி, 'வாயத்திற' என்றவாறு டார்ச் விளக்கின் ஒளியினை ''தொண்டையில் பீச்சினார். தொண்டை அழற்சியற்று இருந்தது. ''தொண்ட நல்லாத்தான இருக்குது அப்புறமென்ன எங்க வலிக்கு'' என்றவாறு தொண்டையின் வெளிப்புறம் கைகளால் தடவினார்.

''வலிக்கலீங்க, விழுங்கதான் முடியல''

அதற்குள் அருகிலிருந்து மற்றொரு மருத்துவர் டாக்டர் சங்கர் ''தண்ணியத்தான் முழுங்க முடியலங்குறான், ஹைட்ரோபோபியாவா இருக்க போகுது நல்லாப் பாருங்க!''

''நாராயணா ஒரு டம்ளர் தண்ணீர் கொண்டு வாப்பா'' என்று தன் உதவியாளனைப் பார்த்து கூறினார் டாக்டர். கண்ணனுக்கு ஹைட்ரோபோபியா விளங்கவில்லை.

தண்ணீர் வந்ததும் ''இத குடியா''. மேசையைப் பிடிக்காமல் நிற்க முற்பட்டான். கால்கள் வலித்து. கைகள் விறைப்பது போல இருந்தது. டம்ளரைப் பிடிக்க சிரமப்பட்டான். நிற்க இயலாமல் தடுமாறினான். தண்ணீரைக் குடிக்க முயற்சித்தான். தொண்டை மேலும் இறுகி தண்ணீர் இறங்க மறுத்தது. அவன் நிலையை நினைத்து அவனுக்கே கண்களில் நீர் பொங்கியது. தடுமாற்றத்துடன் தண்ணீரைக் கீழே வைத்தான்.

டாக்டர்களின் இரண்டு ஜோடிக் கண்களிலும் ஏதோ புதிதாக ஒன்றைக் கண்டுபிடித்து விட்டதைப் போன்றதொரு வெளிச்சம் மின்னியது.

''ஏன்யா வீட்ல நாய் வளக்குறியா? நாய்கீய் ஏதும் கடிச்சதா?''

''நாய் இருக்குதுங்க ஆனா கடிக்கலீங்க!''

''ஏன்யா வர்றப்பா நொண்டுன?''

கால்ல ஒரு புண்ணுங்க''.

''என்ன புண்ணு, ஒரு நேரம் கூட உண்மையைச் சொல்ல மாட்டீங்க, சரி சரி பெட்ல சேந்துக்க போ!

அப்பாடி ஒரு வழியா பெட்ல இடம் கிடைத்ததே பெரியது என்று கண்ணன் மனது சந்தோஷப்பட்டது.

''நாராயணா இந்தக் கேசப் பாத்து அழைச்சுகிட்டு போப்பா. ரேபிஸ் (வெறி நாய்க்கடி) கேஸ் இது. தனியா ரேபிஸ் செல் இருக்குதுல்ல அங்க கொண்டு போய் விடு''

நாராயணன் அவனை வியப்புடன் பார்த்துக் கொண்டே இரண்டடி தள்ளியே நடந்து வந்தான்.

வாசலை அடைந்ததும் அவனது மனைவியும் அம்மாவும் ஆவலுடன் குறுக்கிட்டனர். ''பெட்ல சேக்க சொல்லிட்டாங்கல்ல'' ''நா சொன்னேல்ல காரைக்கா ஆசுபத்திரிதான் நல்ல ஆசுபத்திரி. டாக்டருங்க இங்க தங்கமானவங்க'' இரண்டு பேரும் தங்களுக்குள் பேசிக் குதூகலித்துக் கொண்டனர்.

''நீங்க இங்கேயே நில்லுங்கம்மா, அந்த வார்டுக்கெல்லாம் நீங்க வரக்கூடாது'' என்றவாறு நாராயணன் கண்ணனை மட்டும் அழைத்துக் கொண்டு ஒரு அறையில் விட்டுச் சென்றான். அங்கு கட்டில் இல்லை, வெறும் பாயும் தலையணையும்தான் இருந்தது. விளக்கும் இல்லை. அறை இருட்டாக இருந்தது. சிறை போல ஒரு கம்பிக் கதவும் இருந்தது. நாராயணன் அதையும் இழுத்து வெளியில் பூட்டினான்.



## க் கமிஷன்



படிப்பகம்

www.padippakam.com

"நீ எது வேண்ணும்னாலும் என்னக் கூப்புடு, வெளியே போகக் கூடாது அப்பத்தான் உனக்கு நல்லா போகும்" என்றவாறு நகர்ந்தான். ஏதும் புரியாமல் சற்று நேரம் நின்ற கண்ணன் அசதியால் பாயில் படுத்து சற்றைக்கெல்லாம் உறங்கிப்போனான்.

வந்து மூன்று நாட்கள் ஆகிவிட்டது. அம்மாவையும், பிள்ளைகளையும் பெண்டாட்டியையும் இப்படி கம்பிக்கு வெளியே ஜெயில் போல பார்ப்பது அவனுக்கு கஷ்டமாக இருந்தது. டாக்டர்களும், நர்சுகளும், ஏனோ அவன் அருகில் வர பயந்தார்கள். ஆனால் அவன் ஆசைக்கு மாறாக நோய் மட்டும் அவனை மேலும் மேலும் நெருங்கி வர ஆரம்பித்தது. கணவனின் நிலை பற்றி அறிய அவன் மனைவி டாக்டர்களின் பின்னாலேயே திரிந்தாள். இடுப்பில் குழந்தையுடன் அவளைக் கண்டாலேயே டாக்டர்கள் எரிந்து விழுந்தனர். "ஏம்மா சும்மா சும்மா வந்து தொல்லை பண்ற, நர்சம்மாகிட்ட எல்லாம் சொல்லியிருக்கோம் போய் கேட்டுக்க போ" என்ற பதிலுடன் நகர்ந்தனர். நர்சுகளுக்கு காசு கொடுக்க வசதி இல்லாததால் அவர்களும் உதடுகளைப் பிதுக்கினர்.

ஒருமுறை டீயினைப் பகிர்ந்து கொண்டபோது நாராயணன்தான் அவர்களிடம் எல்லாவற்றையும் கூறினான். வெறிநாய்க்கடி நோய் வந்திருக்காம். இனி பொழைக்கவே முடியாதாம், செத்தா பாடியகூட குடுக்க மாட்டாங்களாம். இடி விழுந்தது போல அதிர்ந்து போனார்கள் இருவரும். பிறகு எங்கெங்கோ ஓடி யார் யார்கை கால்களிலோ விழுந்து 'காணாமல் போய் விட்டார்' என பேரேட்டில் எழுதி போலீஸ் மெமோ குடுத்து கண்ணனை விடுவித்தார்கள் அவர்கள்.

நடக்க சிரமப்பட்டவனை கைத்தாங்கலாக மருத்துவமனைக்கு வெளியே அழைத்து வந்த பிறகுதான் அவர்களுக்கு சற்று ஆசுவாசமாக இருந்தது. ஜனத்திரள் மிக்க அந்தக் கட்டிடத்தை மீண்டும் இருவரும் திரும்பிப் பார்த்த போது 'பொனத்தை கூட கொடுக்க மாட்டாங்க' என்று கர்ண கொடூர குரலே காதில் வந்து மோதியது. சொல்லி வைத்தாற்போல் அவனது அம்மாவும் மனைவியும் கேவிக் கேவி அழ ஆரம்பித்தனர்.

கண்ணனுக்கு அவர்கள் அழுவதின் காரணம் தெரியவில்லை. அவனுக்கு வைத்தியத்தை பாதியில் நிறுத்திவிட்டு வெளியில் வந்தது எரிச்சலை ஏற்படுத்தியது. "பாவி மக்க என்னய பொழைக்க விடமாட்டாளுவ" என்று முணுமுணுத்தபடி "இந்தா ஏ புள்ள ஏன் இப்படி சும்மா சும்மா

> **செத்ததுக்குக் கமிஷன் போட்டு விசாரிக்க, இவன் என்ன பெரிய ரங்கராஜன் குமாரமங்கலமா? வெறிநாய் கேசுன்னா பாடியே தரமாட்டாங்கன்னு அவன் பொண்டாட்டி பயந்துகிட்டிருக்கா. நீங்களே எல்லாத்துக்கும் ஏற்பாடு பண்ணினா ஜில் ஆயிடுவாங்க.**

ரெண்டு பேரும் அழுவுறிய! நா என்ன செத்தா போயிட்டன் இந்த ஆசுபத்திரி இல்லன்னா இன்னொரு ஆசுபத்திரி. அப்படியே பஸ்ச பிடிச்சு நாகப்பட்டினம் ஆசுபத்திரிக்கு போலாம் வாங்க" என்று காலு விந்தி விந்தி நடக்க ஆரம்பித்தான்.

"பொணத்த கூட கொடுக்க மாட்டாங்க" ஏதோ ஒரு குரல் மீண்டும் மீண்டும் ஒலிக்க "ஐயையோ"! ஆசுபத்திரியே வேணாங்க. நாம வீட்டுக்கு போலாங்க. இல்லைன்னா, மணக்கால் அய்யம்பேட்டை நாட்டு வைத்தியர்கிட்ட போலாங்க."

"ஏண்டி நா சாகணும்னு நினைக்கிறியா! இங்க மனுசனால நிக்க முடியல, நடக்க முடியல, என்ன வீட்டில கொண்டு போட்டு கருமாதி பண்ணவா, நீங்க வந்தா வாங்க வராட்டி போங்க, நா நாகப்பட்டினம் ஆசுபத்திரிக்கு போறேன்" என்றவாறு நடக்க ஆரம்பித்தான். பேச இயலாமல் விக்கித்த நிலையில் அவர்கள் இருவரும் அழும் குழந்தைகளை ஆளுக்கொன்றாக இடுப்பில் சுமந்தபடி அவன் பின்னாலேயே நடந்தார்கள்.

•○•

நாகப்பட்டினம் அரசு மருத்துவமனை அவர்கள் அடையும்போது மணி மாலை ஆறு மணிக்கு மேல் ஆகிவிட்டது. அவசர நோயாளிகள் பிரிவில் சீட்டு கொடுத்ததும் "கொஞ்சம் இருய்யா டாக்டர் வெளியே போயிருக்காங்க அவரு வந்ததும் நீ காட்டலாம்." சற்றைக்கெல்லாம் ஒரு செவிலியர் வந்து காலியாய் இருந்த மருத்துவர் நாற்காலியை வந்து பார்த்துவிட்டு அருகில் இருந்த பணியாளரிடம் "ஆமா! இன்னிக்கு டூட்டி யாரு? ராஜராஜன் சாருதான்?" என்றான் சந்தேகத்துடன்.

"ஆமாமா டாக்டர் ராஜராஜன்தான் வரணும் ஆனா இன்னிக்கு அவரு வர மாட்டார் போல அவருக்கு வேளாங்கண்ணில ஏதோ அவசர ஆப்பரேசனாம் அதனால நம்ம கண் டாக்டர் மகேஷ்தான் அவருக்கு பதிலா வர்றதா போன் பண்ணுனார்."

"இவரும் கிளினிக் போயிட்டாரோ என்னவோ? இன்னும் ஆள காணலியே, இந்த கலெக்டர் கெடுபிடி வேற ஜாஸ்தியா இருக்கு, வாசல்ல இவனுங்க தொந்தரவு வேற" அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அந்த மஞ்சள் நிற மாருதி வகை ஜென் கார் உள்ளே நுழைந்தது. வருவது டாக்டர்தான் என ஊகித்த நோயாளிகள் எழுந்து நிற்கலாயினர்.

"என்ன சார் முந்தா நா முழுக்க நீங்கதான் டூட்டி, கிளினிக்கும் நீங்கதானா? என்றான் பியூன் விஷயம் தெரியாதவன் போல.

"ஆமாய்யா நாந்தான் இங்க வந்து ஜூனியரா மாட்டிக்கிட்டேன்" என்று அலுத்தவாறு நாற்காலியில் அமர்ந்தார். ஒவ்வொருவராக வரிசையில் சென்றனர். கண்ணனின் முறை வந்ததும் அவரிடம் சீட்டை நீட்டினார். "என்ன பண்ணுதுய்யா?" அவனால் உடன் பதிலளிக்க இயலவில்லை. அவன் மனைவி உதவிக்கு வந்தாள். "நல்லா பேச முடியலிங்க, தொண்டைய அடைக்குதான், தண்ணி கூட விழுங்க முடியல, காரைக்கால் ஆசுபத்திரிக்கு போனோம், நாய்க் கடின்னு சொல்லிட்டாங்க, ஆனா நாய் கடிக்கலீங்க."

"ஓ! ரேபிசோ, என்ன எழவோ இருக்கட்டும், உம் புருசன பெட்டுல சேர்க்கலாம்மா, நான் கண் டாக்டர்தான், நாளைக்கு காலைல வேற பெரிய டாக்டர் வந்து பாப்பாரு, போ போய் பெட்ல சேந்துக்க" பொது வார்டிலேயே சேர்க்கப்பட்டதில் கண்ணனுக்கும், அவன் மனைவிக்கும் சற்று ஆறுதலாக இருந்தது. கொடுக்கப்பட்ட பாயை வெராண்டாவின் ஓரமாக விரித்து அதன்மீது சுருண்டு படுத்துக் கொண்டான். ஏதோ சில மாத்திரைகள் மட்டும் தரப்பட்டன.

அடுத்த இரண்டு மூன்று நாட்களுக்கு பாலும் பன்னும் கிடைத்தன. வெள்ளைக் கோட் அணிந்த டாக்டர்கள் மாறி மாறி வந்து சற்று தள்ளி நின்றே இவனைப் பற்றி விசாரித்தனர். "டாக்டருங்க ஏங்க அவரப் பாக்க மாட்டேங்குறாங்க?" அதற்குள் ஒரு நர்சிடம் நட்பு ஏற்படுத்திக் கொண்டிருந்த கண்ணனின் மனைவி அவளிடம் கேட்டாள்.

"இந்த சைடு பெட்ல இருக்கிறவங்கெல்லாம் டாக்டர் ராஜராசன் சார் பாக்க வேண்டியது, அவரு வெளியூர் போன


படிப்பகம்

www.padippakam.com

வரு. ரெண்டு மூணு நாள் லீவு போட்டுட்டாரு; நாளைக்கு எப்படியும் வந்துருவாரு. வந்து உம் புருசன பாப்பாரு,'' நர்சின் பதில் அவளுக்கு சற்று ஆறுதல் அளித்தது. எப்படியாவது நல்லது நடந்தால் சரி.

ஆனால் அன்று இரவே கண்ணனுக்கு நோய் மிகவும் தீவிரமடைந்தது. அவனுக்கு அடிக்கடி வலிப்பு ஏற்படலாயிற்று. அடிக்கடி ஏற்பட்ட வலிப்பு காரணமாக நினைவு தப்பிப் போனது. உடல் விரைத்தும் போய் கைகால்கள் வில் போல வளைந்து போயிற்று. அவன் அம்மாவும், மனைவியும் ஒப்பாரி வைக்க ஆரம்பித்தனர். செவிலியர் வந்து மெல்ல பேசி அவர்கள் இருவரையும் வார்டை விட்டு வெளியேற்றினார். வெளியில் இருந்தபடியே இரவு முழுவதும் அவர்கள் இருவரும் வாய்விட்டு அழுது கொண்டிருந்தனர். காலை ஏழு மணிக்கெல்லாம் டாக்டர் ராஜராஜன் வந்து வெளி நோயாளிகள் பகுதியில் அமர்ந்ததுமே வார்டின் செவிலியர் அவரிடம் ஓடி வந்து ''சார் முந்தா நா உங்க டூட்டிய மகேஷ் சார் பார்த்தார் சார் அப்போ அட்மிஷன் ஆன பேஷண்ட் ஒண்ணு ரொம்ப சீரியசா இருக்கு சார்; நீங்க வந்து கொஞ்சம் பார்த்துட்டுப் போயிடுங்க'' என்றார்.

''அப்படியா வர்றேன் சிஸ்டர் என்ன டயக்னோசிஸ் போட்டிருக்காங்க''

''ரேபிஸ் கேஸ் போலருக்கு சார்''

''என்ன ரேபிசா? நம்ம ஆஸ்பத்திரிலதான் செல் வசதி இல்லையே கேச வந்த உடனேயே தஞ்சாவூருக்கு ரெஃப்பர் பண்ணியிருக்கலாமே; இந்த கேசெல்லாம் ஜெனரல் வார்டுல போடக் கூடாது'' என்றவாறு வார்டை நோக்கி நடந்தார்.

வார்டின் மூலையில் வில்போல விரைத்துக் கிடந்தான் கண்ணன். முதுகெலும்பு வளைந்து 'எஸ்' போல காட்சி அளித்தது. வெளிச்சத்திற்காக டார்ச் லைட் ஏற்றப்பட்டதும் தசை துடிக்க ஆரம்பித்து, வலிப்பு ஏற்பட்டது. டக்கென்று டார்ச்சை அணைத்தார் டாக்டர் ராஜராஜன். குனிந்து அவனருகில் அமர்ந்து ஆராய்ந்தார். காலில் புண் புரையோடிருப்பதை அறிய முடிந்தது.

''நோ! காட் இது ரேபிஸ் இல்ல, டெட்டனஸ்'' சட்டென்று எழுந்து மருத்துவர்கள் ஓய்வு அறைக்குப் போனார். டாக்டர் மகேஷ் அப்போதுதான் வந்திருக்க வேண்டும். கண்ணாடி முன்பு நின்று கோட்டை சரி செய்து கொண்டிருந்தார். இவரைப் பார்த்ததும் ''என்ன பாஸ் எல்லாம் சரியா இருக்கா?'' என்றார் சற்று கிண்டலுடன். ''ஏம்ப்பா முந்தா நா ஒரு ரேபிஸ் கேஸ் அட்மிஷன் போட்டியா? ஆமா சார் காரைக் கால்ல ரேபிஸ்ன்னு டயக்னோசிஸ் பண்ணியிருந்தாங்க ரேபிஸ்னா 100% மார்டாலிட்டிதான். பேஷண்டோட சாடிஸ் பேக்சனுக்காக அட்மிஷன் போட்டேன். என்ன ஆச்சு கேசு பூடிச்சா?'' என்றார். ''பாஸ்! தப்பு பண்ணிட்டீங்க பாஸ் அது ரேபிஸ் கேஸ் இல்ல டெட்டனஸ், கால்ல எவ்வளவு பெரிய புண் இருக்கு, ஓபிஸ்தோடோனஸ், பிட்ஸ் எல்லாம் வந்தாச்சு'' ''ஐய்யய்யோ இப்ப என்ன பாஸ் பண்றது?'' இரு தரப்பிலும் பல 'பாஸ்கள்' பரிமாறிக் கொள்ளப்பட்டன. ''நம்மகிட்ட ஆண்டி டெட்டனஸ் குளோபிலின் இருக்கான்னு தெரியல எதுக்கும் நீங்களே போய் ஸ்டோர்ல விசாரிச்சிட்டு வாங்க.''



சில நிமிடங்களுக்கெல்லாம் மீண்டும் தோன்றினார் டாக்டர் மகேஷ் 'பாஸ் அந்த ஊசி இல்லையாம், டிஸ்ட்ரிக்ட் மெடிக்கல் ஸ்டோர்லயும் இல்லையாம். வேணும்னா ஜெ.டிக்கிட்ட சொல்லி ஸ்பெசல் மெசஞ்சர் மூலமாக தஞ்சாவூர் அனுப்பி மருந்த வாங்கிட்டு வரச் சொல்லலாம். ஆர்.எம்.ஓக்கும், ஜெ.டிக்கும் தெரிஞ்சா கடுப்படிப்பாங்க இத்தின் நாள் என்ன பண்ணுனீங்க நீங்கன்னு. பாஸ் நைசா கேச தஞ்சாவூர் மெடிக்கல் காலேஜிக்கு ஷிப்ட் பண்ணிடலாமா?''

''அது முடியாது பாஸ் இனிமே, கேஸ் ரொம்ப சீரியசா இருக்கு, இப்ப போய் ரெபஃர் பண்ணுனா இத்தினி நாள் அங்க என்ன பண்ணுனீங்கன்னு கேப்பாங்கல்ல?''

''இப்ப என்ன சார் பண்றது? நீங்க தான் ஹெல்ப் பண்ணணும் கைகளைப் பிசைந்தார் டாக்டர் மகேஷ்.

''ஒண்ணும் வேணாம், இப்போது என்ன நாமதான டெட்டனஸ்ன்னு டயக்னோஸ் பண்ணியிருக்கோம். உங்க கேஸ் சீட்ட எடுத்து ரேபிஸ் செப்டிமீசியான்னு கன்ஃபார்ம் பண்ணுனதா போட்டுள்ளேன். கேஸ் எப்படியும் போயிடும், இனிமே போய் ஊசி பாசின்னு ஆர்.எம்.ஓ. கிட்டயும், ஜெ.டி.கிட்டயும் தொங்க வேணாம். கேஸ் போயிடுச்சின்னா, நீங்களே டெத் சர்டிபிகேட் எழுதிடுங்க அசல் செப்டிமீசியான்னு மட்டும் போடுங்க வேற என்ன பண்றது அவன் தலையெழுத்து அவ்வளவுதான்.''

''நீங்க வேற இவன் என்ன பெரிய ரெங்கராஜன் குமாரமங்கலமா? இவன் செத்ததுக்கு ஒரு கமிஷன் போட்டு விசாரிக்க. இன்னிக்கு டூட்டியையும் நீங்களே பாருங்க. கேஸ் போனதும் ஆம்புலன்ஸ் ஏற்பாடு பண்ணி பாடிய நீங்களே அனுப்ப ஏற்பாடு செய்யிங்க அது போதும். பிரச்சனை ஏதும் வராது. ஏற்கெனவே ரேபிஸ்னா பாடிய கொடுக்க மாட்டாங்கன்னு ரிலேட்டிவ் எல்லாம் பயந்துகிட்டு இருப்பாங்க. நீங்களே எல்லாத்துக்கும் ஏற்பாடு பண்ணினா 'ஜில்' ஆயிடுவாங்க அப்புறம் கோவிந்தன்தான் இன்னிக்கு ஆம்புலன்ஸ் டிரைவர். ஒரு அம்பது ரூப குடுத்து அவனுக்கு சரக்க ஏத்தி வுட்ருங்க அவன் பார்த்துப்பான் எல்லாத்தையும்.''

மிகவும் சுருக்கமாக அந்த அறைக்குள்ளேயே கண்ணனுக்கான நோயின் காரணமும் மரணத்தின் காரணமும் அந் சிறிய கமிஷனால் தீர்மானிக்கப்பட்ட ஆனால் அந்த 'கமிஷனின்' முடிவை தெரிந்து கொள்ளும் வாய்ப்பு கண்ணனுக்குக் கிடைக்கவேயில்லை.

• சிவசுப்ரமணிய ஜெயசே

www.padippakam.com

தொடர் கட்டுரை: 14



## சிறுபான்மையினருக்கு எதிரான ஆர்.எஸ்.எஸ்.இன் பொய்யும் புரட்டும்

# கிறித்தவ மதமாற்றமும் ஆர்.எஸ்.எஸ்.இன் வயிற்றெரிச்சலும்

**“வெளிநாட்டுப் பண உதவியுடன் கிறித்தவ மிஷனரிகள் தொடர்ந்து மத மாற்றத்தில் ஈடுபடுகின்றன. கல்வி, சேவை என்ற பெயரிலும் ஆசை காட்டியும், அச்சுறுத்தியும், அரிஜன - பழங்குடி மக்களை மதம் மாற்றுகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தை கன்னி மேரி மாவட்டமாக மாற்றவும், வட கிழக்கு மாநிலங்களில் ஒரு கிறித்துவ ராஜ்ஜியத்தையே உருவாக்கும் வண்ணம் பிரிவினை - பயங்கரவாத குழுக்களுக்கு உதவியும் செய்கின்றன. இந்த தேசத் துரோக நடவடிக்கைகள் அனைத்தும் தடை செய்யப்பட வேண்டும்.”**

**- ஆர்.எஸ்.ஸ்.இன் இறந்து போன கோல்வால்கர் முதல் உயிரோடு உலவும் இந்து முன்னணி இராம. கோபாலன் வரை பேசி வரும் நிரந்தர அவதூறு.**

மதமாற்றம் இந்து மதவெறியர்களை மதங் கொள்ள வைக்கும் ஒரு எரிச்சல். அதிலும் டி.வி.எஸ். ஐயங்கார் நிறுவனங்களைப் போல சுருதி சுத்தமாகச் செயல்படும் கிறித்துவ மதமும், அதன் மதமாற்ற முயற்சிகளும், ஆர்.எஸ்.எஸ். கும்பலின் வயிற்றைக் கலக்குகிறது. வயிறெரிந்து என்ன பயன்? பெரும்பான்மை மக்களுக்கு சமூக உரிமைகள் தர மறுக்கும் பார்ப்பனியம், மதம் மாறுபவர்களைத் தண்டிக்க வேண்டும் என்கிறது. மறுபுறம் தனது சாதிப் பிரிவினைகளால் வெளி மதங்களிலிருந்து வருபவரைச் சேர முடியாதபடி தடுத்து நிறுத்தவும் செய்கிறது. இப்படி இந்து மதம் எண்ணிக்கையில் குறைவதற்கான வாய்ப்பை அதன் (மனித விரோத) தர்ம சாஸ்திரங்களே வழங்குவதற்கு யார் என்ன செய்ய முடியும்?

தன் மதத்திலிருந்து வெளியேறுபவர்களை ‘மதத் துரோகிகள்’ என்று கூறட்டும். தேசத் துரோகி என்று ஏன் அழைக்க வேண்டும்? கடவுளர்களும், புனித நூல்களும் மாற்றப்படும் போது தேச பக்தி எப்படி திடீரென்று மாறிவிடும்? இப்பிரச்சினையில் நமது மையமான கேள்வி இதுதான். இனி இந்தியாவில் கிறித்தவ மத வரலாற்றையும், மதமாற்றம் நடந்த சில பகுதிகளைப் பற்றியும் சுருக்கமாகப் பார்ப்போம்.

★★★

ஏசுநாதரின் நேரடிச் சீடரான புனித தாமஸ் முதல் நூற்றாண்டிலேயே இந்தியா வந்து பிரச்சாரம் செய்ததாகக் கூறப்படுகிறது. எனினும் அப்போதைய கிறித்தவம் ஒரு மத நிறுவனமாக மாறியிருக்கவில்லை. எனவே வெறும் சமயக் கொள்கை பரப்புதல் என்பதோடு நின்றுவிட்டது. பத்தாம் நூற்றாண்டிற்குப் பிறகு, குறிப்பாக பதினைந்தாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் நடந்த மறுமலர்ச்சிக் கால எழுச்சிக்குப் பிறகே கிறித்தவ மதமாற்றம் ‘மிஷனரிகள்’ எனும் சமய நெறி பரப்பும் நிறுவனங்கள் மூலமாக உலகெங்கும் கொண்டு செல்லப்பட்டது.

அதற்கு முன் ‘கிறித்தவ மிஷனரிகளின்’ பொருள் இன்றிருப்பது போல் இல்லை. அப்போது போர்ச்சுகல், ஸ்பெயின், பிரான்ஸ் அடங்கிய ஐரோப்பியப் பகுதி இசுலாமியப் பேரரசில் இருந்தன. மேலும் மங்கோலியர்களின் படையெடுப்பும் அடிக்கடி நிகழ்ந்தன. 1245-ஆம் ஆண்டில் திருச்சபையைக் கூட்டிய போப் கிறித்தவ உலகத்தைப் பாதுகாக்கும் வழிகளை விவாதித்தார். அதன்படி மங்கோலியர்களின் அரசியல், இராணுவ விவரங்களை அறிந்து கொள்ளும் பொருட்டு ‘மிஷனரிகள்’ அனுப்பப்பட்டன. இப்படி தகவல் சேகரிக்கும் நிறுவனங்களாக இருந்த மிஷனரிகள் பின்னாளில் சமய நெறி பரப்பி மதமாற்றம் செய்பவையாகப் பரிணமித்தன.



அதன் பின் ஐரோப்பாவில் மறுமலர்ச்சிக் காலம் துவங்கியது. முதலாளித்துவப் புரட்சி நடப்பதற்கான சூழ்நிலைகள் அரும்ப ஆரம்பித்தன. ஐபீரிய தீபகற்ப நாடுகளான ஸ்பெயினும், போர்ச்சுகலும் வணிகம் செய்யவும், காலனிகளை உருவாக்குவதற்கும், இந்தியா போன்ற பழைய உலகிற்குப் புதிய கடல் வழிகள் கண்டுபிடிக்கும் முயற்சியில் போட்டியிட்டன. அப்படி வழி கண்டுபிடிக்கப்பட்ட நாடுகளைப் போட்டி தகராறின்றி ஸ்பெயினுக்கும், போர்ச்சுகல்லுக்கும் சரி பாதியாக பிரித்துக் கொடுக்கும் புனிதப் பணியினை போப் செய்து முடிக்கிறார். கூடவே கத்தோலிக்க மதத்தினைப் பரப்பும் கடமையையும் அறிவுறுத்துகிறார்.

அப்போது ஐரோப்பாவில் அழிந்து வந்த இசுலாமியப் பேரரசும், மத்தியக் கிழக்கின் புனித நகரமான ஜெருசேலத்தைக் கைப்பற்ற ஐரோப்பிய கத்தோலிக்க நாடுகள் துருக்கியுடன் நடத்திய சிலுவைப் போர்களும் மத உணர்வை அரசியல் விவகாரங்களோடு இறுக்கமாகப் பிணைத்தன. மேலும் மறுமலர்ச்சிக் கால எழுச்சியின் ஒரு விளைவாக ஜெர்மனியின் மார்டின் லூதர் கத்தோலிக்க திருச்சபையை எதிர்த்து ‘புராட்டஸ்டண்ட்’ எனும் லூதரனிசத்தைத் தோற்றுவித்தார். இது கிறித்துவ மதத்தின் கடுங்கோட்பாடு மற்றும் மூட நம்பிக்கைகளுக்கு எதிராக அம்மத வரலாற்றில் நிகழ்ந்த முதல் பிளவாகும். இவை அனைத்தும் வாத்திகனின் திருச்சபைக்கு, இழந்து போன கத்தோலிக்க மதத்தின் செல்வாக்கினை மீட்கும் அவசியத்தையும், விரிவாகப் பிரச்சாரம் செய்யும் தேவையையும் உணர்த்தின. சில மேற்கு ஐரோப்பிய நாடுகள் ‘புராட்டஸ்டண்ட்’ பிரிவிற்கு மாறினாலும் பல நாடுகள் மாறாமல் தடுத்து நிறுத்தப்பட்டன. சிற்றரசர்களும், பேரரசர்களும் கிறித்தவ மதப்பணிக்காக ஆள் பலமும், பண பலமும் ஒதுக்குமாறு வலியுறுத்தப்பட்டனர்.

1534-இல் இக்னேஷியஸ் லயோலா ஆரம்பித்த ‘ஜெசூட்ஸ்’ என்ற ஏசு சங்கம் இத்தகைய மிஷனரி மற்றும் பாதிரி துறவியர்களுக்கு முன்னோடியாக விளங்கியது. இதன்பின் பல்வேறு நாடுகளைச் சார்ந்த மிஷனரி அமைப்


படிப்பகம்

www.padippakam.com

புகள் தோன்றின. இவற்றில் போப்புக்கும் திருச்சபைக்கும் கட்டுப்பட்டவை ரோமன் கத்தோலிக்க பிரிவைச் சார்ந்தும், ஏனையவை புராட்டஸ்டண்ட் பிரிவைச் சார்ந்தும் இருந்தன. இருப்பினும் இரு பிரிவைச் சேர்ந்த மிஷனரிகளும் மத - தொண்டுப் பணிகளோடு தத்தமது நாட்டு ஆட்சியாளர்களின் காலனியாதிக்க நலன்களுக்குச் சேவையாற்றுவதையும் முக்கியமாகக் கொண்டிருந்தன. இனி இந்தியாவுக்குத் திரும்புவோம்.

**போ**ர்ச்சுக்கல் நாட்டின் கடலோடி நாயகனான வாஸ்கோடகாமா தென் ஆப்பிரிக்காவின் நன்னம்பிக்கை முனையைச் சுற்றி, மடகாஸ்கர் தீவு வழியாக இந்திய மாலுமிகளின் உதவியோடு கேரளத்தின் கோழிக்கோடு கடற்கரையில் 1498, மே மாதம் 27-ஆம் தேதி கரை இறங்கினார். ஆரம்பத்தில் போர்ச்சுக்கீசியர்களின் நோக்கம் வியாபாரம் செய்வதும் கிறித்தவ மதப்பிரச்சாரம் செய்வதும் என்பதாக இருந்தது. வலிமை வாய்ந்த இசுலாமியப் பேரரசினைப் போல கிறித்தவமும் அப்படி உருவாக வேண்டும் என்று திருச்சபையினால் ஊக்கங் கொடுக்கப்பட்ட போர்ச்சுக்கீசியர்கள் இந்தியாவில் குறிப்பாக கோவா, கேரளாவில் சுவிசேகப் பணியைத் துவங்கினர். முதலில் இந்தியாவும் கிறிஸ்தவ நாடுதான் என்று நம்பிய போர்ச்சுக்கீசியர்கள் பின்னர் அப்படி இல்லை எனப் புரிந்து கொண்டனர். எனினும் கேரளாவில் ஏற்கனவே சிரியன் கிறித்தவப் பிரிவு மக்கள் அரைகுறை கிறித்தவ மரபோடு இருந்ததாகக் கூறப்படுகிறது. இவர்களெல்லாம் முறையான கிறித்தவ மரபிற்கு உட்படுத்தப்பட்டு திருச்சபையின் வலைப்பின்னலில் சேர்க்கப்பட்டனர்.

ஆரம்பத்தில் அட்டாவடி வழிகள் மூலமாக மறை பரப்பிய போர்ச்சுக்கல் மிஷனரிகள் பின்னர் தமது வழிமுறைகளை மாற்றிக் கொண்டனர். இந்தியக் கிறித்தவ வரலாற்றில் கோவாவில் மட்டும் வன்முறைப் பாதையினை மேற்கொண்ட முதலும் - கடைசியுமான மிஷனரிகள் இவர்கள் மட்டுமே. அதேசமயம் தொண்டுப் பணியை துவக்கி வைத்தவர்களும் இவர்கள்தான். 1541-இல் பிரான்சிஸ் சேவியர் என்ற புகழ்பெற்ற பாதிரியார் கோவாவில் வந்திறங்கினார். இயேசு சங்க (ஜெசூட்ஸ்) நிறுவனரான இக்னேஷியஸ் லயோலாவின் சீடரான இவர், கப்பலை விட்டிறங்கி முதலில் தொழு நோயாளிகளின் மருத்துவமனைக்கு சென்றுவிட்டு பின்னரே ஆர்ச் பிஷப் அரண்மனைக்குச் சென்றார். அடுத்த வருடமே கோவாவில் புனித -ல் கல்லூரி நிறுவப்பட்டது. இது ஆசிய மற்றும் ஐரோப்பிய பாதிரிகளுக்கு பயிற்சி அளிக்கும் நிறுவனமாக விளங்கியது. சேவியரின் முயற்சியினால் கோவாவிலும், கேரளத்தில் மலபார் கடற்கரையிலும் ஆயிரக்கணக்கான மீனவர்கள் கிறித்தவத்தைத் தழுவினர். இந்தியாவில் பெருந்திரளான மக்கள் கத்தோலிக்கத்தில் இணைக்கப்பட்டது இதுவே முதன் முறை.

அதன் பின் ஏனைய ஐரோப்பிய நாடுகள் இந்தியாவின் செழிப்பான பொருளாதாரத்தைச் சுரண்டும் நோக்குடன் வணிகம் செய்ய வந்தன. போர்ச்சுக்கீசியர்கள் கோவா, டாமன், டையூவிலும், டச்சுக்காரர்கள் (ஹாலந்து) கொச்சியிலும், பிரெஞ்சுக்காரர்கள் காரைக்கால், பாண்டிச்சேரி, மாகேவிலும், ஆங்கிலேயர்கள் சென்னை, மசூலிப்பட்டினம், சூரத், கல்கத்தா என ஏனைய இந்தியப் பகுதிகளிலும் காலூன்றினர். இவர்களில் போர்ச்சுக்கீசியர்கள் கத்தோலிக்கப் பிரிவையும், ஏனைய நாடுகள் புராட்டஸ்டண்ட் பிரிவையும் சார்ந்திருந்தன. 17, 18-ம் நூற்றாண்டுகளில் இந்தியாவில் நிலை கொண்ட 'புராட்டஸ்ட்டண்ட்' நாடுகள் முதலில் முக்கியமாக வணிகத்தில் மட்டுமே ஆர்வம் கொண்டிருந்தன. பின்னரே மதமாற்றம் ஆசியாவில் தமது அரசியல் ஆதிக்கத்திற்கு உதவுமெனப் புரிந்து கொண்டனர். 17-ஆம் நூற்றாண்டில் முடிவுற்ற போர்ச்சுக்கீசியர்களின் மதமாற்றம் பெருமளவு மக்களைச் சேர்ப்பதில் தோல்வியுற்றது.

அதன் பின்னரே, 18, 19, 20-ஆம் நூற்றாண்டுகளில் பெருமளவு மக்கள் பல்வேறு மிஷனரிகளால் கிறித்தவர்களாய் மாறினர். இன்று இந்திய கிறித்தவ மக்களின் எண்ணிக்கை நார்வே, டென்மார்க், பின்லாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளின் மக்கள் தொகையை விட அதிகம். மொத்த கிறித்தவர்களில் 70 சத வீதம் பேர் தென்னிந்தியாவிலும், 30 சத வீதம் பேர் வடக்கிலும் வாழ்கின்றனர். அந்தந்த மாநிலங்களின் மொத்த மக்கள் தொகை விகிதத்தில் தமிழ்நாடு 5%, கேரளா 26%, ஆந்திரா 4%, கோவா 36%, நாகலாந்து 53%, மணிப்பூர் 19% என கிறித்தவ மக்களின் விகிதத்தைக் கொண்டிருக்கிறது. இப்படி பெருந்திரளான மக்கள் மதம் மாறுவதற்குக் காரணம் என்ன?

இந்து மதவெறியர்கள் கூறுவது போல் கிறித்தவ மிஷனரிகள் ஆசை காட்டியோ, அச்சுறுத்தியோ இதைச் செய்யவில்லை. பார்ப்பனியத்தின் கொடூரமான சாதிய சமூக அடக்குமுறையின் காரணமாக, தாழ்த்தப்பட்ட - பழங்குடியின மக்களின் விடுதலை ஆர்வமே முதன்மையான காரணம்.

**10**-ஆம் நூற்றாண்டில் இருந்து தீவிரமான பார்ப்பனமயமாக்கத்திற்கு உள்ளாகிய மாநிலம் கேரளம். வடக்கிலிருந்து வந்த நம்பூதிரிகள் சில பத்தாண்டுகளுக்குள்ளாகவே கேரளத்தின் சமூக பொருளாதார ஆதிக்கத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். நம்பூதிரி, நாயர், கம்மாளர், ஈழவர் மற்றும் புலையர் என்ற இறுக்கமான சாதிய அமைப்பு கொடூரமான விதிமுறைகளுடன் அமல்படுத்தப்பட்டது. அதற்கென்றே 'சங்கர ஸ்மிருதி' எனும் 'பார்ப்பன குற்றவியல்' சட்டத் தொகுப்பும் இயற்றப்பட்டது. மனுஸ்மிருதியின் கேரளப் பதிப்பான இந்நூலின் விதிமுறைப்படி தொலைவில் வரும் புலையரை ஒரு நம்பூதிரியின் கண்கள் பார்த்து விட்டாலே நம்பூதிரியைத் தீட்டுப்படுத்திய குற்றத்துக்காக அந்தப் புலையரைக் கொலை செய்யலாம். நாயர்களின் மணப் பெண்கள் தமது முதலிரவை நம்பூதிரிகளின் படுக்கையில் கழிக்க வேண்டும் போன்ற விதி முறைகள் இந்நூற்றாண்டின் ஆரம்பம் வரை அமலில் இருந்துள்ளன. கேரள சாதியக் கொடுமைகளைக் கண்ட விவேகானந்தர் கேரளாவை 'பைத்தியக்கா ர்களின் நாடு' என்றழைத்தார். கே ளாவில் இலட்சக்கணக்கான மக்கள் ஏன் மதம் மாறினர் என்பதற்கு இவையே கா ணங்கள். பார்ப்பனியத்தின் சமூக அடக் முறைக்கு எதிராக ஈழவ மக்களுக்கு தன்மானமளித்த நாராயண குரு தோன்று தற்கான காரணமும் இதுதான்.

காலனிய ஆட்சியின் போது கன்னிய குமரி மாவட்டத்தை உள்ளடக்கி தென் கே ளத்தை ஆண்டு வந்த திருவிதாங்கூர் சம தானத்திலும் ஆயிரக் கணக்கான மீனவ களும், நாடார் சாதி மக்களும் கிறித்தவத்தை தழுவினர். 'பள்ளு, பறை, சாணான், சக்

**1541-இல் பிரான்சிஸ் சேவியர் என்ற புகழ்பெற்ற பாதிரியார் கோவாவில் வந்திறங்கினார். இயேசு சங்க (ஜெசூட்ஸ்) நிறுவனரான இக்னேஷியஸ் லயோலாவின் சீடரான இவர், கப்பலை விட்டிறங்கி முதலில் தொழு நோயாளிகளின் மருத்துவமனைக்கு சென்றுவிட்டு பின்னரே ஆர்ச் பிஷப் அரண்மனைக்குச் சென்றார்.**



படிப்பகம்

www.padippakam.com

லியன்' என்ற தாழ்த்தப்பட்டவர்களின்படியமைப்பில் மூன்றாம் நிலையிலிருந்த சாணான் என்றழைக்கப்பட்டவர்கள் நாடார் சாதி மக்களாகும். நாடார் பெண்கள் மாராப்பு போடக் கூடாது என்ற பார்ப்பன அடக்குமுறையைக் கண்டித்து தமது போராட்டத்தின் மூலம் திருவிதாங்கூர் அரசை மாராப்பு போடக் கூடாது என்ற சட்டத்தை ரத்து செய்ய வைத்தார்கள் நாடார் சாதி பெண்களும், ஆண்களும். நாடார்கள் கோவில்களுக்குள் நுழையக் கூடாது என்பதை எதிர்த்து தனி கோவில், வழிபாட்டு முறை உருவாக்கினார் ஐயா வைகுண்ட நாதர். நாராயண குருவைப் போல குமரி மாவட்டத்தில் தோன்றிய இச்சீர்திருத்தப் பெரியவரின் கொள்கையை ஏற்றவர்கள் 'ஐயா வழி' மக்கள் என இன்றும் வாழ்கிறார்கள். எனவே குமரி மாவட்டத்தில் மதமாற்றம் எளிதில் நடந்தேறியதில் வியப்பில்லை.

ஒரிஸ்ஸாவின் சோட்டாநாக்பூர் பகுதியில் முந்த்தா ஆரோன், காரியா போன்ற பழங்குடியின மக்கள் வாழ்கிறார்கள். பார்ப்பன மேல் சாதி நிலப் பிரபுக்களிடம் நிலமிழந்து, வாழ்விழந்து அடிமையில் உழன்று கொண்டிருந்த இம்மக்களுக்கு பொருளாதார, கல்வி உதவிகளைச் செய்த மிஷனரிகள் வெகு விரைவிலேயே நம்பிக்கை நட்சத்திரமாய் மாறினார்கள். 19-ஆம் நூற்றாண்டில் கிறித்தவ மதத்திற்கு மாறிய இம்மக்கள், அதன் மூலமே ஓரளவிற்கேனும் தமது சுயமரியாதையையும், வாழ்க்கையையும் மீட்க முடிந்தது.




கிறித்தவர்களுக்கு எதிரான தாக்குதலைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்.

பெண் குழந்தை திருமணம், வல்லுறவில் இறந்து போகும் சிறுமிகளான மணப் பெண்கள், குலின் எனப்படும் பார்ப்பனப் பிரிவின் விதவைகள் விபச்சாரிகளாக மாறுவது, விதவைகளுக்கும் - விபச்சாரிகளுக்கும் பிறக்கும் கள்ளக் குழந்தைகள் ஒரு மாதத்தில் சராசரியாக 1000 வரை கொல்லப்படுவது இவையெல்லாம் வங்காள மாநிலத்தில் பார்ப்பன இந்து மதம் ஏற்றி வைத்த மணி மகுடங்கள்.

இத்தகைய பார்ப்பன ஒடுக்குமுறைகளை ஒழிக்க முகலாயப் பேரரசர்களும், முசுலீம் குறுநில மன்னர்களும் பெரிதும் முயன்றாலும் வெற்றி பெறவில்லை. பின்னர் மிஷனரிகளின் முயற்சியாலும், கிறித்தவக் கல்லூரிகளில் பயின்ற இராஜாராம் மோகன்ராய் போன்ற இந்து அறிவாளிகளின் போராட்டத்தினாலும் ஆங்கிலேய அரசு தடைச் சட்டங்களைக் கொண்டு வந்தது.

இனி இந்து மதவெறியர்கள் அபாயச் சங்கு ஊதும் வடகிழக்கு மாநிலங்களைப் பார்ப்போம். அஸ்ஸாமும் அதைச் சுற்றியுள்ள 6 மாநிலங்களும் அடங்கிய வடகிழக்குப் பகுதி ஏனைய இந்தியாவிலிருந்து இயற்கை, இனம், மொழி, பண்பாடு என பலவற்றிலும் வரலாற்று ரீதியாக பிரிந்தே காணப்படுகிறது. பிரம்மபுத்திரா, பாரக் நதிகளின் இரு பள்ளத்தாக்குகளும் இவற்றினைச் சுற்றி நெருக்கமான மலைகளும் இருக்கின்றன. மலைப் பகுதியில் மங்கோலிய இனப்பிரிவைச் சேர்ந்த பழங்குடியினர் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். இம்மக்கள் சீனா, திபெத் வழியாகப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பேயே குடியேறியவர்கள். பள்ளத்தாக்குப் பகுதியில் கலப்பின மக்கள் அதிகம் வாழ்கின்றனர்.

காமரூபம் என்று வரலாற்றில் அழைக்கப்படும் (ஆரியர்களை எதிர்த்து நின்ற) இப்பகுதியை வேதங்கள் 'கிராதகர்கள், மிலேச்சர்கள் வாழும் நாடு என குறிப்பிடுகின்றன. 13-ம் நூற்றாண்டில் பர்மிய மன்னரான அஹோமி இப்பகுதியை கைப்பற்றிய பின்னர் அவனது வம்ச ஆட்சி ஏறக்குறைய 6 நூற்றாண்டுகள் நீடித்தன. அஹோமி என்பதே பின்னர் அஸ்ஸாம் என்பதாக மாறிற்று. கி.பி. முதல் நூற்றாண்டிலிருந்தே ஆரியர்கள் அஸ்ஸாமில் குடியேற ஆரம்பித்தனர். பழங்குடி மக்கள் மலைப் பகுதிகளுக்கு விரட்டியடிக்கப்பட்டனர். பார்ப்பனியத்தின் வர்ண - சாதிச் சமூகமும், அதை நடைமுறைப்படுத்தும் சட்ட திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டன. பின்னர் அஹோமி வமிச மன்னர்களும் வைணவ இந்து மதத்தைத் தழுவியதும் ஆரிய மயமாக்கம் முழு வேகத்தில் நடந்தேறியது. தாந்திரீகம் எனப்படும் மந்திர வழிபாடும், நரபலி, நிர்வாண பூஜை, சக்தி வழிபாடு, என கொடூரமான சடங்குகள் வெறியாடும் பிரதேசமாக அஸ்ஸாம் மாறியது.

இதை எதிர்த்து வந்த புத்த மதம் நெடுங்காலம் செல்வாக்குடன் நீடித்தது. வட கிழக்கில் வர்ண சமூகம் குலைக்கப்பட்டு, புத்த மதம் வந்தது பற்றி ஆர்.எஸ்.எஸ். தலைவர் கோல்வால்கர் வருத்தப்பட்டார்! அதனால்தான் வங்கத்தில் இசுலாமும், வட கிழக்கு மாநிலங்களில் கிறித்துவமும் எளிதில் பரவியதாம். இன்றும் வட கிழக்கு இந்துக்களிடம் ஏனைய இந்திய இந்துக்களிடம் காணப்படும் அசமத்துவ சடங்குகள், இறைச்சி உண்பதில் பேதங்கள், கீழ்சாதியிடம் உணவு பெறுவதை தீட்டாகக் கருதுவது போன்ற பார்ப்பனப் பண்புகள் பெருமளவில் கிடையாது. காரணம் இம்மக்களிடம் மரபு ரீதியாக இருந்து வந்த பழங்குடியினப் பண்பாடுதான்.

1825-ஆம் ஆண்டு பர்மியர்களை ஆங்கிலேயர்கள் வென்ற பிறகு வடகிழக்கு மாநிலங்களில் காலனிய ஆதிக்கம் தொடங்கியது. அப்போதிருந்து கிறிஸ்தவ மிஷனரிகளின் தொண்டுப் பணியும் தொடங்கியது. பல்வேறு பழங்குடியின மொழிகளுக்கு கிறித்தவப் பாதிரிகள் ரோமானிய வரி வடிவம் கொடுத்தனர். தாய்மொழிக் கல்விக்கும், ஏனைய மருத்துவ பொருளாதார முன்னேற்றத்திற்கும் அவர்கள் ஆற்றிய பங்கு முக்கியமானதாகும். இதனாலேயே கேரளாவிற் அடுத்து இலட்சக்கணக்கான மக் இங்கே மதம் மாறினர்.

காலனிய ஆட்சியில் ஒன் அஸ்ஸாமாக இருந்த வடகிழக்கு வெள்ளையர்கள் வெளியே அஸ்ஸாம், அருணாச்சல் பி லாந்து, திரிபுரா, மிசோரா மேகாலயா என ஏழு இந்திய அரசால்



படிப்பகம்

www.padippakam.com

இவற்றில் 3 மாநிலங்கள் கிறித்துவப் பெரும்பான்மையினைக் கொண்டிருக்கின்றன. ஏராளமான பழங்குடியினப் பிரிவுகளும், மொழிகளும், அரைகுறை தேசிய இனங்களையும் கொண்டிருக்கும் இம்மாநிலங்கள் பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கி இருப்பதற்குக் காரணம் இந்திய அரசுதான். வரலாற்று ரீதியாக இந்தியாவுடன் பிரிந்திருந்த இம்மக்கள் இன்று தமது வாழ்வுரிமைக்காக இந்திய அரசை எதிர்த்து போரிடுகிறார்கள். இந்த போராட்டத்தை சீர்குலைக்கும் வண்ணம் அஸ்ஸாம் x போடோ, குக்கி x நாகா என ஒன்றுக்கெதிராக ஒரு இன மக்களை நிறுத்தி மோதவிட்டது இந்திய அரசின் சதி வேலையாகும். தற்போது அசாம் விடுதலைக்காக போராடி வரும் 'உல்ஃபா' இயக்கம் இந்துக்கள் அடங்கிய ஒரு குழுதான். அதனால் இவ்வமைப்பை இந்து மதவெறியர்கள் அங்கீகரிக்கிறார்களா என்ன? கூடுதல் இராணுவத்தைத்தானே அனுப்புகின்றார்கள். எனவே வடகிழக்குப் பிரச்சினைகளுக்கு கிறித்தவ மத மாற்றம் காரணமல்ல.

இந்தியாவில் மதமாற்றம் செய்ய வந்த மிஷனரிகளுக்கும் அவர்தம் நாடுகளுக்கும் ஆதிக்கம் செய்யும் நோக்கம் இருந்தது உண்மையே. ஆனால் மக்களோ, பார்ப்பனிய சாதிக் கொடுமைகளிலிருந்து விடுபடவே மதம் மாறினார்கள்.

பெரும்பான்மை மக்களுக்கு பார்ப்பனியம் மறுத்த கல்வியை கிறித்துவம் கொண்டு செல்ல முயன்றது. அஸ்ஸாமி, வங்க மொழி, தமிழ், ஒரியா, கன்னடம், தெலுங்கு, மலையாளம் போன்ற தேசிய மொழிகளில் முதன் முறையாகப் பள்ளிகளும், கல்லூரிகளும் நிறுவப்பட்டன. 18-ஆம் நூற்றாண்டிலேயே பெண்கள், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியின மக்களுக்கான கல்விக் கூடங்கள் நிறுவப்பட்டன: அச்சகங்களும், வட்டார மொழி நூல்களும் - பைபிளும் வெளியிடப்பட்டன. நவீன வங்க இலக்கியம் தோன்றுவதற்கு மிஷனரிகளே காரணமாயின. வீரமாமுனிவரும், பெர்க்ளி பாதிரியாரும் தமிழுக்குச் செய்த தொண்டு அளவிடற்கரியது. ஆங்கில - வட்டார மொழி அகராதிகள் வெளியிடப்பட்டன. இன்றும் இந்திய அளவில் 15 சதவீத பள்ளி மாணவர்களும், 10 சதவீத கல்லூரி மாணவர்களும் கிறித்தவ நிறுவனங்களில்தான் படிக்கின்றனர். 15% மருத்துவ சேவையும் கிறித்துவ மருத்துமனைகளால்தான் இப்போதும் அளிக்கப்படுகின்றது.

இப்படி கல்வி, வட்டார மொழி வளர்ச்சி, சுகாதாரம், மருத்துவம், சிறு தொழில்கள் என பல்வேறு சேவைகள் மூலம் கிறித்தவம் மக்களைக் கவர்ந்தது. சூத்திரரும், பஞ்சமரும் தங்களை முதன் முதலில் மனிதர்களாக மதித்தவர்களைக் கண்டனர்.

இருப்பினும் இந்திய மக்களைப் பெருமளவில் மதம் மாற்றுவதில் கிறித்துவம் தோல்வியுற்றது. பார்ப்பனியத்தின் சகல நோய்களையும் தீர்க்கும் வீரிய மருந்து பைபிளிடம் இல்லை. அதாவது பார்ப்பனியத்தின் சாதிய அமைப்பை மிஷனரிகளால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அதனாலேயே இந்தியக் கிறித்தவ மதம் பார்ப்பனியத்துடன் சமரசம் செய்து கொண்டு சாதிய அமைப்பையும் ஏற்றுக் கொண்டது. 1606-ஆம் ஆண்டு, மதுரையில் திருமலை நாயக்கன் ஆண்ட காலத்தில் மதப்பிரச்சாரம் செய்ய வந்தார் நொபிலி என்ற பாதிரியார். அவர் தன்னை பிரம்மா அனுப்பிய பார்ப்பனனென்றும், தன்னுடன் 5-வது வேதத்தைக் கொண்டு வந்திருப்பதாகவும் கூறிக் கொண்டார்.

1606-ஆம் ஆண்டு, மதுரையில் திருமலை நாயக்கன் ஆண்ட காலத்தில் மதப்பிரச்சாரம் செய்ய வந்தார் நொபிலி என்ற பாதிரியார். அவர் தன்னை பிரம்மா அனுப்பிய பார்ப்பனனென்றும், தன்னுடன் 5-வது வேதத்தை கொண்டு வந்திருப்பதாகவும் கூறிக் கொண்டார். அதன் மூலமே பார்ப்பன மேல் சாதியினர் உள்ளிட்டு ஒரு சிலரை மதம் மாற வைத்தார். மதப்பிரச்சாரம் செய்ய அனுமதியும் பெற்றார்.

அதன் மூலமே பார்ப்பன மேல் சாதியினர் உள்ளிட்டு ஒரு சிலரை மதம் மாற வைத்தார். மதப்பிரச்சாரம் செய்ய அனுமதியும் பெற்றார். இப்படி பார்ப்பன மேல் சாதியினர் தமது சாதிய சமூக சுரண்டலுக்கும் - ஆதிக்கத்திற்கும் கிறித்துவ மதம் தடையில்லை என உணர்ந்த பிறகே இந்தியாவெங்கும் கிறித்தவ மதமாற்றத்தை ஓரளவிற்கு அனுமதித்தனர்.

மேலும் மிஷனரிகளின் கல்வி - ஏனைய தொண்டுப் பணிகள் மூலமாக இந்து மதத்தின் மேல்சாதிப் பிரிவே கணிசமான ஆதாயங்களைப் பெற்றது. அப்படி காலனியாதிக்கத்தின் சலுகைகள் பெற்று பிழைப்புவாதிகளாக மாறியதும் இவர்களே. இன்றும் நாடெங்கும் உள்ள செயின் ஜோசப் - பீட்டர்ஸ் - ஜான்ஸ் - லயோலா போன்ற மிகப் பிரபலமான கிறித்தவக் கல்லூரிகளில் படித்து பயனடைபவர்களில் 90 சதவீதம் பேர் பார்ப்பன மேல்சாதி மேட்டுக்குடியினர்தான். அவ்வளவு ஏன், இன்று இந்து மதவெறியர்களின் பிரபல மான தலைவர்கள் பலரும் கிறித்துவக் கல்லூரிகளில் படித்தவர்களே!

இவையெல்லாம் கிறித்தவ மதமாற்றத்தின் இன்னொரு பக்கம்: பார்ப்பனியத்தின் கொடுங்கோன்மை காரணமாக கிறித்துவ மதத்தைத் தழுவிய கேரளம் கூட இன்று தலைகீழாக மாறிவிட்டது. கேரளத்தில் 'புதுக்கிறிஸ்தியானி' என்ற பெயர் மிகவும் பிரபலம். அதன் பொருள் தாழ்த்தப்பட்ட கிறித்தவ மக்கள் என்பதே. மேலும் இவர்கள் சமீபத்தில் மதம் மாறியவர்கள், பரம்பரை கிறிஸ்தவர்கள் அல்ல என்றும் ஒதுக்கப்படுகிறார்கள். அதே போல 'சிரியன் கிறிஸ்தவர்' என்ற 'பரம்பரைக் கிறித்தவப் பிரிவு' இந்துக்களின் நம்பூதிரி - நாயரைப் போன்ற மேல்சாதி கிறிஸ்தவர்களைக் குறிக்கும். இவர்களை 'தம்புரானே, பணிக்கரே' என்றுதான் தாழ்த்தப்பட்ட கிறித்தவ மக்கள் விளிக்க வேண்டும். மேலும் தீண்டாமையும் வாழ்க்கையின் சகல அம்சங்களிலும் உண்டு. தேவாலயங்களில் கூட சாதிகளுக்கேற்ப தனி வழிபாடுகள், அல்லது தனித் தேவாலயங்கள் என்பதெல்லாம் சகஜமாகி விட்டன. தமிழ்நாட்டின் பல கிறித்தவ இடுகாடுகளில் தாழ்த்தப்பட்ட கிறித்தவ பிணங்கள் நுழைய முடியாது.

எனவே இந்தியாவில் எந்த மதமானாலும், எத்தகைய உயர்ந்த கோட்பாடுகளைக் கொண்டிருந்தாலும் அவை பார்ப்பனியத்தின் சாதிய அமைப்பால் செரிக்கப்படும் என்பது கிறித்தவத்தின் வரலாற்றிலும் உண்மையாகிவிட்டது.

அதேசமயம் இத்தகைய பார்ப்பன இந்து மதத்தின் சாதிய - தீண்டாமைக் கொடுமைகளே இன்றைக்கும் தாழ்த்தப்பட்ட மக்கள் இசுலாம் - கிறித்தவ மதங்களுக்கு மாறுவதற்கு காரணமாகிறது. இவை இந்து மதவெறியர்களுக்கு தெரியும். அதனால்தான் சாதி - தீண்டாமையை ஒழிக்கிறோம் யாரும் மதம் மாறாதீர்கள் என்று கூறுவதற்குப் பதில், மதமாற்றத்தை ஒழிக்க வேண்டும் என்கிறார்கள். அதனாலேயே கிறித்தவப் பாதிரிகள் எரிக்கப்படுவதும், தேவாலயங்கள் இடிக்கப்படுவதும் தொடர்கின்றது. பார்ப்பனச் சாதிய அமைப்பு என்பது வெறும் சாதிய உணர்வு என்ற கௌரவம் - கருத்து மட்டுமல்ல. முக்கியமாக சமூக பொருளாதார சுரண்டல் நிறுவனமாக இருக்கிறது என்பதே அதன் பலம். மதமாற்றத்திற்கெதிரான இந்து மத வெறியர்களின் வெறுப்பும் - திமிரும் அதிலிருந்துதான் பிறக்கிறது.

— தொடரும்


படிப்பகம்

www.padippakam.com

# தில்லியில் குரங்கு மனிதன்



குரங்கு மனிதன் பீதியால் தில்லியே விழிபிதுங்கி நிற்கிறது. சாலையோரம் படுத்து கிடப்பவர்கள், இரவு நேரத்தில் தனியாக நடந்து வருபவர்கள் இவர்களை யெல்லாம் திடீரென குரங்கு மனிதன் தாக்கி காயப்படுத்துவதாக செய்திகள் பரவுகின்றன.

குரங்கு மனிதன் வந்துவிட்டான் என்ற செய்தியை கேட்டவுடனேயே கர்ப்பிணிப் பெண் உட்பட மூன்று பேர் மாடியிலிருந்து விழுந்து சாவு. குறிப்பாக தொழிலாளர்கள் அதிகமாக வசிக்கும் பகுதி, இரவு நேரத்து ரோட்டோர வியாபாரிகள் ஆகியோர், திடீர்திடீரென தாக்கும் குரங்கு மனிதனின் சேட்டைகளுக்கு இலக்காகி உள்ளதாக செய்திகள் வருகின்றன.

காயம்பட்ட சிலரை பரிசோதித்த மருத்துவர்கள் "இது மிருகங்களினால் ஏற்பட்ட காயம் அல்ல உலோகத்தினால் கீறிய மாதிரி உள்ளது எனவே குரங்கு மனிதன் என்பது வெறும் பிரமை என்று கருத்துக் கூறுகின்றனர்.

இந்திய பகுத்தறிவாளர் சங்கத் தலைவர் ஜோசப் இடமருகும் "குரங்கு மனிதன் என்பது பிள்ளையார் பால் குடித்த மாதிரி வெறும் புரளி. அங்கே பார்த்தேன் இங்கே பார்த்தேன் என்பதன் மூலம் ஒட்டு மொத்த மக்களிடம் இஸ்டீரியா வெளிப்பட்டுள்ளது" என்று குரங்கு மனிதன் பீதியை மறுத்துள்ளார்.

குறிப்பாக ஏழை மக்களுக்குப் போடும் ரேசன் அரிசியில் குரங்கு மனிதன் குபீரென பாய்ந்து மானியத்தை வெட்டியதால் ஆயிரக் கணக்கான குடும்பங்களுக்கு அடி வயிற்றில் படுகாயம் ஏற்பட்டுள்ளது.

கோவை மாவட்டத்தில் புகுந்த குரங்கு மனிதன் உள்நாட்டு பஞ்சையெல்லாம் பாய்ந்து பிடுங்கிவிட்டதால் தொழிலாளர்கள் மில்லுக்கே போக முடியாமல் மிரண்டு போயுள்ளனர்.

ஏப்ரல் ஒண்ணாந் தேதி எங்கிருந்தோ வரும் வெளிநாட்டுப் பொருள்கள் 1,427 வகைகளை இந்தியா முழுக்க குரங்கு மனிதன் வீசியெறிந்ததால் சிறு வணிகர்கள் எழுந்திருக்கவே முடியாத அளவுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

மேலும் தேங்காய், வெங்காயம் போன்ற பொருள்களை இறக்குமதி செய்து குரங்கு மனிதன் குறி பார்த்து அடிப்பதால் சிறு விவசாயிகள் அபாய கட்டத்தில் உள்ளனர். கையில் கிடைத்த பொருள்களால் மட்டுமின்றி இறக்குமதி செய்யப்பட்ட விநோதமான பொருட்களாலும் தாக்குவதால் இந்த குரங்கு மனிதனின் தொடர்பு சர்வதேச வலைப் பின்னலோடு இருக்கும் எனசந்தேகம் எழுகிறது.

இதைத் தேர்தல் நேரத்தில் தேசிய ஜனநாயக முன்னணி கூட்டங்களில் பார்த்ததாகவும் அவ்வப்போது நாடாளுமன்ற கட்டிடத்தின் பக்கம் நடமாட்டம் உள்ளதாகவும் கையில் இரும்புத் தடியோடு அலையும் தில்லி வாசிகள் பேசிக் கொள்கிறார்கள்.

சாதாரண எளிய மக்களைத் திடீரெனப் பாய்ந்து, பாய்ந்து தாக்கியதால் ஏற்பட்ட மூட்டுவலி அதிகரித்து "ஹேராம்! ஹேராம்..." என முனகியபடி மறைந்து விடுவதாகவும் தொழிலாளர்கள் பேசிக் கொள்கிறார்கள்.

மேற்கண்ட சம்பவங்களைக் கவனிக்கும்போது "தில்லியில் குரங்கு மனிதன்" என்பது வெறும் வதந்தி என்றும், ஆனால் தேசமெங்கும் நடமாடும் ஒரு குரங்கு மனிதன் தில்லியில் இருப்பதும் தெரிய வந்துள்ளது. எனவே உண்மையான குரங்கு மனிதனைப் பொதுமக்கள் தப்ப விடாமல் பிடிப்பது நாட்டுக்கே நல்லது. ●


## கோவை மறுகாலனியாதிக்க எதிர்ப்பு மாநாட்டு உரைகள் – ஒலிப்பேழைகளாக











வீட்டில், தெருவில், பள்ளியில், வயல் வெளியில், கரும்புத் தோட்டத்தில், கோழிப் பண்ணையில், கால்நடை வளர்ப்பில், தென்னந்தோப்பில், குளிர்பானங்களில், தேநீரில், சிறு தொழில்களில், கைத்தறியில், நெசவுத் தொழிலில், பொதுத் துறையில், நுகர்வுப் பண்பாட்டில் மொத்தத்தில் இந்திய மக்களைக் கொத்தடிமைகளாக்கும் மறுகாலனியாதிக்கத்தின் கொடூரத்தை இப்பேழைகள் உங்களுக்குப் புரிய வைக்கும். கோபம் கொள்ள வைக்கும்.

*10 பேழைகள் விலை ரூ. 300. தபால் செலவு ரூ. 40 குறைந்த படிகளே இருப்பில் உள்ளன. தேவைப்படுவோர் இரா. சீனிவாசன் பெயருக்கு வரைவோலை (DD) அல்லது பணவிடை (MO) எடுத்து புதிய கலாச்சாரம் அலுவலக முகவரிக்கு அனுப்பவும். பணம் கிடைத்த 4 நாட்களுக்குள் பேழைகள் உங்கள் கைகளுக்கு கிடைக்கும். நேரிலும் வரலாம். அலுவலக நேரம் காலை 10 முதல் 2 மணி வரை*




படிப்பகம்

www.padippakam.com



*சிறுகதை:*

# பெயரிடப்படாத பாம்புகள்

ஆஸ்துமா நோயாளியைப் போல பூனைஇழுப்பு இழுத்துக் கொண்டிருந்தது அடிபம்பு. சத்தத்தைக் கேட்டு குடிசையிலிருந்து தலையை நீட்டிய லெட்சுமிக்கு மகளைப் பார்த்ததும் பொச பொசவென்று வந்தது.

"நாயே இந்த கருவக்குச்சிய காயவையின்னு சொன்னா கேக்குறியா, ஊதி ஊதி உசுரே போவுது, கைய கால கழுவிட்டு, இப்ப எந்த மாப்பிள்ள வூட்டுக்கு கௌம்பிட்ட."

"தே மூஞ்ச பாரு மாரிமுத்து வூட்டுக்கு மாட்ட மேய்ச்சிட்டு இப்பதானே வந்தேன், சும்மாவா கெடந்தேன்."

"இல்லேன்னாலும் கிழிச்சிடுவ, போய் அடுப்ப ஊது மேலுக்கு தண்ணி ஊத்திட்டு வந்துடரேன்" லெட்சுமியின் பேச்சை தனம் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை. கூரைக்குள் செருகி வைத்திருந்த முகம் பார்க்கும் கண்ணாடியை எடுத்து வந்து வாசல் பக்கம் உட்கார்ந்தாள்.

"நாசமத்து போறதே அடுப்ப ஊதுன்னாக்கா மினுக்கிகிட்டு உட்கார்ந்திருக்கா, போய் ஊதுடி."

"ஆமாம் மினுக்குது, கண்ணாடியப் பாரு மோற எங்க தெரியுது? உன் மூஞ்சிக்கு மேல கருப்பாயிருக்கு. இந்த தீமிதிக்காவது ஒரு கண்ணாடி வாங்கு எதப் பாத்து தலை சீவரது?"

"ஆங், உன் அப்பன் எவருசிலுவரா வாங்கி அடுக்கி வச்சிருக்கு பாரு அதப் பாத்து தலய சீவு. பொங்கவே சோறு இல்லியாம் பொண்ணு பருப்பு கடைய மத்து கேக்குது."

ரசம்போன கண்ணாடியில் வெட்டுப் பட்டது போலத் திட்டுத் திட்டாய் முகம் தெரிய ஏத்தி இறக்கி பவுடரை அடித்துக் கொண்டிருந்தாள் தனம்.

"அய்யோ... அய்யோ பூசுரமாவ எவ்ளோ அடிக்கற... இப்பிடி அடிச்சா மாசம் ஒரு 'டின்னு வாங்க வேண்டியது தான்" ஈரத்துணியுடன் வந்த லெட்சுமி வெடுக்கென்று பவுடர் டின்னைப் பிடுங்கிக் கொண்டு வீட்டுக்குள் போனாள். அம்மா வருவதற்குள் போதுமான அளவு பவுடர் அடித்த திருப்தியில் தனம் கால் கட்டை விரலில் சுத்தி வைத்திருந்த சிக்கு முடியை எடுத்து அலட்சியமாக ஊதினாள்.

"நான் சொல்லிட்டே இருக்கிரன் எங்கடி கௌம்பர."

"பக்கத்து வீட்டு அக்காவோட பந்தனூரு சினிமாவுக்குப் போறேன்."

"யாரு படம்?"

"சரத்துகுமாரு, நக்குமா."

"அதான் ஜில்லாப்பா கௌம்பறியா சரி அந்த வாத்தியாரு வூட்டு மாட்டுக்கு கொஞ்சம் வக்கல் புடுங்கி போட்டுட்டு போ."

கேட்ட மாத்திரத்தில் தனத்துக்கு கோபம் கோபமாக வந்தது.

"போம்மா படத்துக்கு நேரமாச்சி நீயே போட்ரு", என்று சிணுங்க ஆரம்பித்தாள். லெட்சுமி விடுவதாயில்லை.

"சனியன நானே அடுப்பு எரியலன்னு மாரடிச்சிட்டு கெடக்கேன்... உன் அப்பன் வேற பசியில ஐயனாருமாரி வருவாரு போய் புடுங்கி போட்டுட்டு போடி." சினிமா உற்சாகத்தின் மேல் வைக்கோல் போர் சரிய சிணுங்கிக் கொண்டே தனம் நகர்ந்தாள்.

வேறு வீடாயிருந்தாலும் தனம் ஏமாற்றி விடுவாள், அந்த பள்ளிக்கூட ஆசிரியர் எந்த வேலை சொன்னாலும் காலனி மக்கள் தட்டமாட்டார்கள். ஆசிரியரின் மனைவியும் ஒரு ஆசிரியர். டீச்சரம்மா கொடுக்கும் மிச்சம் மீதி குழம்பும், வருசம் முழுக்க வாத்தியார் கொடுக்கும் வயல் வேலையும் அவர்களை கட்டாயம் இணங்க வைக்கும். ஓசைப்படாமல் வைக்கோல் பிடுங்கி போட்டுவிட்டு சினிமாவுக்கு ஓடிப்போய் விடலாம் என்று கனவு கண்ட தனத்தை பசுமாடு கத்திக் காட்டிக் கொடுத்துவிட்டது. சத்தம் கேட்டு வெளியே வந்த வாத்தியார், ஏதோ பள்ளிக் கூடத்துக்குத் தாமதமாய் வந்த பிள்ளையைப் பார்ப்பதுபோல் விழிகளை உருட்டிப் பார்த்தார்.

"சினிமாவுக்கு போரேன் சார் அதான்..." என்று வேலிபோரம் ஓணான் கொடியைப் போல் நெளிந்து தலையைச் சொறிந்தாள் தனம்.

"படிக்குற புள்ளைக்கி சினிமாவா" என்று அவரால் கேட்க முடியாது. ஏனென்றால் தனம் பள்ளிக்கூடம் பக்கமே போவதில்லை.

"ஊம் சினிமாவா, மாட்டுக்கு வைக்க போட்டில்ல. உள்ளார டீச்சர் உன்ன தேடினிச்சி கேட்டுப் போ" கூடத்தில் டி.வி. பார்த்துக் கொண்டிருந்த டீச்சரம்மா தனத்தைப் பார்த்தவுடன் உற்சாகத்துடன் எழுந்தாள்.

"ஏன்டி தனம் எங்கேடி போய் தொலஞ்ச? நம்ம மராட்டியத் தெருமூர்த்தி வீடுல்ல அங்க ஒரு கூட தவுடு இருக்கு போய்த் தூக்கியாந்துடு மாடு ரெண்டு நாளா தவிக்குது" என்று தவித்துப் போனாள் டீச்சரம்மா.

"மணி எத்தன டீச்சர்!" என்று அவசரமாய் கேட்டாள் தனம்.

"ஆறாவது, என்னாடி ஆபீசர் மாரி மணியெல்லாம் கேக்குற போ..ப் போ எடுத்துட்டு வா திங்கறதுக்கு பொட்டுக் கல்ல தரேன்."

மணி ஆனாலும் சினிமாவுக்குப் போய் விடலாம் என்ற நம்பிக்கையை இழக்காமல் அவசர அவசரமாக போய் தவிட்டுக் கூடையைத் தலையில் வைத்துக் கொண்டு மூச்சிறைக்க நடையைக் கட்டினாள். வந்த வேகத்தில் தவிடு உடம்பெல்லாம் கொட்டி முகமும் மாரியம்மனுக்குச் சந்தனக் காப்பு போட்ட மாதிரி இருந்தது.

"நல்லாருக்குடி உன் மேக்கப்பு சந்து வழியா வந்து கூடைய வச்சிட்டு வா

www.padippakam.com

பொட்டுக்கடல தரேன்."

"வேணாம் டீச்சர் அப்புறம் வரேன்," பக்கத்து வீட்டு அக்கா கிளம்பிப் போய் இருப்பாளோ என்ற சந்தேகத்தோடு தனம் வீட்டுப் பக்கம் ஓடினாள். உழவு மாடும் செல்லமுத்து மாமாவும் தெருவில் வரு வதைப் பார்த்தால் மணி ஏழாகியிருக்கும் போல் இருந்தது!

"அம்மா மணி ஆச்சா பக்கத்து வீட்டு அக்கா இருக்கா?" படபடப்போடு தனம் கேட்க லெட்சுமிக்கும், அப்பா சின்னைய னுக்கும் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது.

"ஆக்கியெறக்குன கருவாட்டு கொழம்பே அடிவயித்துக்குப் போய் செரிச்சிடுச்சி. சினிமாவுக்கு போற நேரத்தப் பாரு. பக்கத்து வீட்டு அக்கா போயிடிச்சி. போய் தவுட்ட தொடச்சிட்டு சோத்த தின்னு. நல்லாருக்கு மேக்கப்பு."

"எரும... மூஞ்சி எல்லாம் உன்னா லதான் நீயே தின்னு. காலைல மாடு மேய்க்கப் போமாட்டேன் போ. பீரிட்டு வந்த அழுகை முகத்தில் உள்ள தவிடைக் கழுவ தேம்பிக் கொண்டே போய் படுத்துக் கொண்டாள் தனம்.

• ∘ •

கழுத்துமணி தெறிக்க வரப்பில் ஓடி வந்த ரேவதியைப் பார்த்தவுடன் லெட்சு மிக்கு சொற சொறப்புக் கூடியது.

"ஏண்டி பேய் கணக்கா ஓடியார பார்த்துடி."

"யெக்கா! பாம்புக் கடிச்சி தனம் நொற நொறயா தள்ளுது. ஓடியாக்கா."

தூத்திக் கொண்டிருந்த முறத்தை அப்ப டியே போட்டுவிட்டு என்ன பேசுகிறோம் என்று தெரியாமல் லெட்சுமி நெஞ்சில டித்துக் கொண்டு புலம்ப ஆரம்பித்து விட்டாள்.

"யே! தனம் சொல்லிக்காம கொ[illegible]லிக் காம போய்டாதடி." அழுகையும் குரலும் வேகமாக கிளம்ப, ரேவதி முன்னே ஓட கரும்புக் கொல்லை பக்கம் ஓடினாள் லெட்சுமி. போற வேகத்திலேயே ஆற்றுக்குள் மண்ணள்ளிக் கொண்டிருந்த ராசப்பாவிடம், "யே ராசப்பா! தனத்த பாம்பு கடிச்சிடிச்சாம். உன் மாமன் சின்னையன் வாத்தியார் வீட்டு அறுப்புல இருக்காரு. கூட்டிட்டு பந்தனூருவா" கால் நிற்காமல் ஓடியவள் தனத்தை வாரி தோளில் போட்டுக் கொண்டு லயன் கரை வழியாகவே பந்தநல்லூர் ஆசுபத்திரிக்கு ஓடினாள். ஊசி போட்டு பேச்சு மூச்சில் லாமல் கிடந்த மகளைப் பார்த்து முந்தானைத் தலைப்பை வாயில் வைத்த படி விம்ம ஆரம்பித்தாள்.

"கரும்பு கொல்லப்பக்கம் போகா தேன்னு சொன்னேன் பாவி கேட்டாளா என்ன பாம்பு கடிச்சுதோ எமன் வந்து அழைச்சுதோ! யேண்டி ரேவதி என்ன பாம்புன்னு உனக்காவது தெரியுமா."

நடுங்கிய கால்களுடன், "தெரியா துக்கா கரும்பு ஒடிக்கப் போன தனம் வீல்னு கத்துனதுதான் தெரியும். ஓலைக் குள்ள சரசரன்னு சத்தம் மட்டும் கேட்டுது."

"பாலும் முட்டையும் உன் பங்குக்கு வைக்கிறேன். நாகம்மா என் வூட்டு செல்வத்த எங்கிட்ட தந்துடு" தலையில் அடித்தபடி புலம்ப ஆரம்பித்து விட்டாள் லெட்சுமி.

"தே சத்தம் போடாதே டாக்டரு வர்ராறு." சின்னையன் கலங்கிய முகத் துடன் அழுகையை அடக்கினான். ஆஸ்பத்தரிக்கு முன் தெரு சனமே கூடி விட்டது.

> • ∘ •
>
> வாத்தியார் வீட்டுக்கு ஒரு வேலையென்றால் சோறு தின்பதை கூட போட்டுவிட்டு அப்படியே வந்து விடுவாள் தனம். அவளுடைய இழப்பு ஆசிரியரை வெகுவாக பாதித்திருக்கும் என எதிர்பார்த்தான்.
>
> • ∘ •

"இன்னும் ஒரு மணி நேரத்துல கண்ணு தொறந்திடும். பயப்படறதுக்கு ஒன்னுமில்ல. வீட்டுக்கு தூக்கிட்டு போங்க." டாக்டர் சொல்லிக் கொண்டிருக் கும்போதே தனத்தின் கால் அசைய லெட்சு மிக்கும் சின்னையனுக்கும் போன உயிர் திரும்பி வந்தது.

"நீ ராசப்பனோட வண்டியில புள்ளைய போட்டு சனங்களோட வீட்டுக்கு போ. வாத்தியார் வூட்டு அறுப்ப அப்படியே விட்டுட்டு வந்தேன். போய் சொல்லிட்டு காசு வாங்கிட்டு வாரேன்."

சின்னையன் சொல்லி முடிப்பதற்குள், "வாத்தியாருக்கு தெரியுமா. திடுக்குனு ஆயிருக்குமே. பொழுதனைக்கும் அவரு கூப்புட்ட கொரலுக்கு ஓடுவா. வர்ரேனு இருப்பாரே நல்ல மனுசன் அவருக்கு அறுப்பு நேரத்துலயா இப்படி வரனும்."

பேசிக் கொண்டே வள்ளியிடம் வாங்கிக் கொண்டு வந்த மூக்குத்தியின் திருகாணியைக் கழட்டி ராசப்பனின் கையில் திணித்தாள்.

மசை இல்லாமல் கடையாணிகள் கூக்குர லிட மாட்டு வண்டி அசைந்தது.

• ∘ •

கோடை விடுமுறையில் சென்னையி லிருந்து ஊருக்குப் போயிருந்த இராமு தெருப்பக்கம் தனத்தை எதிர்பார்த்து ஏமாந்து போனான்.

"என்ன சின்னம்மா இந்த தனத்தையே காணும்."

"அதை யேம்ப்பா கேக்குற பாம்பு கடிச்சி செத்துப்போயிட்டா." கேட்டவுடன் இராமு அதிர்ச்சியானான். மேற்கொண்டு பேச்சு வரவில்லை. குடியானவ தெருக்கா ரர்கள் கூப்பிடும் குரலுக்கு ஓடிவந்து யார் வீட்டுக்கு விருந்தாளி வந்தாலும் டீ வாங்கி வர ஒரு நாளைக்கு ஆயிரம் தடவை புவி யீர்ப்பு விசையே தேயும் அளவிற்கு தெருவில் அலையும் தனத்தைக் காப்பாற்ற யாருமே இல்லையா? கண்கள் தாழ்ந்து சோகத்தில் உறைந்து போனான்.

"பொழுதனைக்கும் அந்த வாத்தியார் வீட்டுலதாம்பா கெடப்பா. அந்த டீச்சரம்மா வுக்கும் அவருக்கும் அவ இல்லன்னா வேலையே நடக்காது. அவங்களும் சொல்லிட்டு ரொம்ப வருத்தப்பட்டாங்க."

சின்னம்மா சொன்ன செய்தியை ஜீர ணிக்க முடியாமல் மீண்டும் தெருப்பக்கம் போனான். எதிரே காலனியைச் சேர்ந்த வள்ளி விசாரிக்க ஆரம்பித்தாள்.

"நல்லாருக்கீங்களா தம்பி எப்ப வந்தீங்க?"

"காலைலதான் வந்தேன். கேள்வி பட்டேன் தனம் பாம்பு கடிச்சி செத்துப் போயிருச்சாம்ல. இத்தன பேரு இருந்துமா காப்பாத்த முடியல."

பேசிக் கொண்டிருக்கும்போதே சித்ராவும், காவேரியும் பக்கத்தில் வந்து வருத்தத்தைப் பகிர்ந்து கொண்டார்கள். "பாம்பு கடிச்ச உடனேயே நம்ப பந்த நல்லூர் விஜய் டாக்டர்கிட்ட தூக்கிட்டு போயிட்டோம். அவரும் ரெண்டு ஊசி போட்டாரு. வீட்டுக்கு வந்தும் நாலு நாளு புள்ள நல்லாதான் இருந்தா. அப்புறம் திடீர்னு வெசாலக்கெழம ராத்திரி வாந்தி யெடுத்து, சோறு தள்ள ஆரம்பிச்சிடிச்சி." சொல்லிக் கொண்டே சித்ராவுக்கு கண் கலங்கியது.

"அதயேங் கேக்குறீங்க தம்பி. ராவோட ராவா கும்போணம் பெரியாசுபத் திரிக்கு தூக்கிட்டு போனோம். அங்கேயும் ஒரு நாளு தெளுவு குடுத்திச்சி. அடுத்த நாளே அவள பார்க்கனுமே பாம்பு மாதிரி உஸ்... உஸ்னு கத்திக்கிட்டு முகமெல்லாம் மாறி வளைஞ்சா பாருங்க செத்தா தேவ லாம்னு ஆயிடுச்சி. தலவிதி எமன் வந்து கூட்டிட்டு போயிட்டான்."

பொழுது சாயந்துவிட தனம் அதிக மாகவேலை செய்யும் ஆசிரியர் வீட்டுக்கு


படிப்பகம்

www.padippakam.com

போய் அவரையும் விசாரித்துவிட்டு தனம் செத்தது பற்றிய ஆற்றாமையை அவரிடம் பகிர்ந்து கொள்ள விருப்பப்பட்டு வாத்தியார் வீட்டுக்குள் நுழைந்தான் ராமு.

மாட்டு லோன் வாங்குவதிலிருந்து தெரு கோவில் திருவிழா நடத்துவது வரை ஆசிரியரைக் கேட்காமல் ஊரில் எதுவுமே நடக்காது. அதுவும் வாத்தியார் வீட்டுக்கு ஒரு வேலையென்றால் சோறு தின்பதைக் கூட போட்டுவிட்டு அப்படியே வந்து விடுவாள் தனம். அவளுடைய இழப்பு ஆசிரியரை வெகுவாகப் பாதித்திருக்கும் என எதிர்பார்த்தான். அறைப்பக்கம் போன இராமுவைப் பார்த்துவிட்டு டீச்சரம்மா கொல்லைப் பக்கத்திலிருந்து ஓடி வந்தாள்.

''வாங்க தம்பி. வயல்ல அறுப்பு நடக்குது. கொஞ்சம் அசந்தாலும் வேலை செய்கிற ஆளுங்க அரை அரை மூட்டையா அடிச்சிட்டு போய்டுவானுங்க. அதான் பொழுதன்னைக்கும் வயல்ல நின்னுட்டு இப்பதான் வந்து குளிச்சாரு.'' இராமுவைப் பார்த்த ஆசிரியர் ''அந்த தனத்த கூப்பிடு! தம்பிக்கு டீ வாங்கிட்டு வரட்டும்'', என்று வாயெடுத்தவர், ''அட நான் ஒன்னு அந்த புள்ளதான் நேத்து செத்து போச்சி. பழக்கம் விடுதா பாருங்க....'' என்றார் சிரித்துக் கொண்டு.

''என்ன சார் இந்த காலத்துல பாம்பு கடிச்சி சாகரது ரொம்ப ரேரச்சே. இவ்வளோ மருத்துவ வசதி இருந்தும், எப்படி தனம் செத்துச்சி.''

''நீங்க வேற தம்பி. அவனுங்க எல்லாம் காட்டுபசங்க. பாம்பு கடிச்சா நேரா திருப்பனந்தாள் ஜி.எச். கொண்டு போனா நல்ல இன்ஜெக்சன் இருக்கு. என்ன ஒரு 250 ரூவா கேப்பான். இந்த பசங்க அதுக்கு பயந்துக்கிட்டு பந்தநல்லூருல சகாயமா ஊசி போடுற பய ஒருத்தன் இருக்கான்னு அவங்கிட்ட போயி சாகடிச்சிட்டானுவ. இந்த பொண்ணு இல்லாம நமக்கும் கஷ்டமாயிருக்கு.''

''நால நாள் போராடி சாகுற அளவுக்கு அப்படியென்ன பாம்பு கடிச்சது?'' ராமு ஆசிரியரிடம் கேட்க வாசல்பக்கம் வைக்கோல் கூட்டிக் கொண்டிருந்த முத்தம்மாள் ஆர்வம் தாளாமல் கிட்டே வந்து ''பொழுது போச்சி தம்பி பேர் சொல்லக் கூடாது'', என்று கூறிவிட்டு, ஆசிரியருக்கு முன்னே மேற்கொண்டு பேச கூடாதென்று சந்து பக்கம் போனாள், ராமுவுக்கு மனசு ஆறவில்லை.

''அவுங்களுக்குத்தான் அந்த அளவுக்கு படிப்பு விவரம் இல்ல. நீங்களாவது என்ன ஏதுன்னு விவரம் சொல்லி காப்பாத்தியிருக்கலாமே சார். அதுவும் நீங்க சொன்னா அப்படியே கேட்பாங்களே சார்.''

''தம்பி'' என்று நெருக்கமாக வந்தவர் தாழ்ந்த குரலில் ''இவனுககிட்ட ஐடியா சொன்னோம்னு வச்சுக்குங்க, டாக்டர் கிட்ட பேசத் தெரியாது வைக்கத் தெரியாதுன்னு உடனே நம்மளையும் கூட கூப்பிடுவானுக. நம்ம வேலைய விட்டுட்டு இவனுக பின்னாடி அலைய முடியுமா? நம்ம கவர்மெண்டு ஸ்டாப்பு. கெடச்ச லீவுல நம்ம வேலைய பார்குறதா. அவனுக பின்னாடி அலையுறதா. அதுக்குத்தான் பேசாம கெடக்கறது.'' எதிரே பாம்பைக் கண்டது போல் திடுக்கிட்டுப் போனான் ராமு.

• துரை சண்முகம்



# கைகள்

''டேய் இங்கே வாடா''

ரோந்து வண்டியில் சாய்ந்து கொண்டிருந்த போலீசின் அதட்டலைக் கேட்டு அடிவயிறு கலக்க கிட்டே போனான் அவன்.

''எங்கடா இந்த நேரத்துல?''

''நான் கிளீனருங்க. வேலை முடிஞ்சி வீட்டுக்குப் போறேன்''

''மூஞ்சப் பார்த்தா அக்கியூஸ்டு மாரி இருக்கு'' இன்னொரு போலீசும் சேர்ந்து கொள்ள பதறிப் போனான் அவன்.

''இல்ல சார், டி.வி. எஸ்சுக்கு வாடகைக்கு ஓடுற வேன்லதான் இருக்கேன். வேணும்னா இந்த நெம்பருக்கு போன் பண்ணுங்க சார்'' பல சார்கள் போட்டு கெஞ்சினான்.

''பெரிய ஆபீசரு! பொறம்போக்கு நாயே உனக்கு போன் வரைக்கும் கேக்குதா பின்னாடி ஏர்றா'' வழிநெடுக விட்டுவிடும்படி கெஞ்சிப் பார்த்தான். அறை விழுந்ததுதான் மிச்சம்.

நள்ளிரவு நேரம் காவல் நிலையத்தில் கால் வைத்ததுமே வாழ்க்கையின் இறுதிக் கட்டத்துக்கு வந்தது போல பயந்தபடி நின்றவனை எஸ்.ஐ.-இன் பளார் என்ற அறை வரவேற்றது.

''நான் ஒன்னும் தப்பு பன்னல சார்'' வெளியே வந்த கண்ணீரும் இமைகளுக்குள்ளேயே பயந்து நடுங்கியது.

''என்னடா மூஞ்சியில அறுப்பு, ரௌடியா?'' பேச பயந்தவன் தயங்கித் தயங்கி ''சின்ன வயசுலேர்ந்து இந்த காயம் இருக்கு சார்'' என்றான்.

''பொறந்தப்பவே பொறம்போக்கு தானா நீ?'' வார்த்தைகளின் வலியைத் தாங்க முடியாமல் துடித்துக் கொண்டிருந்தான்.

''எங்கே ரெண்டு கையையும் காட்டு'' எஸ்.ஐ. அதட்டலாக கேட்க பணிவோடு ரெண்டு கையையும் விரித்துக் காட்டினான்.

''பயங்கரமா காப்பு காய்ச்சிருக்கு சார் செவுரு ஏறி குதிக்கிற பய போலருக்கு'' தனது ஆராய்ச்சியை வெளியிட்டான் ஒரு ஏட்டு.

''போலீ ஏட்டு பயல அழைச்சிட்டு போயி அந்த வாட்டர் டேங்க கழுவ வுடு, அப்படியே கக்கூசையும் தான்யா...'' தனக்கென எந்த உணர்ச்சியும் இல்லாதவனாய் அவன் மரத்துப் போனான்.

''கக்கூஸ் கழுவகூட இந்த நாய் லாயக்கில்ல'' வேலை வாங்கிக் கொண்டு திரும்ப வந்த ஏட்டு எஸ்.ஐ.-யை தூண்டிவிட்டான்.

''என்னடா முழிக்கிற போய் அந்த ஜீப்ப தொட'' வேறு எதுவும் சொல்ல வழி இல்லாதவனாய் கட்டளைக்குப் பணிந்தான்.

ஜீப் கண்ணாடியில் தெரிந்த அவனது முகம் ஒரு அந்நியனைப் போல, அவனுக்கே அவன் மேல் பரிதாபம் பிறந்தது. பனியனோடு சேரில் சாய்ந்து கொண்டிருந்த எஸ்.ஐ. எந்தச் சலனமும் இன்றி ஏட்டுகளிடம் இதைபேச ஆரம்பித்தார்.

''அந்த கன்ஸ்ட்ரக்சன் கம்பெனிக்காரன் கல்யாணத்துக்கு வந்த மினிஸ்டர், கையை இறுக்கி புடிச்சிகிட்டாருய்யா. சும்மா வெட்கப்படாத வான்னு பக்கத்துல உட்கார்ந்து சாப்புட இழுத்தார் பாரு... மனுசனுக்கு இன்னா வயசாவுது பூ மாதிரி இருக்குய்யா அவரு கையி'' பேச்சுக்குரல் காதில் விழ ஜீப்பைத் துடைத்துக் கொண்டிருந்தவன் ஆத்திரமும் இயலாமையும் மேலிட தனது கைகளை விரித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

• சுடர்விழி


படிப்பகம்

www.padippakam.com

தான் கடவுளின் அவதாரம் என்றும் தன்னிடம் இயற்கையிலேயே ஏதோ அதீத சக்தி இருப்பதாகவும் கூறிக் கொள்ளும் ஒருவன் அதை நிரூபிக்க, கொதிக்கும் எண்ணெயில் விரல் விட்டுக் காட்டு கிறேன் என்று சவால் விடுகிறான். நமக்கு இதில் நம்பிக்கை இல்லாவிட்டாலும் கொதிக்கும் எண்ணெயில் அந்த மனிதன் கையை வைத்துக் காட்டும் போது திண றித்தான் போகிறோம். இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது என்று சந்தேகித்தால் கூட அது என்ன என்று விளக்க முடிவதில்லை.

விடை தெரியாத கேள்விகள் தோற்று விக்கும் இடுக்குகளிலெல்லாம் மூட்டைப் பூச்சியைப் போலப் புகுந்து கொள்கிறார் கடவுள். கடவுள் ஒளிய இடமில்லாமல் செய்ய வேண்டுமெனில் இத்தகைய இடுக் குகளை அடைக்க வேண்டியிருக்கிறது. கோழிக் கோட்டை சேர்ந்த பி. பிரேமா னந்து இத்தகைய அற்புதச் செயல்களை வெறும் ஏமாற்று வித்தைதான் என்று எளி மையாகப் போட்டு உடைக்கிறார்.

"பெரிய பாத்திரத்தில் சமையல் எண்ணெயை ஊற்றி யாருக்கும் தெரி யாமல் எண்ணெய்க்குள் எலுமிச்சை சாற்றைப் பிழிந்து அடுப்பின் மீது வைக்கவும். எண்ணெய் சூடாகி கொதிக்கும் முன் அடியில் தங்கியுள்ள எலு மிச்சை சாறு கொதித்து அதன் நீராவி எண்ணெய் வழியாக குமிழியிட்டு மேலே வருவது எண்ணெயே கொதிப்பது போலி ருக்கும். இப்போது உங்கள் கையை முக்கி யெடுங்கள். எண்ணெய் வெதுவெதுப்பாக இருக்குமே தவிர கொதிக்காது. ஆனால் பார்ப்பவர்களுக்கு அது கொதிப்பதைப் போலத் தெரியும்."

பிரேமானந்துவின் இந்த விளக்கத் துக்குப் பிறகுதான் நாம் எவ்வளவு மோசமாய் ஏமாற்றப்பட்டிருக்கிறோம் என்று தெரிந்து கொள்கிறோம்.

இதுபோலவே கசையடி, உடலைக் கத்தியால் வெட்டி கீறிக் கொள்வது, வாள்கள் மேல் நிற்றல், மூக்குத் துளைகள் வழியாக ஆணிகளைச் செருகி அடித்து இறக்கி மண்டையைத் துளைத்தல், உயி ரோடு புதைத்தல், முதுகில் செருகிய கொக்கியிலிருந்து தொங்குதல், உடலில் நெருப்பு பற்ற வைத்தல், அலகு குத்துதல் போன்ற அதிதீவிர நடவடிக்கைகளிலி ருந்து தடியைப் பாம்பாக மாற்றுவது, விரல் நுனியிலிருந்து விபூதி வரவழைப்பது, அந்தரத்தில் மிதப்பது, நீரை திராட்சை ரச மாக மாற்றுவது, மூக்கில் ஒரு பக்கம் நூலை செலுத்தி மறுபக்கம் வரவழைப்பது போன்ற நூற்றைம்பது அருஞ்செயல்களை வெறும் வித்தைகள்தான் என்று விளக்கு கிறார் பிரேமானந்து.

# நூல் அறிமுகம்




அறிவியலா? அருஞ்செயலா? என்ற நூலை எழுதி வெளியிட்டிருக்கும் பிரேமா னந்து, இலங்கையைச் சேர்ந்த பகுத்தறிவு பேராசிரியர் ஏ.ட்டி. கோவூரின் வழியில் ஆவிகள், கடவுள்களின் அற்புத செயல் களை அம்பலப்படுத்தி அறிவியல் பிரச்சா ரத்தை மேற்கொண்டுள்ளார்.

சாமியார் என்றாலே போலிதான். ஆசாரியாக்கள், முகர்ஜிக்கள், ஆனந் தாக்கள், மூன்கள், பாபாக்கள் என்று எல்லா விதமான அவதாரங்களும் சாதாரண மக்களை ஏய்த்துப் பிழைப்பதிலிருந்து சர்வதேச ஆயுதக் கடத்தல் வரை செய்கின் றனர். அதற்கு பின்னணியில் இருப்பவை இந்த 'அருஞ்செயல்'கள்தான்.

அற்புத சக்தி வாய்ந்தவர்தான் கடவுள் என்றால் அவர் ஏன் தன்னை ஒரு சாதாரண மனிதன் மூலம் வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும்? கடவுளுக்கு பிச்சை எடுப்ப துதான் வேலையா? விபூதியை வரவழைப் பது, லிங்கம் கக்குவது போன்ற ஒளித்து வைத்துக் கொள்ளும் வசதியுடைய பொருட்களை மட்டுமே இவர்கள் ஏன் உரு வாக்குகின்றனர்? ஏன் ஒரு இரயிலையோ, பேருந்தையோ உருவாக்க முடிய வில்லை? தண்ணீரைத் தொட்டால் பெட்ரோலியமாக மாறுகிறது என்று பீற்றிக் கொள்ளும் பாபாக்கள் இதுவரை ஒரு குண்டூசியைக் கூட சொந்தமாய்க் கண்டுபி டிக்கவில்லையே, ஏன்?

சூனியத்திலிருந்து ஒரு பொருளை உருவாக்க முடியுமா? 'உருவாக்கம்' என்பதே ஏற்கனவே உள்ள பொருட் களைக் கொண்டு ஆக்கப்படுவதுதானே! அப்படியென்றால் உலகத்தைப் படைத்த தாகச் சொல்லப்படும் 'கடவுள்' என்பது என்ன? வெறும் கருத்துதானே, என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்தியப் பொருள் முதல்வாதிகள் எழுப் பிய கேள்வியை எளிய தர்க்கவியல் முறை யில் எழுப்புகிறார் பிரேமானந்து.

உண்மைகள் எப்படி இருந்த போதிலும், இச்சாமியார்களுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு இருக்கத்தானே செய்கிறது. ஒரு சாமியார் 'போலி' என்று அம்பலப்பட்டுச் சிறைக்குப் போனாலும் அடுத்த 'அவதாரம்' கேள்விக்கு இடமின்றி உருவாகிறதே எப்படி?

இதற்குப் பல காரணங்கள் இருந்த போதும், அடிப்படையில் மக்களிடையே அறிவியல் தொழில் நுட்பம் வளர்ந்து விட்ட அளவிற்கு அறிவியல் மனப் பான்மை வளரவில்லை என்பதுதான் முக்கியமானது.

மாபெரும் 'கணினிப் புரட்சியாளர்கள்' கூட ராகு, கேதுவிடம் பணிந்து விடுகின் றனர்.

ஏற்கனவே உள்ள கல்வி திட்டங்களின் ஒப்புவிக்கும் அணுகுமுறை மக்களை அறி வியல் மனப்பான்மைக்கு வளர்த்தெடுக்க வில்லை. போதாதற்கு பாரதீய ஜனதா ஆட்சிக்கு வந்த பிறகு புராண இதிகா சங்களே பாடத் திட்டங்களாக மாறுகின் றன. பல்கலைக் கழகங்களில் சோதிடம் பயற்றுவிக்கப்படவுள்ளது. இனி படித்து விட்டு வரப்போகும் 'பட்டதாரி புளு கர்கள்' இம்மூடத்தனங்களை எதிர்ப் பார்கள் என்று எதிர்பார்ப்பதே மூடத்த னம்தான். வேண்டுமானால், 'அருஞ் செயல்களை' அறிவியலின் துணை கொண்டு மேலும் நவீனப்படுத்தலாம்.

இச்சூழலில், இவர்களிடமிருந்து மட்டு மல்ல; கடவுள், மதம் போன்ற மாயைகளி லிருந்தும் மக்களை விழிப்படையச் செய்ய விரும்புபவர்கள் இந்நூலை ஒரு ஆயுதமாக உபயோகிக்கலாம். இந்நூல் அதற்கான வாய்ப்பை வழங்குகிறது.

***வெளியிட்டோர்:***

**சூலூர் வெளியீடு,**
**8, பால இல்லம்,**
**நஞ்சப்பா குடியமைப்பு, சூலூர்,**
**கோவை - 641 402.**

***கிடைக்குமிடம்:***

**கீழைக்காற்று, சென்னை - 600 002.**
**தொலைபேசி: 8412367.**


படிப்பகம்

www.padippakam.com

# மூடநம்பிக்கை

கடுமையான குளுசத்தில சாவு
அவட்ட வரும்.
வெளக்கேத்தி
தண்ணி தம்ளர் வைங்க.

கறிசாப்பாடு கொண்டு போறியா
இரும்புத் துண்டோ ஆணியோ
பாக்கெட்ல போட்டுக்கோ.
கவிச்சு தேடி அலையிற
பிசாசுங்க
அண்டாம இருக்கட்டும்.

மாசமாருக்கும்போது
மம்மல்ல
ஆருதாயி வரச்சொன்னா...
இந்தா
ரெண்டு வேப்பில கொத்த
சொருவிக்கோ தலயில —
காத்து கருப்பு மெரண்டு ஓடும்.

எதுக்கும் வூட்டுவாசல்ல
செருப்பு வெளக்கமாத்த
கட்டி தொங்க வுடுங்கப்பா.
பேய்ங்க சேட்டைதாங்கல
ஆவி அலயிறதா
குடுகுடுப்பக்காரன்
சொல்லியிருக்கான்.

......................

......................

பொய்யிலும் புரட்டிலும் பிறக்கும்
பேய்க்கும் பிசாசுக்கும்
உஷாராயிருக்கிற ஜனங்கள்

வாய்பிளந்து கேட்கிறார்கள்
'அன்பான வாக்காளப்
பெருங்குடி மக்களே'
எனும்போது மட்டும்.

• பட்டிக்காட்டான்



# விடுபட்ட செய்திகள்

சும்மா சொல்லக்கூடாது
அம்மா ரொம்பவே மாறிவிட்டார்.

முன்பு
அதிகாரிகள் மீது ஆசிட் ஊற்றி
அரசு நிலத்தை வாங்கினார்

இப்போது அப்படியில்லை
ஆளுநரை அரவணைத்து
அரசாங்கத்தை வாங்கிவிட்டார்.

ஆடம்பர விளம்பரங்கள்
அறவே கூடாதென்று
இந்த முறை
எளிமையாக ஆட்சி நடத்த
விரும்புகிறார் அம்மா

வேண்டுமானால் வீதியைப் பாருங்கள்.
'விளம்பரப் பலகைக்கான
தடையை நீக்கிய
வெற்றித் திருமகளே'
என்னும்
தனியார் முதலாளிகளின்
விளம்பரத்தைக் கூட
வானத்தில் இடிக்காத
அளவுக்குத்தான்
அனுமதித்திருக்கிறார் அம்மா.

சும்மா சொல்லக் கூடாது
அம்மா ரொம்பவே மாறிவிட்டார்.

கன்னி மேரியென்றும்,
கடவுளென்றும்
இந்த முறை
யாராவது எழுதிவைத்தால்
சும்மா இருக்கமாட்டார் அம்மா.

பாருங்கள்
வெறியோடு கன்னத்தில்
போட்டுக் கொண்டு
அம்மாவின் பார்வை
அலகு குத்திவிழுந்த
எம்.எல்.ஏ.க்களை
அமைச்சர்களாக்கி
தண்டித்து விட்டார்.

பலஜோடி செருப்புகளின்
ஆடம்பரங்களைக் கூட
இனி பார்க்க முடியாது.
போயசு தோட்டத்தில்
அடியோடு மாறிவிட்டார் அம்மா,

போய்ப் பாருங்கள்,
செருப்புகள் இருந்த இடத்தில்
கூட்டணிக் கட்சிகள்.
பட்டுப் புடவைகள் புரண்ட பாதத்தில்
தொட்டுக் கும்பிடும்
அடித்தட்டு அமைச்சர்கள்.



சும்மா சொல்லக் கூடாது
அம்மா ரொம்பவே மாறிவிட்டார்.

என்னென்ன துறையில்
என்னென்ன முறைகேடு என
எதுவுமே தனக்குத் தெரியாதென
தனி நீதிமன்றம் வரை வந்து
அம்மா இனி தடுமாறமாட்டார்.

கடந்தகால அரசியல் அனுபவத்தால்
பக்குவப்பட்டு விட்டார் அம்மா
பாருங்கள் அரியணை ஏறிய
அடுத்த நொடியே
கம்பீரமாக அறிவித்து விட்டார் —
'கஜானா காலி'.

அம்மா மாறுவதற்காவது
அய்ந்தாண்டுகள் ஆயிற்று.
சும்மா சொல்லக் கூடாது
பத்திரிகைகள் ஒரே நாளில்
மாறிவிட்டார்களே!

• துரை சண்முகம்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

படிப்பகம்

PUTHIYA KALACHARAM
(TAMIL MONTHLY)
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPERS
FOR INDIA UNDER NO. 42647/87
Regd. No. TN/Chief PMG-303 / 2001
www.padippakam.com





## தொடர்கிறது.... அமெரிக்காவின் உலக மேலாதிக்கத்திற்கெதிரான போர்!

அமெரிக்க நாடுகளுக்கிடையேயான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (Free Trade Agreement of the Americas) என்ற பெயரில் கனடா முதல் சிலி வரையிலான 34 நாடுகளை தனது கட்டுப்பாட்டில் கொண்டுவர அமெரிக்கா போடும் திட்டத்திற்கு எதிரான போராட்டம் இது.

கடந்த ஏப்ரல் 20 முதல் 22 வரை கனடாவின் கியூபெக் நகரில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

கண்ணீர் புகை, ரப்பர் குண்டுகள், தண்ணீர் பீரங்கிகள், துப்பாக்கி ஏந்திய போலிசார் என அனைவரது தாக்குதலையும் எதிர்கொண்டனர் மக்கள். ரத்தம் சொட்டச்சொட்ட தாக்கப்பட்ட போதும், அமெரிக்க மேலாதிக்கம் ஒழிக! சுதந்திர வர்த்தகம் ஒழிக! முதலாளித்துவம் ஒழிக! வர்க்கப்போர்..... வர்க்கப்போர்....! என முழங்கினர் ஆர்ப்பாட்டக்காரர்கள்.










படிப்பகம்